உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம். 4073

# கஞ்சகிரி சித்தேசர் சதகம்.

இது

சேலஞ்ஜில்லா சேலந் தாலூக்காவைச் சேர்ந்த

பெருமாக்கவுண்டன்பட்டி

ப்ரம்மஸ்ரீ

தருமராஜசர்ம்மா அவர்கள் குமாரர்

**சேலம்-அநந்தநாராயணசர்ம்மா அவர்களால்**

இயற்றப்பட்டு,

சேலம் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமத் - சரவணப்பிள்ளையவர்களால்

பரிசோதிக்கப்பட்டு,

சென்னப்பட்டணம்

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1902

விலை அணா 2.

MAHAMAHOPADHYAYA

MAHAMAHOPADH…
… V. SWAMINATHAIYAR …
… ANMIYUR, MA…
(87457)

உ

# சிறப்புப்பாயிரம்.

சேலம் காலேஜ் தமிழ்ப்பண்டித

ஸ்ரீமத் சரவணப்பிள்ளையவர்க ளியற்றிய

திரிபு விருத்தம்

மஞ்சமலை யுறக்குழுமி மஞ்சனமாட் டுதல்கடுப்ப
மணிநீர் வார்க்குங்
கஞ்சமலைக் காந்தநதிக் கரையமருஞ் சித்தேசர்
கமல பாதம்
நெஞ்சமலை வறப்பதித்துத் தகுபொருள்சேர் சதகமொன்று
நிகழ்த்தி னானால்
வஞ்சமலை யாவநந்த நாரணப்பேர் வரகவியா
மறையோன் றானே.

கனியுதிருஞ் சோலைசெறி கஞ்சமலைச் சித்தேசர்
கமலத் தாண்மீ
தினியசுவை தருநீதிச் சதகமுவந் தெழுதியன்ப
ரெவர்க்கு மீய்ந்தான்
புனிதமிகு மெசுர்வேத குலதிலகன் புலவோர்கள்
புகழு நேயன்
மனிதர்களி லிசைமருவு மநந்தநா ரணப்பெயர்கொண்
மறையோன் றானே.

மசூலி பட்டணத்திலிருக்கும் ஹிண்டு ஹைஸ்கூலில்
பிரதம சகாய உபாத்தியாயராகிய ம-ா-ா-ஸ்ரீ
முத்துவையரவர்கள் B. A. இயற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

---

அஞ்சமறி வரியபரன் முடிகடுப்ப வம்புலியு
மரவுஞ் சேர்த்த
கஞ்சமலைத் தலத்துறையுஞ் சித்தேசக் கடவுளிணைக்
கமலத் தாட்கு
நெஞ்சமலி யன்பினொடு நிலவுபுகழ நந்தநா
ரணவே ணீட்டுஞ்
செஞ்சொன்மலி யொருமாலைக் கெதிர்மாலை யிரும்புவியிற்
றெரிந்தி லேமால். (1)

மின்னொக்குஞ் சிறுவாழ்வை மிளிர்விக்குங் கருத்தினனாய்
விரிந்த கேள்வித்
தன்னொக்கும் பெரும்புலவ னநந்தநா ரணன்புகலுந்
தமிழ்ப்பா மாலை
என்னொக்குங் கடலமுதை யினிப்பொக்கு மருமையினா
லிலங்குந் தூய
பொன்னொக்கும் பொன்பதித்த மணியொக்கு மணிதிகழும்
பொலிவா லன்றே. (2)

வல்லோர்க்குந் தெரிவரிய கலைக்கடலின் மதியென்னு
மலையை நாட்டிச்
சொல்லேற்கும் பெருமுயர்வாற் கடைந்தெடுத்த வமுதமெனுந்
தூய நூலை

எல்லோர்க்கும் பவப்பிணியி னிருந்துயரந் தவிர்த்திடுமா
விரங்கி யீந்தான்
நல்லோர்க்குண் முதன்மைபெறு மநந்தநா ரணனென்று
நாவலோனே. (3)

விண்முழுதும் விளங்குறுமோ ராடியினுண் மேவுவித்து
விளக்கல் போல
எண்முழுதுங் கொளக்கிடந்த பலகலையுந் திரட்டியநூ
றியற்பா லுள்ளே
கண்முழுது மிழந்தோர்க்கும் பார்வைதரும் பெறலரிய
கருமை போல
பண்முதிர்ந்த நாவலனல் லநந்தநா ரணப்புனிதன்
பகர்ந்தான் மன்னோ. (4)

---

பூந்துறை மகாவித்வான் மகா-ள-ள-ஸ்ரீ காளியப்பப்
புலவர் குமாரர் மகா-ள-ள-ஸ்ரீ சுந்தரம் பிள்ளை
யவர்கள் மாணாக்கரு ளொருவராகிய மகா-ள-ள-ஸ்ரீ
வாங்கல்-ஐயாசாமி முதலியாரவர்க ளியற்றிய

இரட்டை யாசிரிய விருத்தம்.

---

தடமருவு குமரேச னுபயசர ணம்புயந் தனையனு
தினம்ப ரவுவோன்
சாதுஜன சங்கப்ர சங்கத் துகந்துசெந் தமிழ்வாண
ருக்கு ரியவன்
சங்கீத ஸாகித்ய வித்வஜன நேசன்
சரோருக மடந்தை வாசன்

நிலைமையொடு பெருமையம் புரிதனிற் பரிவுடன்
சஞ்சரிக் கின்றநிபுணன்
படவரவு புனைவிமல ரடிபுகழு மெஜமானர்வேத பாரக
குலத்து தித்தோன்
பவுரோகி தன்றரும ராஜமறை யோன்பெற்ற பண்புளா
குமார சீலன்
பைந்தமி ழுகந்துரை யநந்தநா ராயணன் பதுமவதி
மேவு ஞான
பக்தியொடு கஞ்சகிரி சித்தேசர் மீதினிற் பாமாரி
பொழியு மேகம்
சுடருலவு கடலுலகி றமிழ்வாரி திக்குட் சுமங்கல
வெழுத்தெ டுத்துச்
சுகந்தரு சுரஞ்சித மிகுந்தமது ரந்தருஞ் சொற்கண்
மருவப்பு னைந்தே
சுவைதயெனுஞ் சதகமிதை யிதயங் களிக்கவே நூயவர்
தமக்க ளித்தான்
சுபகர தயாரஸ சரஸ்வதி விலாசச் சொரூபலா
வண்ய துல்யன்
இடபமிசை வருபரம சிவகுமர னருளினு லெல்லோர்
களுஞ்ச ரியென
இயல்பான சமயோசி தத்தினுக் குறுகவி யியற்றியிந்
நூலில் வைத்தான்
இணையிலா வரமுதவு காங்கேய னடிதொழு திறைஞ்சும்
ப்ரபந்த வாக்கி
எக்காலு மேலான தக்கோர் சபாஷென் றியம்புந்
தமிழ்ப்பு லவனே.

சேலஞ்ஜில்லா நாமக்கல் தாலுக்காவைச் சேர்ந்த
கண்ணூர்ப்படி சே. நாராயணையர் குமாரர்
ப்ரம்மஸ்ரீ *வேங்கடரமணைய
ரியற்றிய
எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

---

பொதுமையை நீக்கிப் புகழுட னுளும் பொற்புறு
சென்னைமா வரசுக்
கதுவொரு நிலையாஞ் சேலமாப் பதிக்காங் கருகுறுங்
கஞ்சமா மலைப்பாற்
றதிமிகு பெருமைப் பதிவளர் தரும ராயசோ திடராருந்
தவத்தாற்
குதிகொளுங் குமரன் குமரவே ளருளாற் குவலயஞ்
சிறந்திட வுதித்தோன். (1)

உதித்திடு மனந்த நாரணப் பெயரோ னுளத்தினி
லுயர்மலைச் சித்தன்
பதத்தினைப் பதித்த பத்திமிக் குடையோன் பதிகமுஞ்
சதகமும் பலவாற்
றுதித்திடத் துணிந்தோன் றுதிப்பவர்க் ககலாத் துணையருள்
வலியினாற் றுயர்சேர்
விதித்திடும் பிறவிக் கடல்கடந் திடவே வினையென
விளங்கினன் மன்னோ. (2)

நெடுங்கடல் புடைசூழ் நேமியின் வலய நிலவுறு
நீதிகன் னெறிகுன்

---

* வேங்கட ரமணையர் இந்நூலாசிரியரின் மாணாக்கர்.

நீங்குறை நிரப்பிக் கீரநற் கடலி னிவர்ந்தெழு
மதிபுரை மதிவய
உடம்புறு முயிர்க்கு ளுதயமாம் படிக்கு முதவியே
யநந்தநா ரணவேள்
படிம்பவக் கடற்கோர் பாதையா யினிது பாடின
னீதிநூற் சதகம். (3)

பாடிய பனுவற் பத்தியு நிறையும் பயன்றர
நின்றதற் பரன்றன்
நீடிய புகழு நீதிநன் னெறியு நிலைபெறப்
பிணித்ததாய்த் துலங்குங்
கோடிசூ ரியரைத் திரஸ்கரித் ததுபோற் குலவொளி
சிறந்ததாற் கடல்சூழ்ந்
தோடிய வுலகின் முற்றிதன் பெருமை யுரைப்பரோ
வுணர்ந்தவ ரலாதார். (4)

நித்திலந் தன்னை நேர்பெறு மொழியா னிறைமணி
மகுடமும் புனைந்து
இத்தரை புகழும் வளனுடைப் பொழில்சேர்ந் திலங்குநற்
கஞ்சமா நகத்திற்
பத்தர்கள் பயனுய்ப் பயில்தருஞ் சித்தர் பதத்திடை
நினைவருந் தூய
சுத்தர்கண் மனமா மலரிடைத் தேன்போற் றுளித்தர
சிறக்குமிச் சதகம். (5)

இசையுடை யவரு மெழிலுடை யவரு மிருமையு
முடையரும் யாரும்
நசையுறு நடையை யுடையதாய்க் கல்வி நற்பொரு
ளில்லவ ருய்ய
விசையுடன் புனைந்தே யிறைவன தருளா லிருள்வலி
யிரவியின் முன்ன

ரசைவிலா தென்று மிளிர்தரும் புகழை யடைந்தன
னன்னவன் மன்றே. (6)

காந்தநன் னதிசூழ் கடவுண்முன் னிலையிற் காட்டுமிந்
நீதியைக் காண்பீர்
காந்தநன் னதியோ கடவுளி னிதிபோற் காண்பினுங்
கதிமிகச் சிறிதே
காந்தநன் னதிமேற் கதிமுதிர்ந் தொழுகுங் கருத்தினு
லுரைத்தனன் போலுங்
காந்தநன் னதியாற் கமழுறுஞ் சாந்த தாருவின்
கலவையிற் றிளைப்போன். (7)

வேதமு மறையா விழுப்பொருண் மிகுத்து வியனுடைப்
பொருணணி சேர்த்தீ
தோதின னுலகி லுள்ளவர் பொருட்டே யுய்யுமா
றறிந்திதை யுலகந்
தீதற விவற்குச் செய்வதோர் கைம்மா றென்னெனிந்
நினைந்தின மிதனை
ஏதமற் றுய்ய வன்புட னுவந்து படித்தலே
யெவரிதற் கிசையார். (8)

புடைபடு புனலும் பொய்கையும் பொழிலும் பொருவுடைப்
புண்ணியத் தலத்தி
லடையுறும் பெரியோ ரவையகத் திருந்தே யறையுமிச்
சதகமு மரங்கேற்
றிடவிருந் ததற்பி னன்னவர் மனமா மதகரி
மீதிவர்ந் தவனி
இடமெலாஞ் சென்றி யாவரும் புகழவெங் கணு
மிளிர்ந்ததை யன்றே. (9)

**சிறப்புப்பாயிரம் முற்றிற்று.**

4073
(8745)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# கஞ்சகிரி சித்தேசர் சதகம்.

## விநாயகர் காப்பு.

### நேரிசைவெண்பா.

மஞ்சமலை சேர்பொழில்சூழ் வான்றோய் நெடுமுகட்டுக்
கஞ்சமலைச் சித்தேசன் கான்மலர்க்கு—நெஞ்சகமே
பைந்தமிழி னற்சதகப் பாமாலை சூட்டநினை
தந்திமுகத் தீசனிரு தாள்.

---

## அவை யடக்கம்.

### ஆசிரிய விருத்தம்.

நற்பொரு ளிலக்கண விலக்கிய மெனும்பெரிய
        நரலைமுழு தூங்குடித்து
    நாடெலாம் பொழியவரு கவிமுகி லெனக்கமல
        நாமகள் கடாக்ஷமேவும்
பற்பல கவிச்சக்ர வர்த்திகளின் மெய்ப்புகழ்
        பரந்தசமு கத்திலேகிப்
    பாவினச் சீர்நிறைக ளறியாத நாயினேன்
        பன்னுமென் செய்யுளியலை

விற்பன விவேகியர்க ளொப்பிச் சபாஷென
விளம்புவர்க ளென்றுதேர்ந்து
மேதினி மதிக்குமொரு நீதிசத கம்புகல
மேன்மைபெறு கஞ்சகிரிவாழ்
சற்ப்ரபல ஸத்சுகிர்த ஸத்புருஷ ஸத்விஷய
ஸமரஸ சுபாவயோக
சத்திய தயாநிலய சித்தேசர் கமதுபய
தாள்பணிந் தனன்மகிழ்ந்தே.

## இந்நூலுக்கு நிதியுதவினோர் சிறப்பு.

கடலுலகின் மகிமைபெறு கஞ்சகிரி சித்தேசர்
கான்மலர் முடிக்கணிந்து
கருதுமொரு நீதிநெறி சதகம் புனைந்ததைக்
காசினியெ லாம்விளங்கத்
திடமருவு மிச்சதக மச்சிடக் கைப்பொருட்
செலவுக்கு வேண்டுமதனைச்
சேரலம் புரியதனி லுறைவோர்க ளும்பலர்
சிலாக்கியமி தென்றுணர்ந்தே
திடமருவு நிதியுதவி மேதினியி லினிதான
சாசுவத மாகுமிந்நூ
றனையுவந் தச்சிடத் தக்கநிதி யுதவினோர்
காலத்தி லெக்காலமுங்
கொடையுதவு நலமுறுவ ரவையெலாந் திகழுறு
குணம்பெறுவ ரெந்நாளிலுங்
கோத்திரையெ லாங்குலவு கீர்த்திப்ர தாபமொடு
குவலயந் தனில்வாழ்வரே.

# நூல்.

## அந்தணர் சிறப்பு.

பூமேவு வைதிக நியதிநெறி வழுவாது
புனலின்முச் சந்திமுழ்கிப்
புனிதமுறு பகவதர்ச் சனைபுரிந் தொழுகலும்
புகழும்யா காதிநிகழத்
தேமேவு விரதமும் மறையாக மங்கலைக
டேர்ந்தோது கின்றநலனுஞ்
சீலமிகு பத்தியொடு காலமுறை தவறாது
ஜெபதபஞ் செய்துறுதியாய்
மாமேவு காயத்ரி மகிமையா லுஞ்சுருதி
மந்திரப லத்தினாலும்
மாதமொரு மும்மாரி பொழியவைத் துலகெலாம்
வளமுறச் செய்துநன்றாய்க்
காமேவு தருவெனத் தருமுறையு மறையோர்ம
கத்வமென லாகுமன்றோ
கஞ்சனிகர் நற்றாச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (1)

## வேந்தர் சிறப்பு.

சாமபே தந்தான தண்டமொடு வினைகொளுஞ்
சதுர்வித வுபாயங்களுந்
தரியலர்க ளிதயமும் பெரியோர்கள் வாய்மையுஞ்
சதுரங்க சேனைபலமும்

பூமியுழ நற்குடிகண் மீதிலபி மானமும்
புகழ்நீதி மந்திரிசொலும்
புத்தியுட் கொண்டுவெகு சத்தியநி தானமும்
பொழியுமழை போன்றகொடையும்
மாமக ளுலாவிவரு நாடுநக ராலயமு
மனதுவிழி செவியிலாய்ந்து
மனுநீதி வழுவாது செங்கோ னடாத்திவரு
மாட்சிசேர் முறைமைகண்டு
காமகளு நாமகளு மேமகிழ வாழுவது
காவலரி யற்கையன்றோ
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (2)

## வணிகர் சிறப்பு.

முத்துநவ ரத்னமணி பட்டுபட் டாடையும்
முதலிட்டு வாங்கிவிற்பார்
முதலுக்கு மவைநின்ற தவணைக்கு நாளெண்ணி
முடிவான விலைசொல்லுவார்
சித்திதரு நிதியிலும் வட்டியிலு மொருகாசு
சேதம்வா ராதொழுகுவார்
தேவாலை யந்திருவி ழாவெனும் மேலான
செய்கையிற் செலவுசெய்வார்
நித்தநித் தம்பற்று வரவெழுது வார்நல்ல
நெறியுளோர்க் கேகொடுப்பார்
நீதியில் லாக்கொடிய மானிடர்க ளைத்தூர
நிற்கவைத் திடுவர்பட்டுக்

கத்தரித் ததுவெனப் பேசுவா ரிவைகள்வணி
கக்குலத் தியல்பல்லவோ
கஞ்சனிகர் நற்ருச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (3)

## வேளாளர் சிறப்பு.

தொனிக்கின்ற மறையவ ரொழுக்கமும் புவிமீது
தோன்றலர் நடாத்துமரசுந்
தொகைபெரிய லாபமுறு வணிகருயர் மேன்மையுஞ்
சுபசோப னஞ்செய்வதும்
நனைக்கின்ற துணிகளும் பணிகளோ டணிமருவு
நாரியர்க ளகமோகமும்
நாமகள் விலாசமுந் தானதரு மங்களொடு
நாளுவி தஞ்செய்வதுந்
தனக்கென்று மன்றேறி விவகார மேசெய்து
சாதித்து வருலாபமுந்
தாதாவெ னப்பெய ரெடுப்பதுவு நன்ருய்த்
தராதலமெ லாஞ்செழிக்கக்
கனக்கின்ற வேளாளர் புரிகின்ற விவசாய
காரியவ சத்ததன்றே
கஞ்சனிகர் நற்ருச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (4)

## கிரிவிசேஷம்.

சீர்கொண்ட மேருகிரி வடவேங்க டாசலந்
தேசுமிகு சோணசலந்

திகழ்பழனி யங்கிரி சிவாசலங் கந்தமலை
தென்பரங் கிரிவிராலி
நீர்கொண்ட தீர்த்தமலை சதுரகிரி யிடபகிரி
நீலகிரி நாகாசலம்
நியதியடி யோர்பரவு கைலையங் கிரிபெரிய
சேசமுறு மிமயாசலம்
வார்கொண்ட யானைமலை சோலைமலை நலமிகு
வராகமலை சிறுகுருமலை
மகிமைபெறு கணிகையொடு கடிகாச லம்பலர்
வணங்குதென் பொதிகையுடனே
கார்கொண்டு பொழிகின்ற மலைவள மெலாநினது
கஞ்சாச லத்தமையுமே
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே.

### தீர்த்த விசேஷம்.

திருவலவு சிந்துநதி காவேரி கண்டகிவ
சிஷ்டநதி கோதாவிரி
க்ஷீரநதி கங்கைநதி கூடலம் புரிவைகை
திகழ்கச்சி மருவுகம்பை
நருமதை சரஸ்வதி பவானியம ராவதி
நறும்புன னிறைந்தயமுனை
நாடெலாம் புகழ்பரவு துங்கபத் திரையோடு
நரலைபுகு மைராவதி

பருவுநல மிகுபெண்ணை யாதியாப் புகல்கின்ற
மாநதிப் புண்ணியமெலாம்
வந்துற வளிக்குநின் கஞ்சாச லத்தூடு
வருகாந்த நதிமூழ்கிடிற்
கருவுலவு மறுபிறவி யணுகாது முத்திதரு
கனமகிமை யுடையதன்றோ
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (6)

## மூர்த்தி விசேஷம்.

சதமகன் பதியிலுள கற்பகத் தாருவைத்
தாரணியில் வரவழைப்பாய்
தண்முகி றனைப்பிடித் தப்பிழிந் தாதலிக்
தபோதனர் குழாந்துதிக்கச்
* சிதமருவ வுரையாடி யஷ்ட குல வெற்பினைச்
செங்கையா லேந்திநான்கு
திக்கிலும் பந்தென்ன வீசிவிளை யாடுவாய்
செகதல மெலாம்புரக்கும்
பதியென விளங்குவா யஷ்டமா சித்திகள்
பரிந்தன்ப ருக்குதவுவாய்
பச்சிலை ரஸத்திற் களிம்பேறு செம்பைப்
பழுத்தசெம் பொன்றாக்குவாய்
கதியுதவி யென்னையுன் பாசமற வாமற்
கருத்துற வமைப்பதரிதோ

* சிதம்—ஞானம்.

கஞ்சனிகர் நற்ருச ரஞ்சலிசெய் மெய்ததேச
கஞ்சகிரி சித்தேசனே. (7)

இதுவுமது.

உண்மைதிக ழும்பருல கத்தினி லுலாவுவா
யுரகனு மிளைப்பா றவே
யோகதண் டத்தின்மீ தீரேழு புவனமு
மொழுங்கா யிருக்கவைப்பாய்
வண்மைவரு சப்தமே கங்களையு மொன்ருக
வருஷிக்க வுஞ்செய்குவாய்
மாகருணு மமுதனைய பூதிசா தனமிட்டு
மறுவுறு சரீரத்தினைத்
திண்மைதரு மகிமைப்ர தாபமே வுமபெரிய
தேசாதி பதியாக்குவாய்
சிலைவடிவ மாயுற்ற களிறுகைந் நீட்டிமே
தின்னக் கருமபுதவு சின
கண்ணுளனை வைத்துனது பாதகம லந்தந்து
காத்துரட் சிப்பதரிதோ
கஞ்சனிகர் நற்ருச ரஞ்சலிசெய் மெய்ததேச
கஞ்சகிரி சித்தேசனே. (8)

இதுவுமது.

அட்டநா கத்தைப் பிடித்துவிளை யாடுவா
யலைகடலின் மேனடப்பாய்
ஆதவன் றேரினிற் பூட்டிவரு துரகமீ
தாரோக ணித்துவருவாய்

குட்டரோக கத்தைத் தொலைத்துவிடு வாயெமன்
கொண்டவுயி ரைக்கொடுப்பாய்
கூடுவிட் டுக்கூடு செல்லுவாய் பலகோடி
கொடியவினை யைக்கொல்லுவாய்
கிட்டவா வென்றழைத் தழகிலாப் பேடியை
க்ரீடபதி யாக்கிவிடுவாய்
கிரியிலுறை நரிதனைப் பரியாக்கு வாய்கொடுங்
கேசரியை யெலியாக்குவாய்
கடிமா ணிக்கத்தி னொளிவீசு மாசுணக்
கடகந்த ரித்தகுருவே
கஞ்சனிகர் நற்றூச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (9)

## திருவருட் சிறப்பு.

துதியுண்டு நீங்காத துணையுண்டு மேலான
துரைராஜ நேயமுண்டு
சுகமுண்டு சுசியுண்டு சூழ்வோர்கள் மிகவுண்டு
தூய்மையொடு வாய்மையுண்டு
மதியுண்டு செம்பொன்வளர் நிதியுண்டு நலமருவு
மங்கலசு பங்களுண்டு
மனையுண்டு மகவுண்டு மாதாபி தாவுண்டு
மகுடமுடி சூடுகின்ற
பதியுண்டு சதுரங்க தளமுண்டு கொடையுண்டு
பாரதிவி லாசமுண்டு

பலனுண்டு புனைகின்ற கலனுண்டு மேலோர்
பழக்கமோ டுதவும்பர
கதியுண்டு கனமுண்டு கமையுமுண் டக்தசின்
கருணையுண் டாயிலரசே
கஞ்சனிகர் நற்ருச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (10)

## நகரச் சிறப்பு.

நதிபெறு திருப்பதி சிவாலயங் கோபுரஞ்
சுற்றுமதின் மண்டபங்கள்
தூயவே தியர்வீதி துரைராஜ வீதியுஞ்
சொல்லுமற் றோர்வீதியும்
பதகஜது ரகமிரத படைகளுறை விடுதியும்
பலர்மேவு கடைவீதியும்
பரதசங் கீதமுறை வழுவாது மங்கையர்கள்
பாடலரி ஹரபஜனையும்
புதியபூம் பொழில்செறி சரோருக தடாகமும
புனல்பரவு மகழிவிரிவும்
பூரிமுத லானபதி னறுவித தானமும்
பூபால ருதவுகொடையுங்
கதிர்பரவு ராஜதா னிக்குரிய நகரியிற்
காணுறு சிறப்பல்லவோ
கஞ்சனிகர் நற்ருச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (11)

## பலர்க்கும் பயன்படுவன.

பாதைபோ ரத்திலுள வாவியும் விரிவான
பங்கய தடாகங்களும்
பந்திதரு சத்திரமு மிரவிமதி யொளியும்
* பயோதரம் பொழியுமழையும்
வாதமும் வன்னியும் வழிப்புறத் தூதவுமிரு
வடவிருக் கத்தினிழலும்
வளமருவு வேளாளர் விவசாய முந்தாய
வரநதியை யணையபுனலும்
நீதியா சாங்கமுங் கிருபையொடு வைத்ததண்
ணீர்ப்பந்த லுஞ்சற்குண
நிருபரைப் பொருவுமே தாவிய ரிடத்திலுறு
நிதியுமீ ரேழுபொருளுங்
காதலுறு பற்பலர்க் குபயோக மாகவெகு
காலநிலை யுள்ளதன்றே
கஞ்சனிகர் நற்றூச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (12)

## இஃதில்லாத விது பெருமையுடைய தன்றெனல்.

அரசரில் லாதநக ராலயமி லாதவூ
† ரம்பகமி லாதவதனம்
அறிஞரில் லாதசபை கொழுநனில் லாதபெண்
ணறுசுவை யிலாதவுண்டி

* பயோதரம்—மேகம்.
† அம்பகம்-கண்.

புரவியில் லாதபடை யீகையில் லாதநிதி
புதல்வரில் லாதவாழ்வு
பூஷணமி லாதவுடல் கந்தமில் லாதமலர்
* புஷ்கரமி லாதவாவி
திறமையில் லாத † தனு தீபமில் லாதமனை
|| சிந்துரமி லாதசேனை
சிகழிகை யிலாதமுடி தந்தமில் லாதவாய்
சீலமில் லாதபூசை
கரிசனையி லாமனைவி யிவையெலாம் புவியிலேன்
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றூச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (13)

**இதுவுமது.**

தாளலய மில்லாத சங்கீத கீர்த்தனஞ்
சற்சனர்க ளில்லாதவூர்
தகுலாப மில்லாத வாணிபங் கனதையுள
தனையரில் லாதவனிதை
? வேளருளி லாதகவி (‡) நகிலமில் லாப்பெண்
விபூதியணி யாதநெற்றி
மெய்ம்மையில் லாதமொழி $ நளினமில் லாதமடு
வீரமில் லாதவேந்தர்

---

* புஷ்கரம்-தண்.
† தனு-சரீரம்.
|| சிந்துரம்-யானை.
? வேள்-முருகன்.
‡ நகிலம்-முலை.
$ நளினம் தாமரை.

கேள்வியில் லாதசெவி கறவையில் லாதபசு
கேணியில் லாதகாணி
கிருதமில் லாதசுவை மணமலரி லாதபொழில்
கீர்த்தியில் லாததேகங்
காளமுகில் சூழ்கருங் கடலுலகி லிவைகளென்
காந்தகதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (14)

நிறையாவிட மிவையெனல்.

அந்தமுள வேசையர்க் * கருவிபோ னிதிவரினு
மவர்மனக் கிணறு நிறையா
அரசருக் கதுபோல வொருகோடி பெருகிவந்
தாலுமவ ராசைநிறையா
விந்தைமிகு ரஸவாதி யர்க்குமலை யாவையும்
¶ வித்தமா னாலுநிறையா
மிக்கபே ராசையுள் ளோர்களுக் கெத்தனை
மிகுத்துவந் தாலுநிறையா
தொந்தரை தருங்கொடிய மதுவுண்டு திரிதருஞ்
‡ சுமடர்கட் கிலவசமதாய்ச்
சூழுமெழு கடலெலாங் கள்ளாகி னாலுமவர்
துட்டமன நிறையாதுகாண்

* அருவி-மலைவெள்ளம்.
¶ வித்தம்-பொன்.
‡ சுமடர்-கீழ்மக்கள்.

கந்தமலர் சோலைசெறி நந்தனவ னங்குலவு
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றூர ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (15)

### இறந்துமிருப்பவர்.

பாங்கம கூடாசந் திருப்பதி சிவாலயம்
பாரதனி லேவிதித்தோர்
பலபேர்க ணடமாடமே வழிபோர மாகவே
பருகநீர்த் தூரவாக்கினோர்
* அங்கஜ விரோதியா ராதனைக் காகவே
யமையுநந் தனமாக்கினோர்
அட்டதிசை திறல்பெற்ற புலவராற் காவிய
வலங்கார நூல்செய்வித்தோர்
சங்கநூறு சத்திரங் கிராமமுண் டாக்கினோர்
தப்பாத வாய்மையுடையோர்
தாரணியி னீதிநெறி வழுவாத நரவேந்தர்
தருபெருங் கொடையாளர்கள்
இகபெருகும் புவியி லழியாம லிவர்செய்த
தனதைநிலை நிற்குமன்றோ
கஞ்சனிகர் நற்றூச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (16)

### இருந்து மிறந்தவர்.

உலவிவ காரமே பேசுவோர் நீதிநெறி
யுணராது தீதுபுரிவோர்

---

* அங்கஜ விரோதி-சிவபெருமான.

4073

ஒன்னலார் தங்களுக் கிங்கிதம தாகவே
யூழியமி கச்செய்குவோர்
தாரமதை வேறொருவர் சேரவே தந்துசெந்
தாதுகொண் டுடல்வளர்ப்போர்
தகுதியோர்க் குதவாத பொருளாளர் வேட்டகந்
தனிலிருந் துண்டுதிரிவோர்
போரினிற் சூரனென வாய்மதம் பேசிப்
புறங்கொடுத் தோடியுழல்வோர்
பொற்பென்று கைம்பெண்ணை மேவுவோ ரனுதினம்
பொய்புகலு வோர்புவிதனிற்
காரியமி லாதலையு நாகரிக மில்லாத
கானடைப் பிணமல்லவோ
கஞ்சனிகர் நற்குருச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (17)

இவர்க்குந் தெய்வமிதுவெனல்.

மிச்சகர்க் குப்பொருள் கொடுத்தவர்க ளேதெய்வம்
விரகநோ யாளருக்கு
வேசியே தெய்வமாங் கொடியருக் கனுதினம்
விரோதகல கந்தெய்வமாம்
மச்சமிகு சிறுவருக் கன்னைதந் தையர்தெய்வ
மாவலொடு கல்விகற்போர்க்
கரியகுரு தெய்வமா மல்லலுறு வோர்க்கிட
ரகற்றுமவ னேதெய்வமாஞ்
சச்சரவு றும்பரம லோபியர்க் கென்றுந்
தகுந்தநிதி யேதெய்வமாந்

தருமனைவி யர்க்குற்ற தலைவனே தெய்வமாஞ்
சான்றவர்க் குத்தெய்வநீ
கச்சுமுலை வேசையர்க் கிச்சைநிறை யச்செயுங்
காந்தனே தெய்வமன்றே
கஞ்சனிகர் நற்றூச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (18)

இவையுண்டாயினு மிவைவேண்டுமெனல்.

நாகர முதற்சகல பாஷைக டெரிந்தாலு
நபகுண மிருக்கவேண்டும்
ஈரவேந்த ருறவா யிருந்தாலு மேலான
நல்லோர்க ணட்புவேண்டுஞ்
சாகர தாண்டுஞ் சமாத்தனென் றாலுநற்
றயிரிய மிருக்கவேண்டு
தரைமுழுது மொருகுடையி லாண்டாலு மெண்ணத்
தகுந்தமந் திரிகள்வேண்டும்
வாருமிகு நிதியரச னென்னினும் பலனுறு
வரும்படி யிருக்கவேண்டும்
வளமருவு கொடையாளி யானாலு மிதமாய்
மதித்துக் கொடுப்பதழகாங்
காகமுத லானபுள் ளுறையுநற் சோலைசொறி
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றூச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (19)

## இவைசெய்ய வேண்டுமெனல்.

* பற்றலா ரென்றாலு மாபத்தி லேகிப்
பரிந்துதவி செய்யவேண்டும்
பண்பான பிள்ளைமுழு மூடனென் றாலுமே
பள்ளியி லமைத்தல்வேண்டுஞ்
சற்றாகி லுங்கோப மாறாத மூர்க்கரைச்
சார்ந்துபெரி யோர்விலக்கிச்
சரியான நீதிச் சவுக்கா லடித்துத்
தகும்புத்தி சொல்லவேண்டும்
உற்றோர்க ளாயினும் மற்றோர்களாயினு
முடலினிற் கொடியபிணியா
லுயிர்மாயு மென்றாலு மவுஷதம் சேகரித்
துடனே கொடுப்பரன்றோ
கற்றோர்க ளிதயங் களித்துக் குளிக்கவரு
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (20)

## இவை செய்யவேண்டாமெனல்.

தனந்தேடி யதனைப் புதைக்கவேண் டாகல்ல
தருமத்தை நீக்கவேண்டாஞ்
சற்சனர்க ளுறவைத் தவிர்க்கவேண் டாம்பழைய
தாயாதி நட்புவேண்டாம்

---

* பற்றலார் — பகைவர்.

மனம்போன போக்கெலாம் போகவேண் டாந்தீய
 மார்க்கத்தை நாடவேண்டாம்
மறுமாதர் மீதுமயல் கொள்ளவேண் டாநீதி
 வாக்கிய மறக்கவேண்டாஞ்
சினந்தேடி நட்பைக் கெடுக்கவேண் டாமொருவர்
 செய்ந்நல மறுக்கவேண்டாம்
செல்வச் செருக்கினு னல்லோரை வீணுய்த்
 தெழித்துப் பழிக்கவேண்டாங்
கனந்தேடி வீண்செலவு செய்யவேண் டாம்பெருங்
 கடனுல் வருந்தவேண்டாங்
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
 கஞ்சகிரி சித்தேசனே. (21)

உபகாரமில்லாதவை.

எருக்குச் செழிப்புற் றிருந்தென்ன காஞ்சிர
 மிலங்கப் பழுத்துமென்ன
எறிதிரைக் கடனீர் மிகுத்தென்ன $ ஓவியத்
 தெப்பணி யிருந்துமென்ன
பெருக்குற்ற சாக்கடைத் தண்ணீர் மலிந்தென்ன
 ப்ரேதமழ காயிருந்தென்
பேடியர்க ளணிகலம் பூண்டிருந் தாலென்
 பிசாசகுண மேவுபெண்கள்
செருக்குற் றிருந்தென்ன மனிதரா லுகாவிடந்
 தேன்கூ டிருந்துமென்ன

---

$ —ஓவியம்-சித்திரம்.

¶ சிரணியி லேமழை பொழிந்தென்ன வுதவுறுந்
 தியாகமில் லாதசெல்வர்
கருக்குற் றிருந்தாலு முபகார மாகுமோ
 காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றூச ரஞ்சலிசெய் மெய்த்தேச
 கஞ்சகிரி சித்தேசனே. (22)

உதவியும் பயனில்லை யெனல்.

அபத்தி லுதவாத நட்பாளர் பின்னிட்
 டனேகங் கொடுத்துமென்ன
அரிதான கல்விநெறி யுணராத வொருபிள்ளை
 யழகா யிருந்துமென்ன
மகாபத்தி லிரணம் புகுந்துசய மருவாத
 கோவீரர் சேவகமென
கொஞ்சமா யினுநல்ல மரியாதை யில்லாக்
 குடும்பினி யிருந்துமென்ன
தாபத்தி லில்லாத தண்ணீ ரிருந்தென்ன
 தருதியோர்க் குதவியில்லாத்
தனதான்ய மிக்கவுள சம்பன்னர் வாழ்வதுந்
 தாரணிக் கதிகசுமையாங்
காபித்தி சாதிசிறு சண்பகச் சோலைசெறி
 காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றூச ரஞ்சலிசெய் மெய்த்தேச
 கஞ்சகிரி சித்தேசனே (23)

---

¶ சிரணி-ஆரண்யம்.

இவையுண்டாயினு மிவையில்லாவிடினும்

பயனில்லை யெனல்.

மானமில் லாதவர்க ளெத்தனை சிறப்புற்று
வாழ்ந்தென்ன தாழ்ந்துமென்ன
மனைவியுட னேபிரிய மில்லாத நாயகர்
மகிழ்ந்தென விகழ்ந்துமென்ன
தானதரு மந்தயவி லார்பொருள் வளர்ந்தென்ன
சடுதியி லொழிந்துமென்ன
தயிரிய மிலாதவர்க ளாயுதம் வகித்துநற்
றனையி னுழைந்துமென்ன
சேனையி னுழைந்துசமர் செய்யவகை யறியாத
சேவக மிருந்துமென்ன
திகழவை மதிக்கப்ர ஸங்கமது செயமனத்
திடமிலா வித்தையென்ன
கானலிற் பெரியமழை பேய்ந்தென்ன காய்ந்தென்ன
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (24

உலோபியரியல்பு.

சாப்பிடார் நல்லுணவு தரியார்க ணல்லாடை
தானதரு மங்கள்செய்யார்
சார்ந்தபெரி யோர்களைக் கண்டாலு மதியார்கள்
தம்மனைச் சுபதினத்துங்

கூப்பிடா ருறவினர்க ளைசம்வை யாப்பொருள்
கொடுக்கும்ப்ர மேயத்திலே
கூசுவார் கைவரா தேசுவார் மக்கள்மேற்
கோபமுறு வார்மனைவி யோ
சேப்பிடாள் நெற்றியினின் மேனியில் விளங்கிடச்
செய்தநகை யேதுமணியாள்
சேய்மொழி வியந்தவர்க ளழகுபார்ப் போமெனச்
செம்பொன்னி னாற்செய்துழுங்
சாப்பிடார் பிள்ளைகட் கேதொன்று மேசெயக்
கருதிடா ரீனரன்றே
கஞ்சனிகர் நற்றூச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (25)

### அற்பர்வாழ்வினால் துணைவேறுபடல்.

சிற்றறிவு ளோர்களுக் குபர்செல்வம் வந்திடிற்
றிட்டியொளி மட்டாய்விடுந்
தேர்ந்துபழ கியநண்பர் வந்தாலும் வாவென்று
செப்பவும் வாய்வராது
பற்றலுறு பேர்களைக் கண்டாலு முங்களைப்
பார்த்திலே னென்றுநன்றாய்ப்
பந்துவென் றுங்களைத் தெரியா தெனச்சொலிப்
‡ பானீய முங்கொடார்கள்
கொற்றவன் போலவே தலையசைத் தங்கையிற்
கோலேந்தி யேநடப்பார்

‡ பானீயம்-தண்ணீர்.

கொள்ளுமொரு சங்கதிகள் சொன்னாலு மேசெவி
கொடுத்தளிகொ ளாரம்பராங்
கற்றவர்க ளற்றவர் களித்துக் குளிக்கவரு
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (26

இருந்து மனுபவியாதவர்.

பட்டுடைக ணெய்கின்ற தொழிலாளர் வீட்டினிற்
பழையகந் தைகடரிப்பார்
பதுமநவ ரத்னமணி விற்போர்க ளழகிலாப்
பாசிமணி தன்னையணிவார்
தட்டுதவ லைகள்செயுங் கன்னார்கள் வீட்டில்மட்
சட்டியைக் கையாளுவார்
சந்தமலர் மாலைகள் தொடுக்கின்ற பேர்வெறுஞ்
சவுரியிற் கொண்டைமுடிவார்
கொட்டிலிற் பால்கறக் கின்றபே ருப்பிலாக்
கூழ்குடித் தேப்பமிடுவார்
கொல்லையினி னெல்லைவைத் துண்ணுமவே லைசிறு
குறுந்தினை சமைத்துண்ணுவார்
கட்டழகி தேவியைக் கைவிடுத் தறிவிலோர்
கணிகையைச் சேர்வரன்றோ
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (27)

### இவர்க்கமுத மிவ்விடத்தெனல்.

பாவலர் தமக்கமுது நாவிலே மேலான
பார்த்திபர்க் கமுதநெறியில்
பைந்தொடிய ருக்கமுது கற்பிலே பொற்புறும்
பசுவினுக் கமுதமுலையில்
மீதவருக் கமுதமது சொர்க்கலோ கத்திலே
தேசிகர்க் கமுதமனதிற்
செய்பண்டி தர்க்கமுது கையிலே சங்கீத
லேருக் கமுதமிடறில்
பூவுலகில் விதரணிக ருக்கமுது கண்ணிலே
பூசுரர்க ளுக்கமுதமோ
புகழார ணத்தின் சுரத்திலே தவயோக
புனிதருக் குன்பதத்திற்
¶ காவிதிய ருக்கமுது நயமொழியி லல்லவோ
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்ருச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (28)

### இவர்க்குவிட மிவ்விடத்தெனல்.

பரத்தையர் தமக்குவிட முலையிலே விரிவுதரு
படவரவு கட்கெயிறிலே
பகையாள ருக்குவிட மனதிலே கோட்சொலும்
பாவிக்கு விடமிதழிலே

---

¶—காவிதியர்-மந்திரிகள்.

உரத்திடுந் திருடருக் குயர்விடங் கைதனி
லுலோபியர் தமக்குவிடமோ
வுதவாது நிதிபுதைத் தூற்றிடு மிடத்திலே
யுண்மையல் லோர்க்குரையிலே
கிருத்ரம மிகுத்தவர் தமக்குவிட நெஞ்சிலே
கெடுதிசெய் வோர்களுக்குக்
கிளவிதரு நாவிலே மயன்மீறி விபசரிக்
கின்றவர்க் கிருகண்ணிலே
கருத்தகேட் குறுவிடங் கடைவாவி லல்லவோ
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றுருச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (29)

அந்தந்த வினங்களுக் கழகாவன.

பட்டண மதற்கழகு பலவீதி நாற்சந்தி
பார்த்திபர்க் கழகுசெங்கோல்
பரத்தையர் தமக்கழகு பரதசங் கீதநெறி
பைந்தொடிக் கழகுகொங்கை
கொட்டிலு களுக்கழகு பால்கறக் கின்றபசு
* குரவருக் கழகுபொறுமை
கோயிலு களுக்கழகு சுற்றுமதின் மண்டபங்
கோபுரமு நந்தவனமுந்
திட்டமொடு வாழ்புருட ருக்கழகு மனைமனைவி
சிறுவருக் கழகுகல்வி

* குரவர்-குரு.

திகழுஞ் சவைக்கழகு மேலோர்க ளன்புறு
சினேகிதர்க் குதவியழகு
கடலெழின் மடந்தையர்க் கழகுகற் பல்லவோ
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (30)

பதரெனப்படுவோரிவரெனல்.

புதுமனைவி துயருறப் பரமாத ரின்பம்
பொருந்திவாழ் பவனொருபதர்
புகழ்பரவு தாய்தந்தை யோர்மீது தீதுறு
புறங்கூறு வோனொருபதர்
உதவுதன தானிய மிருக்கநற் பாத்திரத்
துதவாத நரனொருபதர்
உற்றோர்க ளோச்சற்று மெண்ணாது பகைசெய்
தொழித்துவிடு வோனொருபதர்
மதவிஷய மதிலெனது மரபுதான் பெரிதென்று
வாதாடு வோனொருபதர்
மக்களிற் பெரியோர்கள் சொற்களைக் கேளாத
மனிதரொரு பதரல்லவோ
கதழ்வுபெறு கதலிமல ரிதழவிழ மதுவொழுகு
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (31)

இச்செய்கையுடையோரிப்பெயர்கொள்வரெனல்.

பிடித்தபிடி சாதிக்க வல்லவன் ஞனென்று
பேசுமவ னேமூடனும்
பெண்புத்தி யைக்கொண்டு சினமூதிர்ந் தேசமர்
பிடிக்கமுயல் வோன்மூர்க்கனும்
எடுத்தவிக் காரியம் மென்னால் முடிந்ததென்
றெண்ணுமவ னேகுருடனும்
ஏழைகளை யெதிரிட்டு ? வெருவந்த செய்கையா
லிடர்புரிகு வோன்றீயனுந்
தொடுத்திடும் புண்ணியந் நிறைவேறி டாமற்
றொலைக்குமவ னேபாவிபாஞ்
சுபதினத் தினில்வந்து தீமொழி வழங்குவோன்
* சூரியகு மாரனுருங்
கடுத்தகோ பக்கன லடக்காத மக்களை
$ கட்செவிக் † கடுவல்லவோ
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (32)

கற்றறிவில்லாத மடையரியல்.

ஒற்றியூர்த் தியாகேச னீயென்று லோபிமீ
துசிதமாய்க் கவிதைமொழிவா

---

? வெருவந்த செய்கை—பயமுறுத்துதல்.

* சூரியகுமாரன்—சனி.

$ கட்செவி—பாம்பு.

† கடு—விஷம்.

ஒராருகாசு மீயாத வீணரைக் கொண்டாடி
யுதவுகொடை யாளியென்பார்
சற்றுமொரு வெற்றிவகை யறியாத பேடியைச்
சமரினிற் சூரனென்பார்
தானதரு மந்தயவி லாதவெகு பொய்யனைத்
தருமரிச் சந்த்ரனென்பார்
குற்றமோ ராயிரஞ் செய்துதிரி வோர்களைக்
* கோபதிக் கிறைவனென்று
† கோத்திரையில் விவிதமாய்த் தோத்திரஞ் செய்கிற
கொடும்பாவி யாங்களினரே
கற்றறிவி லாமடைய ரிற்பெரிய மூடராங்
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றுசரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (33)

**இவ்வினங்களிற் சிறப்பிவையெனல்.**

நாலெட்டி ராகத்தி லேசங்க ராபரண
ராகமொன் றேசிறப்பாம்
நாரிய ரினத்திலே யுலகெலாம் புகழ்கமலை
நாமகள் வெகுசிறப்பாங்
கோலத்து டன்மிக்க வழிநடைக் குதவிதரு
குதிரையே வெகுசிறப்பாங்
குணமிகுங் கற்போடு துணைவனைப் போற்றிடு
குடும்பினி யதிற்சிறப்பாங்

---

*—கோபதி—இந்திரன்.
† கோத்திரை—பூமி.

காலத்தி னீர்வளங் குடிவளம் பயிர்வளஞ்
சார்ந்தநில மேசிறப்பாந்
தக்கதொரு கொற்றவ ரிருக்கின்ற பட்டணந்
தன்னில்வாழ் வதுசிறப்பாங்
காலத்தி லுதவிதரு நட்பே சிறப்பதாங்
காந்நநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (34)

இயற்கைச்செயலன்றி மாறுபடாதெனல்.

தண்டவா ளத்துமீ தோடுகிற புகைவண்டி
தரையின்மீ தினிலோடுமோ
தரைமீதி லோடுகிற மரவண்டி நீள்கடற்
றண்ணீரின் மீதோடுமோ
புண்டரீ கம்பெரிய வாவியல் லாற்குறும்
* பொறையிலுற் பத்தியாமோ
† பொன்னிமடு தன்னிலுறு முதலையொடு மகரமிப்
புவியிலுயிர் வாழுமோகூற்
கொண்டமே கங்களைக் கண்டமயில் போலவான்
கோழிநட னஞ்செய்யுமோ
‡ கோகநக மிரவியைக் கண்டுமலர் தன்மைபோற்
குமுதமல ரிதழ்விரியுமோ

* பொறை—மலை.
† பொன்னி—காவேரி.
‡ கோகநகம்—தாமரை.

* கண்டீர வஞ்சிறிய தானுலு மும்மதக்
கரியினங் கட்கஞ்சுமோ
கஞ்சனிகர் நற்றூச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (35)

அந்தந்த வினத்திலுயர்ந்தவை.

மலைகளின் மகாமேரு மாதத்தில் வைகாசி
வாரத்தி லிந்துவாரம்
மலர்களிற் கமலமலர் நகரிதனி லேகச்சி
மரமதிற் † சந்த்ர திலகம்
பலபூத மதில்வாயு வருபுனலி லேகங்கை
பசுவினிற் காமதேனு
பாரிபுகழ் பூமியிற் காஷ்மீர கண்டநற்
பறவையினில் ‡ வைநதேயன்
இலகுமணி யிற்பதும ராகமணி மேன்மைமிக
ழிருடிகளி லேவசிட்டன்
எழுகடலி லேதிருப் பாலுததி சங்கீத
மிசைவீணை யினிஞரதன்
கலைதமி ழகத்தியன் கற்பினி லருந்ததி
காசினியி லுயர்வல்லவோ
கஞ்சனிகர் நற்றூச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (36)

---

* கண்டீரவம்—சிங்கம்.

† சந்த்ர திலகம்—சந்தனமரம்.

‡ வைநதேயன்—கருடன்.

அந்தவினத்திலுயர்ந்தவை.

அழகினிற் * செங்கமலை பொறுமையிற் பூதேவி
யறிவினிற் † றெய்வமந்த்ரி
அரியவிற் போரினிற் பற்குனன் சொல்லுக்
கரிச்சந்த்ர பூபாலகன்
விழவுறும் பூசையிற் சிவபூசை விடுபடையில்
வெற்றிதரு வேலாயுதம்
வேதியர் ஜெபிக்கின்ற மந்திரத் திற்ப்ரணவம்
வெற்றியினில் விக்ரமார்க்கன்
செழியவிப் புவியிலுள தேவால யங்களிற்
றில்லைச் சிதம்பரதலந்
திறமைபெறு மிருகமதி லரசெனுங் கேசரி
‡ செருவினிற் சூரபதுமன்
கழகமூறு கல்வியிற் சேடனுயர் வென்றறிஞர்
கழறுவா ரநவரதமுங்
கஞ்சனிகர் கற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (37)

திருவாழிடங்கள்.

விண்டுவி னிடத்திலும் விவேகிய ரிடத்திலும்
விளக்குப்ர காசத்திலும்
வேந்தர்க ளிடத்திலும் பூந்தடா கத்திலும்
வெற்றியுறு வோரிடத்துங்

---

* செங்கமலை—திருமகள்.
† தெய்வமந்த்ரி—வியாழபகவான்.
‡ செரு—உயுத்தம்.

தண்டுளவு சந்தனங் குங்குமங் கூவிளஞ்
சாதிமல் லிகைதன்னிலுந்
தந்தியின் முகத்திலுங் கந்துக முகத்திலுஞ்
சத்யவா சகரிடத்தும்
வண்டுலவு கமலங் கடப்பமலர் மீதும்வி
வாகமா ளிகையிடத்தும்
¶ மகரால யத்திலுங் கங்காஜ லத்திலும்
மாதவன் சங்கத்திலும்
கண்டுமகிழ் கொண்டுசெங் கமலையக லாமற்
கருத்துற் றிருப்பளன்றோ
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (38)

இதுவுமது.

கிரளமணி தன்னிலுந் தனதானி யத்திலுஞ்
சற்சன ரிடந்தன்னிலுந்
தம்பூரு மிருதங்க முகவீணை நாகசுர
சங்கீத நாதத்திலுஞ்
சுரபிகூட் டத்திலுங் கதலீ பலத்திலுந்
தூயதீம் பாற்குடத்துஞ்
சுமங்கலை யிடத்திலு * மிலிங்குச பலத்திலுஞ்
சூதபத் ரந்தன்னிலுந்

---

¶ மகராலயம்—கடல்.
* இலிங்குசபலம்—எலுமிச்சம்பழம்.

திரவியம் வைக்கின்ற பொக்கிஷந் தன்னிலுஞ்
சீலமுள் ளோரிடத்துந்
† திரையவிலை தன்னிலுந் தெரியல்பைங் கூழிலுஞ்
செம்பொனவ ரத்தினத்துங்
கருதரிய திருமாது நீங்காம லென்றுங்
களிப்பொடு வசிப்பளன்றோ
கஞ்சனிகர் நற்றாச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (39)

## மூதேவி வசிக்குமிடம்.

பிணியோ ரிடத்துந் தரித்திர ரிடத்திலும்
ப்ரேததக னப்புகையிலும்
பெருக்கிடு தரைத்துகள் விளாவரசு நிசிநிழற்
பிரலா கியகந்தைகள்
அணிவோ ரிடத்திலுங் கார்மேக விருளிலும்
ஆட்டுக் குழாந்தன்னிலும்
ஆசார மில்லாத கொடியோர் முகத்திலும்
‡ அலக்கணுறு வோரிடத்துந்
துணைவனைத் தூறிமறு கணவனைச் சேர்கின்ற
சோரமங் கையரிடத்துஞ்
சுடர்தருந் தீபத்தி னிழலிலும் மட்கலச்
சூளையி லெழும்புகையிலுங்

---

† திரையவிலை—வெற்றிலை.
‡ அலக்கண்—துன்பம்.

கணமுமக லாமலே மூதேவி மனதிற்
களிப்புற் றிருப்பளென்பார்
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (40)

இவையிற்சிறப்படையினுமிவையாகாதெனல்.

தினையரிசி யன்னமென் சுவைமிகுந் தாலுமது
செஞ்சாலி யன்னமாமோ
திரைகடலில் விளையுப்பு வெண்மையானாலுமது
சீனிசர்க் கரையாகுமோ
பனையினது கனியுட் பசப்பிருந் தாலுமாம்
பழமதற் கிணையாகுமோ
பார்த்திவர்கள் வீதியி லுலாவினுங் கழுதையது
படைவீரர் பரியாகுமோ
வனமருவு வான்கோழி மேலாய் வளர்ந்திடினு
மரகத மயூரமாமோ
வரியுற்ற பூனையொரு மலைசுற்றி யோடினும்
* வல்லியப் பறழாகுமோ
கனவெதுகை மோனையறி யார்கவிஞ ராவரோ
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (41)

* வல்லியப்பறழ் - புலிக்குட்டி.

இவர்களுக்குநோக்கமிவ்வகையிலெனல்.

சிலமிகு வேதியர்க ளோக்கஞ் செபத்திலே
 தீரமே யரசர்நோக்கஞ்
செல்வவணி கர்க்குவரு லாபத்தி னோக்கமாந்
 திகழும்வே ளாளருக்கோ
தாலமிசை விளைகின்ற கழனிமே னோக்கமாஞ்
 சதுரங்க சேனையதிபர்
தங்களுக் கெதிராளி மீதிலே நோக்கமாஞ்
 சாஸ்திரங் கற்பவர்க்குக்
கோலமிகு நூலினுட் பொருளிலே நோக்கமாங்
 கோதையர் தமக்கென்னிலோ
கொண்டகண வன்மீது நோக்கமா மெற்குன்
 $ குசேசய பதத்தினோக்கங்
காலநிலை தவறாது முனிவோர் குளிக்கவரு
 காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றூச ரஞ்சலிசெய் மெய்த்தேச
 கஞ்சகிரி சித்தேசனே. (42)

மருத்துவன்.

கும்பமுனி பூரணம் வயித்திய நிகண்டெலாங்
 கோதறக் கற்றுணர்ந்து
கூறுமஷ் டாதசச் சித்தர்குணவாகடங்
 குற்றமற வேபடித்துச்

$ - குசேசயம் - தாமரை

சம்ப்ரமம தாகவே போகரிஷி தன்வந்த்ரி
    சட்டமுனி நூலோதியுந்
  தாரணியி லுண்டான பச்சிலைக ளுங்கடைச்
    சரக்குவிவ ரந்தெரிந்தும்
* உம்பரமிழ் தத்தினைப் போலநன் மாத்திரைசெய்
    துண்ணவே நோயாளருக்
  குசிதமுறு கனகுளிகை கலிகங் கஷாயங்க
    ளுயர்தைல நெய்புதவியாற்
கம்பித மிகும்பல விதத்துறும் பிணிகளைய
    கற்றிவிடு வார்களன்றோ
  கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
    கஞ்சகிரி சித்தேசனே. (43)

## இப்படிப்பட்டவரிவரெனல்.

நலமருவு விகிதமொடு வுலகபரி பாலன
    நடாத்துமவ னேயரசனும்
  ராஜசம யந்தெரிந் துதவியா கியசெய்தி
    நவிலுமவ னேமந்திரி
வலிமருவு தீரமொடு தரியலரை வென்றுவரு
    மனிதனே புருடசிங்கம்
  வண்டமி ழிலக்கண விலக்கியக் கணிதநூன்
    மாசறக் கற்றுணர்ந்தே
ஒலிமருவு சவையெலா மகிழப்ர ஸங்கம
    துரைக்குமவ னேவித்துவான்,

* உம்பரமிழ்தம் - தேவாமிர்தம்.

MAHAMAHOPADHYAYA
U.V. SWAMINATHA IYER LIBRARY
NT NAGAR, MADRAS-600

வுற்றநவ நாதருறு கிரகநிலை வலிதெளிந்
தோதுமவ னேசோதிடன்
கலகலென வினியதொனி பலபுரிபு மவனேவி
கடகவி யெனப்புகலுவார்
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (44)

உள்ளூரிற்சிறப்படையாதோர்.

சிந்தைதெளி கவிவாணர் மறுதேய மன்னவர்க
டேசப்ர சித்திபெறவே
செப்புமவ தானியர்கள் சங்கீத வித்தையிற்
றேர்ந்தபா டகர்வேசியர்
மந்த்ரவுப தேசிகர்பு ராணப்ர ஸங்கியொடு
வாத்தியத் திற்சிறந்தோர்
வாசனைத் திரவியம் விற்போரு பாத்தியார்
மந்த்ரவா தியர்வைத்தியர்
சுந்தர நயங்குலவு நாடகர் சோதிடர்
தூயசெப் படிவித்தையோர்
சொல்லுமிவ ரெல்லவரு முள்ளூரி னிற்பெருமை
சொல்லப் பெறாரல்லவோ
கந்தரம் பொழியநற் றருவோங்கி வளர்கின்ற
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (45)

## பலகூடினும் ஒன்றுக்கீடாகாதெனல்.

அண்டமிசை யுடுவினம் பலகோடி யுற்றாலு
* மம்புலிக் கீடாகுமோ
அடவிதனி லளவிலாத் தருவிருந் தாலு † மலை
யாரமொன் றுக்குநிகரோ
‡ விண்டுவி லனேகங் ¶ கிடக்கையி லிருந்தாலு
மேருவுக் கிணையாகுமோ
மின்மினிக ளாயிரஞ் சேர்ந்தாலு மொருசுடர்
விளக்குப்ர காசமாமோ
மண்டல் மதிற்சிலைகள் வெகுவா யிருந்தாலு
மாமணியி னொன்றாகுமோ
வாழைமுத லானபல கனிகூடி னாலுமுயர்
வானுலக ரமுதாகுமோ
கண்டபடி வெகுபடைய ருண்டாயி னாலுமொரு
கவிவலோ னுக்குநிகரோ
கஞ்சனிகர் நற்றூச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (46)

## மக்களிற் சிறந்தவராவோர்.

இளவயதி லேகல்வி கற்பார்கள் வறுமைவந்
தெய்தாம லேயிருப்பர்

---

* அம்புலி - சந்திரன்.
† மலையாரம் - சந்தனமரம்.
‡ விண்டு - மலை.
¶ கிடக்கை - பூமி.

ஏற்றபெரி யோர்களுபர் நேசஙிசு வாசமதை
யென்றுமக லாதிருப்பர்
வளமருவு தாய்தந்தை தம்பிதம யன்களொடு
வாழ்வுற் றிருப்பரினிதாய்
வாகோப தாரியென் றெல்லோரு மேசொல்ல
மரியாதை யும்வகிப்பார்
விளைவுதரு நிலநலம் மேன்மையுத் யோகமொடு
விமரிசை யதாயிருப்பர்
வெகுபெயர்க் குபகார மாகவுங் கனதையொடு
மிக்கவை போகமருவிக்
களவுமுத லானதுற் செய்கையற் றுன்பாற்
கருத்துற் றிருப்பரன்றோ
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (47)

குடிவாழ்க்கைச் சிறப்பு.

தேவரா லயநடு விசாலமுள தாய்ஞான
தேசிக ரிருக்கையுள தாய்ச்
செங்கோலி னரசாட்சி யோங்கிவளர் நகரமாய்த்
தெருவுக ளநேகமுளதாய்
நாவலர்க ளோடுபலர் வாழ்க்கையுள தாய்நல்ல
நதிபுனற் றடமுள்ளதாய்
நகரம்வெகு பெரியதாய்த் தேர்வீதி கடைவீதி
நன்மையுற வெய்தியதிலே

மாவள மிகுந்தமுக் கனிபழுக் குஞ்சோலை
வரிவிளைவு தருநிலமுடன்
மக்கண்மரு மக்களொடு தனிமனையி லன்பாய்
மகிழ்ந்தன்ன தானமுதவிக்
காவலர் மதிக்குமுத் யோகமொடு குடியின்வாழ்க்
கைச்சிறப் பிவையல்லவோ
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (48)

**வறுமையால் வருமிழிவு.**

அடிபணியு மனைவியுந் தூறுவா டனையீன்ற
அன்னைதந் தையரேசுவார்
* யாக்கையொடு மனமெலியு முறவினர்கள் மதியார்க
ளசனமில் லாமலலைவார்
படிபுகழும் வித்தையு மழுங்கிடும் பெருமைபோம்
பாக்யரைக் காணிலஞ்சிப்
பாரா தொடுங்குவார் பசியா லயர்ந்திடப்
பந்துவர்க் கங்கள்வந்தால்
இடிவிழும் பொழுதரவு மெய்ம்மறந் திடுதல்போ
லேங்கித் துடிப்பரியல்பாய்
இன்மைவந் தெய்திடப் பெற்றபேர் கட்குவே
றிப்புவியி லின்னலுளதோ
கடிகமழு மலர்விரிய நறைவழிந் தொழுகிவரு
காந்தநதி தீரமேவுங்

* யாக்கை - சரீரம்.

கஞ்சனிகர் நற்ருச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (49)

இவையெல்லா மளவுபடினும் ஆசையளவுபடாதெனல்.

அரியினடி யாழமும் அமலனடி மகிமையும்
அவனிமுழு நெடுநீளமும்
அம்பரத் துயரமும் அரிவையர்க ணெஞ்சமும்
அசலமதி லுற்றசிலையும்
பெரியவர்கண் மகிமையும் † பொறையிலுறு தருவுமொரு
பிலமிருந் தெழுமீசனும்
பெருமழைத் திவலையும் பல்லுலகி லுயிர்களும்
பேராழி யெறியுமலையும்
உரியகரை நொய்மணலு மாகாய மேவுபல
‡ வுடுவினினமும் ¶ புணரியில்
உலவிவளர் ஜெந்துவும் மானிடர்கள் ஜனனமும்
உறுதியா யளவு செயினுங்
கருதரிய மானிடர்கள் பேராசை யென்றுங்
கணிக்கப் படாததன்றோ
கஞ்சனிகர் நற்ருச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (50)

---

† பொறை - ஆரண்யம்.
‡ உடு - நக்ஷத்திரம்.
¶ புணரி - கடல்.

உலகிலெதுவும் நிலையாதெனல்.

இலங்காதி பதியுறு வரப்ரஸா தங்களும்
மிந்த்ரஜித் தன்கொற்றமும்
ஈடிலாக் கும்பகர் ணன்கொண்ட விஜயமும்
இரணியா க்ஷதனுண்மையுந்
துலங்குஞ் சரீரமொடு மேலான வரமுற்ற
சூரபது மன்றீரமுந்
துரியோத னதிய ரகங்கார மும்பெரிய
சோமுகா சுரன்வலிமையும்
பலங்கொண்ட கீசகன் றேகமுஞ் சூர்பெற்ற
பானுகோ பன்றீரமும்
பலிச்சக்ர வர்த்தியின் வாகையுந் தக்கன்ப்ர
தாபமுந் திரிபுரத்தோர்
கலங்காத வீரகம் பீரமுங் கடலுடைக்
காசினியி னிலைநின்றதோ
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சனிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (51)

இன்னார்க் கிவையில்லையெனல்.

தீதுபுரி சோரருக் கிருளில்லை வலிமிகுந்
தீரமில் லாதவர்க்குத்
திறலில்லை குற்றமெண் ணுதவர்க் கிகலில்லை
தேகாபி மானமில்லா
மாதவ மிகும்பரம யோகிகட் குறவில்லை
மானமில் லாதவர்க்கு

மட்டமரி யாதையிலை துஷ்டருக் குதவிதனை
மறவாத தகைமையில்லை
பூதத்தயை யில்லாத லோபியர்க் குப்பெறும்
புகழ்பரவு மேன்மையில்லை
பொற்புறுங் கொங்கையில் லாதவட் கழகில்லை
புண்ணியஞ் சற்றுமெண்ணாக்
காதக கனிஷ்டருக் கன்பில்லை யல்லவோ
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்ருச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (52)

கனதையில்லாத கருமியிவரெனல்.

தருமபரி பாலனஞ் செய்வதற் காகநிதி
தந்துபுக ழென்றுமருவார்
தடியடித் திருடர்கட் கஞ்சியே வீட்டுத்
தனங்கண்முழு துங்கொடுப்பார்
ஒருகடிகை யாயினுந் தெய்வந் தொழார்வியந்
* துருவிலி திறம்பேசுவார்
உத்தமர் நலத்தினைக் கண்டிகழு வார்பயந்
† தொன்னர் குணம்புகழுவார்
மருவுமனை யாட்டிதனை மனதினினை யார்வேசி
வஞ்சியுட னேகொஞ்சுவார்

* உருவிலி - மன்மதன்.
† ஒன்னர் - பகைவர்.

மகிமைபெறு பெரியோர்க ணேசமவை யாரம்ப
மடையரோ டுறவாடுவோர்
கருதரிய கீர்த்திப்ர தாபமழி யாக்கொடுங்
கருமியிவ ராகுமன்றோ
கஞ்சனிகர் நற்ருச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (53)

விரைவிலடக்க வேண்டுவன இவையெனல்.

செல்லாத விவகார மேசெயுந் தீயரைச்
செப்புமொழி தப்புவோரைத்
தீதுறுந திருடரைக் கொலைசெயுங் கொடியரைத்
தேகத்தின் மிக்கபிணியை
நல்லார்கள் கற்பைக் கெடுக்கின்ற மூர்க்கரை
நஞ்சுற்ற ஜந்துக்களை
நலமிலாத் துட்டமிரு கங்களைக் குலமங்கை
நன்மைவழு வுஞுசெய்கையை
எல்லோரு மொருமித நடாததி தெனச்சொல்லு
மேலாத காரியத்திற்
கிசைகின்ற பேர்களையும் வெகுஜன விரோதமுற்
றெளியவர் தமைக்கெடுக்குங்
கல்லாத முழுமடையர் தம்மையுங் கடுகெனக்
கண்டிக்க வேண்டுமென்றோ
கஞ்சனிகர் நற்ருச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (54)

இவர்க்கிவை துரும்பெனல்.

சலியாம லென்றுங் கொடுக்குந் தியாகியர்
தமக்கு * வித் தந்துரும்பு
சரீரத்தி லபிமான மெண்ணாத துறவியர்
தமக்கரச னோர்துரும்பு
வலிமருவு ரணரங்க சூரனுக் கெதிராளி
வன்படைகளோர் துரும்பு
மகிமைபெறு பேரின்ப சாதகர்க் கழகான
மாதர்போ கந்துரும்பு
பலகலைக ளாராய்ந்த பண்டிதர்க் கரிதான
பதமிலாக் கவிதுரும்பு
பரமனடி பரவுமெய்ஞ் ஞானியர்க் கற்பர்தரு
பலனலவினை லாந்துரும்பாம்
கலியரசு முதலான தருமருவு சோலைசெறி
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (55)

இதனினு மிதுநன்றெனல்.

வெருவுறச் செய்துறா தீவதினு மின்சொலால்
வெள்ளிலை யளித்தனன்று
வேசிமனை யமனியினு மரியாதை யொடுமனைவி
மேவுதரு பாயலேகன்

* வித்தம் - திரவியம்.

றருமைதெரி யாதவரொ டுறவுகொண் டாலேதி
லறிஞரொடு பகைநன்று
அருசொன்மொழி யறியா ரளிக்கின்ற வெகுமதியி
லறிஞாசிர மசைதனன்று
திருவுலவு செல்வமொடு நோயால் வருந்தலிற்
றிடமேதக வறுமைநன்று
தோநதவுத் யோகத்தி னித்யுகண் டதிலுஞ்
செய்பயிர்த் தொழில்கணன்று
† கருதலர்க ளுறவினும் முரகவிட நன்றுகான்
காநதநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (56)

இவர்க்குறுதி யிவையெனல்.

மன்னவர் தமக்குறுதி சதுரங்க சேனைகள்
மானிடர்க் குறுதியறிவு
மந்திரி தனக்குறுதி சமயோசி தந்தெரிதல்
மறையவர்க் குறுதிவேதம்
நன்னகர் தனக்குறுதி செங்கோலி னுநகை
நாவலர்க் குறுதிகல்வி
நம்பனடி யோர்க்குறுதி மெய்யன்பு வளமேவு
நல்லவர்க் குறுதிமேன்மை
இன்னிசைய ருக்குறுதி யிடறுசை மிக்கபொரு
ளீகையோர்க் குறுதிநேயம்

† கருதலா - பகைவர்.

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY

இல்வாழ்வி னுக்குறுதி நன்மனைவி கணிகையர்க்
கெழில்செய்து கொள்வதுறுதி
கன்னியர் தமக்குறுதி கற்புடைமை யல்லவோ
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (57)

இதனுலிவை வசமாமெனல்.

புளகமுறு கல்வியே வுலகவச மாம்பத்தி
புரிவதே தெய்வவசமாம்
போற்றுமரி யாதையே பாவலர்க ளோடுநற்
புகழுமுற வோர்கள்வசமாம்
ஒளிதிகழும் விலைமாதர் தங்களுக் கினியவர்க
ளுதவுந்த னத்தில்வசமாம்
உற்றமத வாரண நடத்துவோ னங்கைதனி
லுளவங்கு சத்தில்வசமாம்
வளமருவ நடைபழகு கொடியபரி நெடியகடி
வாளமது தன்னில்வசமாம்
வாத்தியார் கையிலுள * வேத்திரம தேசிறுவர்
வாசிப்ப தற்குவசமாங்
களமருவு கட்செவிகள் மந்த்ரவச மல்லவோ
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (58)

---

* வேத்திரம் - பிரம்பு,

## துறையுற்றுந் துறையுறுதேனல்.

வனமருவு சந்தனக் கட்டைதேய்ந் திட்டாலும்
வாசனை குறைந்துவிடுமோ
வானிலுறு மதியிரவி கட்செவியி னொருவாறு
மறைவுதரி னுங்குறையுமோ
புனிதமுறு கனலிடை யுருக்கினு மடிக்கினும்
பொன்னினிறை யுரைகுறையுமோ
புகழ்சங்கு செந்தழலில் வெந்துநீ றாகினும்
போகுமோ தன்னிறந்தான்
தனிமருவு பெரியோர்க ளற்பராற் கொடுமையுற்
றாலுமவர் மகிமைபோமோ
சாணையிற் றேய்த்தமணி சிறியதா னாலுமது
தன்னொளி மழுங்கிவிடுமோ
கனமருவு பெருமையிவை யென்னாளு நீங்குமோ
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றூச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (59)

## கணிகையரியல்பு.

* அரிதநிற முறுவிரக புருடன்வந் தான்மிகவு
மாசார வுபசாரமாய்
ஆசையொடு பாய்விரித் ததிலெழுந் தருளுமென்
றருகே யிருந்துமயலுக்

---

*அரிதநிறம் - பொன்னிறம்,

சூரியமொழி பேசிவிசு வாசமொடு தாம்பூல
முதவியே சரசமாக
வுத்தரீ யத்தைப் பிடித்திழுத் துச்சிரித்
தொய்யார மாய்நடித்துச்
சரிகையுடை நீவியலர் சூடிவிளை யாடித்
தனத்தைத் திறந்துமூடித்
தாய்க்கிழவி தனையழைத் துன்மருகன் வந்தார்
தரித்திர மொழிந்ததென்றே
கருதரிய கைப்பொருள் பறித்திட முயன்றிடுங்
கணிகையரை நம்பலாமோ
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (60)

நாடகச்சிறப்பு.

வண்ணமிகு வேஷமுஞ் சாதியும் பாஷையும்
வகைபல விருக்கவேண்டும்
வல்லோர்கள் சொற்படி நடாத்தவேண்டும் நல்ல
வாத்திய ஜமாக்கள்வேண்டும்
எண்ணியொரு வர்க்கொருவ ருசிதமிகு வெவ்வே
றியற்றெனி யிருக்கவேண்டும்
இச்சைதரு விகடகவி நயமதா மாகவு
மிருக்கவேண் டுஞ் சபையிலே
புண்ணிய கதாரஸம் புரியுமிங் கிதபதம்
புகழுஞ்ச பாரஞ்சிதம்

பூசுபரி மளவாச நாகரிக நேசநற்
புலவோர் சபாவென்றிடக்
கண்ணிய மிகும்பெரியர் பலபேர்கள் புகழ்நாட
கசசிறப் பிவையல்லவோ
கஞ்சனிகர் நற்ருச ரஞ்சனிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (61)

இதனை இவரன்றி யிவரறியாரெனல்.

பூநதெரியல் மேன்மையைப் புனைவோர்க ளல்லாது
பொல்லாக் குரங்கறியுமோ
புகழ்பெருங் கல்வியிலே கற்றோர்க ளல்லாது
புத்தியீ னர்களறிவரோ
வேந்தர்மனு நீதிநெறி மந்திரிக ளல்லாது
வேழம்பர் தாமறிவரோ
வேதவே தியரியல்பு நல்லோர்க ளல்லாது
வேசிகாந் தர்களறிவரோ
சாந்தகுண சீலமதை யீசனடி யோரலாற்
சண்டாளர் தாமறிவரோ
சந்தன சுகந்தமதை நாக்ரிக ரல்லாது
தடியுழு கடாவறியுமோ
காந்தனியல் மனையர் ளலாற்பொருள் பறித்திடுங்
கணிகையா னவளறிவளோ
கஞ்சனிகர் நற்ருச ரஞ்சனிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (62)

இக்குறையாளர்க்கு இதுவில்லையேனல்.

வலியிலா தவருக்கு * விறலேது நலமான
வயலிலார்க் கேதுவிளைவு
† வாகையில் லாதவர்க் கரசேது வுறுதிமொழி
வழுவுவோர்க் கேதுநன்றி
பலனிலா தவருக்கு முதலேது கனமருவு
பண்பிலார்க் கேதுசுற்றம்
பணமிலா தவருக்கு நகையேது மயலுறு
பரத்தையர்க் கேதுநேசங்
குலமிலா தவருக்கு நலமேது மேன்மைபெறு
குணமிலார்க் கேதுபரிசு
கோபமில் லாதவர்க் ‡ கிகலேது வுதவுறுங்
கொடையிலார்க் கேதுகீர்த்தி
கலையிலா தவருக்கு மகிமையே தென்பர்காண்
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (63)

இதுவுமது.

பதியிலா தவருக்கு நிலையேது புகழ்பெறும்
பணமிலார்க் கேதுமேன்மை
படையிலா தவருக்கு விறலேது பக்தியொடு
பணிவிலார்க் கேதுதெய்வம்

---

* விறல்—வெற்றி.
† வாகை—செயம்.
‡ இகல்—பகை.

மதியிலா தவருக்கு நலமேது கவின்மேவு
மாதிலார்க் கேதுவிழைவு
மானமில் லாதவர்க் கிழிவேது திருமங்கை
வசமிலார்க் கேதுசெல்வஞ்
சுதியிலா தவருக்கு கானமே துசிதமுறு
துறவிகட் கேதுசுற்றந்
தூய்மையில் லாதவர்க் கறிவேது நன்மைதரு
தொழிலிலார்க் கேதுவுணவு
கதியிலா தவருக்கு வுதவிநீ யல்லவோ
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றுரச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (64)

### ஒன்றில்லாமையாற் சிறவாமை.

சந்ததியி லாதவர்க ளெத்தனை விதம்புகழ்
தரிக்கினுங் கனதையில்லை
தயாளமில் லாதவர்க் கெத்தனை யரும்பொருள்
சார்ந்துநன் மேன்மையில்லை
சிந்தைதெளி கல்வியில் லாமலெத் தனைகவிதை
செப்பினும் புலமையில்லை
திரிகரண சுத்தியில் லாமலெத் தனைவிதஞ்
செய்யினும் பூசையில்லை
வந்துமகிழ் வதுவையிற் பந்துஜன மில்லாவி
வாகமும் பெருமையில்லை

மானினியி லாமனைக் கெத்தனை வளம்பெருக
வரினுமில் வாழ்க்கையில்லை
கந்துக மிலாப்படைக் கழகில்லை யல்லவோ
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றூச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (65)

## விரைவிற் கெடுவன விவையெனல்.

மோனையொடு திகழெதுகை யில்லாத கவிதையும்
மூ*தரங் கூறுலாபமும்
மூர்க்கர்விசு வாசமும் மூடருயர் நேசமும்
மூப்பிலாக் குமரிவாழ்வுந்
தானையொடு சதுரங்க சேனையில் லாவரசு
தலைவரில் லாதநாடுஞ்
சத்திய மிலாதவிவ காரமும் புகழ்பெறுந்
தருமமில் லாதபொருளுந்
†தேனருட னுறவுகொண் டாடலும் வினையமாய்த்
தெரிவைதரு மதமோகமுந்
‡ திருவிலி ப்ரபுத்வமுங் கடைதிறப் பில்லா
திருக்கின்ற நிறையேரியுந்

---

* அரங்கு—சூதாடுமிடம்.
† தேனர்—திருடர்.
‡ திருவிலி—அமங்கலி.

கானலிற் றீயின்முன் ¶ மாடுறு தருக்களுங்
கடுகெனக் கெடுமல்லவோ
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (66)

தீநெறிவிலக்கல்.

செல்லாத விவகார மேசெய்ய வொண்ணாது
செய்நன்றி கொல்லொணாது
தேவதா ப்ரார்த்தனைகள் செய்துகொண் டதனைச்
செலுத்தா திருக்கொணாது
வல்லோர்கண் முன்னின்று வாதஞ்செ யொண்ணாது
வாய்மையை மறுக்கொணாது
மாதாபி தாவொடுவி ரோதஞ்செ யொண்ணாது
வசைமொழி வழங்கொணாது
நல்லோ ருடன்கூடி வெகுகால மாய்வந்த
நட்பைப் பிரிக்கொணாது
நம்பனடி யோரைப் பழிக்கொணா துலகத்து
நன்னடை தவிர்க்கொணாது
கல்லாத மூழமடையர் சகவாச மாகாது
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (67)

---

¶ மாடு—சமீபம்.

**திரும்பாதவை யிவையெனல்.**

ஆரணை கடந்திட்ட வெள்ளமும் வலையினி
லகப்பட்ட மான்கூட்டமும்
அஞ்சாது திருடர்கள் கைக்கொண்ட வுடைமையும்
ஆவிற் கறந்தபாலும்
வீரரண சூரர்முன் னேர்ந்திடும் பகைவரும்
வேசிக் களித்தபொருளும்
விடவரவு வாய்தனி லகப்பட்ட * நீகமும்
வேங்கைமுற் பட்ட † மறியுந்
தாரணியி லேவீடு தணலா லெரிந்ததுந்
தருமன் கவர்ந்தவுயிருந்
தாரைவார்த் துத்தந்த சொத்துக்க ளுந்திரைச்
சலதிமுழு கியகப்பலுங்
‡ காரணன் கைக்கேறு பொருளுந் திரும்புமோ
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றூச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (68)

**இவர் பகையாகாதெனல்.**

அருந்தவத் தோர்பகையு மாச்சாரி யன்பகையு
மறியுமுற வோர்கள்பகையும்

---

* நீகம்—தவளை.

† மறி—மான்.

‡ காரணன்—அரசன்.

அடுத்துக் கெடுக்கின்ற கொடியோர்கள் பகையுநூ
லாய்ந்த*முனி வோர்கள்பகையும்
பெருந்தன மிகுத்தோ ருடன்பகையு மூரினுட்
ப்ரபலமுடை யோர்கள்பகையும்
பேசரிய கவிவாணர் தம்பகையு நீடிய
† பெருந்தகைய ரோடுபகையும்
வரும்பிணி யகற்றிடு மருத்துவர்கள் பகையுமிகு
வல்லகரு ணீகர்பகையும்
மந்த்ரவா தியர்பகையும் விகடகவி பகையுநல
மருவுவோர்க் குதவாதுகாண்
கருமபுன றிளைக்கப் பெரும்†பவ மொழித்திடுங்
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (69)

## மோசப்பரத்தையரியல்.

விலைமாது மனைதேடி யதிமோக மாகவொரு
விடபுருடன் வந்தணைந்தால்
மிக்கவுப சாரமோ டாசனம் விரித்ததின்
மீதெழுந் தருளுமென்பார்
தலையசைத் தபினயங் காட்டுவார் தட்டிலே
தாம்பூல முதவியன்பாய்த்

---

* முனிவோர்—மறையோர்.
† பவம்—பாவம்.
‡ பெருந்தகையர்—அரசர்.

தாசியென் றாசையுன் மீதன்றி வேறில்லை
சத்தியமி தென்றுரைப்பார்
முலையது குலுங்கச் சிரித்துமது கைவைர
மோதிரந் தந்துவிட்டுடன்
மோகந்தவிர்த்திடுஞ் ¶ சித்தச னெனச்சொல்வர்
மோசப் பரத்தையன்றோ
கலைவலா ரிமையோர் களித்துக் குளிக்கவரு
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றூச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (70)

## கலிகாலவியல்.

தந்தைதாய் மொழிதனை மறுப்பார்கள் பெரியமூ
தாதையைச் சீறுவார்கள்
சற்சனர்க ணட்பைத் தவிர்ப்பார்க ளிழிவான
தடியரோ டுறவாடுவார்
சிந்தைதெளி கல்வியறி வில்லோர்க ளைக்கவிச்
சிங்கமென் றேசொல்லுவார்
திக்கெலாம் புகழ்பரவு தக்கவித் வான்களை
சீவனோ பாயனென்பார்
பந்தமிகு * மந்திரத் துளதேவ ருருவினைப்
பரியாச மேபண்ணுவார்

¶ சித்தசன்—மன்மதன்.
* மந்திரம் - தேவாலயம்.

பரமனடி பரவுமெய்ஞ் ஞானியரை யிவனொரு
பகற்சன்னி யாசியென்பார்
கற்கமணி வேசியைத் தழுவியே மனைவியைக்
கைவிடுவர் காலமன்றோ
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (71)

பூர்வவினைப் பயனிவையெனல்.

தனமோங்கி வளர்கின்ற பொருளாள ருக்குரிய
சந்ததி யிலாததென்ன
தாரித்ரி யத்திற் றவிப்போர்க ளுக்கதிக
தனையருண் டாவதென்ன
சினமோங்கு மூர்க்கர்க் கருந்ததி யெனத்தக்க
தேவிவாய்த் துற்றதென்ன
திகழுக் கொடுக்கமன முள்ளோர் களுக்கதிக
திரவியமிலா தென்னவிற்
பனமோங்கு நாயகர்க் கிழிவான துர்க்குணப்
பாரிவந் துற்றதென்ன
பலபிணி தொலைக்கின்ற பண்டிதர்க ளேயினுற்
பரதவித் திடுதலென்ன
கனமீங்கு மிவையெலா முற்பிறப் பிற்செய்த
கன்மபல னருமன்றோ
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (72)

## வேட்டகத்தினியல்.

பற்றலுறு நெறியினு லத்தையனை தேடிப்
பரிந்துமரு மகன்வந்திடி.ற
பாய்விரித் ததிலெழுந் தருளுமென் றேசொலிப்
பயபத்தி விசுவாசமாய்
உற்றபல பக்ஷணம பாயசம் பால்கலந்
துசிதமா கச்சமைத்தே
யுண்ணவா ருங்களென றன்புடன் பேசியே
வுபசார மேசெய்குவார்
சற்றுநாண் மூன்றுகில் வெற்றிலை கொடுப்பதுந்
தவறியே போகுமறுநாள்
தாமதித் திடுவதே னலுவலிலை யோவெனச
சாடையா கப்பேசவுங்
கற்றவர்க ளாகையால் மருகனம் மனையிலொரு
கடிகையு மிருக்கவசமோ
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (73)

## கல்விப்பொருட் சிறப்பு.

புனைவுறுங் கல்வியாம் பொருளைப படைத்திடிற்
புவனமெழல் லாந்துதிக்கும்
பொன்போல வேறொருவர் கைதனி லடங்காது
போற்றிப் புதைக்கொணுது
வினைமருவு திருடருங் காணும லேபெற
விரும்பப் படாதசெல்வம்

மிக்கநய மதுரமொடு கவிமாரி பொழிகின்ற
மேகசஞ் சாரமிதனை
மனையிலொருவர்க்கொருவர் செலவிடக் கூடாத
மனமாளி கைப்பெட்டியில்
வைக்கின்ற மாமணிகள் மற்றொருவ ரிச்சித்து
வௌவப் படாதுகண்டாய்
கனமருவு வெண்கமலை நாமகள் விலாசமுறு
கல்விச் சிறப்பல்லவோ
கஞ்சனிகர் நற்றுசு ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (74)

## குறிப்பறிதல்.

மேனியிற் கொடியநோய் தாதுபார்த் தறியலாம்
மெய்ஞ்ஞானி யென்பவர்தமை
மேன்மையா லறியலாம் வீரரைச் சமர்புரி
விசேஷத்தி னாலறியலாம்
மானினி நடக்கையவர் கானடையி னுலுமிரு
வடிவிழியி னுந்தெரியலாம்
மாவித்து வான்களைக் கற்றோர்க ளைக்கொண்டு
வாதுசெய் வித்தறியலாம்
நானில மதிற்கொடுஞ் செய்கையுடை யோர்களை
நடத்தையா லறியலாகும்
நம்பனிணை யடிபூசை செய்யுமெய் யன்பர்தமை
நற்குசியி னாலறியலாம்

கானமலர் * மோதவங் காற்றடி வசத்தினாற்
கண்டுகொள லாகுமன்றோ
கஞ்சனிகர் நற்றூச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (75)

அவரவர்க் குரியவை.

† விஞ்சையொடு மேன்மையா யவையெலாந் திகழுற
விளங்கவைப் போன்றந்தையாம்
விமரிசை யுடன்கற்ற கல்வியாற் றந்தையை
விளக்குவோ னேபுதல்வனும்
அஞ்சலுறு தெய்வமென் றனுதினங் கணவன்மீ
தன்புசெய் பவள்மனைவியாம்
அரியநட் பாளர்போ லெக்நாளு மெய்ம்மொழிக
ளாய்ந்துரைப் போன்சோதரன்
நெஞ்சமகிழ் விதரணை தெரிந்துதவி செய்துமுன்
னிற்குமவ னேயனுகும்
நேயமூட னின்றுதன் றலைவன்மொழி கடவாத
நெறியினிற் போன்சேவகன்
கஞ்சமல ரிரவியைக் கண்டிதழ் விரித்திடுங்
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றூச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (76)

---

* மோதவம் - வாசனை.

† விஞ்சை - கல்வி.

## இவையில்லாவிடிற்று யநுறுமெனல்.

மாரியில் லாதபயிர் குழவியில் லாதபெண்
வருப்படி யிலாதசெலவு
* வாகையில் லாதபடை மேகமில் லாதமயில்
மதியமில் லாதகுமுதம்
† ஏரியில் லாதநில ‡ வேந்தலில் லாவுலக
மிசையறிவி லாதகணிகை
இரவியில் லாத ¶ மரை யினிமையில் லாதசுவை
யிச்சையில் லாதமனைவி
சூரியனி லாதபகல் சூசனையி லாதசொற்
றூபமில் லாதபூசை
சுத்தியில் லாததரை சுபகரமி லாதமொழி
தூய்மையில் லாதமனது
$ காரிகை யிலாதமனை யிவையெலாம் புவிதனிற்
§ கலுழா திருக்கவசமோ
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (௬)

---

* வாகை - வெற்றி.

† ஏரி - கிணறு.

‡ ஏந்தல் - அரசன்.

¶ மரை - தாமரை.

$ காரிகை - பெண்.

§ கலுழ்தல் - துயருறல்.

## உயர்ந்தபொருளிருக்குமிடத்துத் தாழ்ந்தபொருளுமுண்டெனல்.

தாமரை செழிப்புற் றிருக்கின்ற வாவியிற்
|| சைவல மிகுத்திருக்குந்
* தாணுவிற் றேனுண்டு சென்றொருவ ரணுகாது
† சஞ்சரிக முற்றிருக்கும்
வாயமிகு சந்தன மரத்தணுகி டாமலே
வல்லரவு சூழ்ந்திருக்கும்
வாணியின் விலாசமிகு கவிராஜ சங்கத்தில்
மடையருவ் வதிந்திருப்பார்
பூமியிற் ‡ கேதகைப் புட்பமுண் டணுகாது
பொல்லாத முள்ளிருக்கும்
புகழுக் கொடுக்குமவர் பெயரைக் கெடுக்கவரு
¶ பூரிய ரிருப்பரன்றோ
$ காமியம தெய்தக் களித்துக் குளிக்கவரு
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (78

---

|| சைவலம் - பாசி.

* தாணு - மலை.

† சஞ்சரிகம் - வண்டுகள்.

‡ கேதகை - தாழை.

¶ பூரியர் - கீழ்மக்கள்.

$ காமியம் - இஷ்டகாமியம்.

**சமயத்துக்குதவுமவை.**

சொன்ப திற்பெற்ற பிள்ளையும் நல்லோ
ரிடத்திற் கொடுத்தபொருளும்
இலக்கண விலக்கியக் கடலெலாம் பருகினன்
றேப்பமிட் டுயர்வித்தையுஞ்
சீர்ந் தொழிற்குள்ள மைந்தநி லுயர்ந்திடுஞ்
செயபொன்னி * னூதியத்திற்
சிறிதுசிறி தாகவே ராஜகன சாலையிற்
சேர்த்துவைக் கின்றநிதியுஞ்
சாரும் புலிக்குட் டகுந்தவள மேவுந்
தலத்திற் றெளித்தவிதையுந்
தாலம் புரக்கின்ற வேந்தர்விசு வாசமுந்
தனவான்க ளிடைப்பரி
காரணஞ்செய் நன்றியுங் கைப்பலன தல்லவோ
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே, (79)

**துணம்மாறதெனல்.**

கருதுமந் திரமோதி † மகரந்த மூட்டினுங்
‡ காஞ்சிரை கரும்பாகுமோ

---

* ஊதியம் - இலாபம்.

† மகரந்தம் - தேன்.

‡ காஞ்சிரை - எட்டி

MAHAMAHOPADHYAYA

கநககிம் மாசனத் தரசுமுடி சூடினுங்
கவிகுலச் செய்கைபோமோ
பொருதவரு ரணசூர ருடனினத் தானுமவர்
¶ பூசலிற் பின்னிடைவரோ
$ போகியத னுக்கமு தளித்தே வளர்க்கினும
புன்கடு வலாதுதருமோ
தருதலில் லாப்பரம லோபியர்க் குப்புத்தி
சாற்றிடினு மீகைவருமோ
சற்றுநல மில்லாத சண்டாள ருக்கரிய
சன்மார்க்க நீதிவருமோ
கருதரிய முழுமூட ருக்கரிய மேலான
கனதைபுண் டாக்கவசமோ
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (80

இதனுலிவை பாவமெனல்.

கருவினிழ லில்லாத நெடுவழி நடப்பதே
தாள்செய்த பாவமாகுஞ்
சச்சிதா னந்தனைப் பணியாத தேதன்
சரீரமது செய்தபாவம்
மருவுமனை யாட்டிதுர்க் குணியாக வாய்ப்பதே
மணமகன் செய்தபாவம்

¶ பூசல் - உயுத்தம்
$ போகி - பாம்பு.

மக்களுயர் தேட்டாமை யுண்ணு திருப்பதே
மாதாபி தாசெய்பாவம்
பருவமதில் மக்களுண் டாகாத தேயனு
பவிப்பவர் புரிந்தபாவம்
பாக்கியம துற்றபோ தொருவர்க்கு மீயாமை
பாணிசெய் பாவமாகுங்
கருவிழிப் பார்வைகுரு டாவதே யவர்களிரு
கண்கள்செய் பாவமன்றோ
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (81)

## திருமகள் சிறப்பு.

வனசமலர் மங்கையின் றிருவருள் வதிந்திடில்
வன்மொழிகள் நன்மொழியதாம்
வாராத பொருளெலாம் வந்திடும் மேலான
மரியாதை யும்வழங்குந்
தனதான்ய சம்பத்து மிகவுமுண் டாம்பெருந்
தகையர்விசு வாசமுண்டாந்
தாராள மாகவிச் சபையில்வர லாமெனத்
தக்கோ ரெழுந்திருப்பார்
இனமேவு முறவோர்கள் கொண்டாடு வார்கடம்
மிழிகுலமு மேம்பாடுறும்
ஏந்தலிட மேகியொரு வாய்வார்த்தை சொன்னலு
மேலாத வேலைமுடியுங்
கனமேவு செங்கமல வாழ்க்கைநல னுற்ற
காட்சியிவை யாகுமன்றோ

கஞ்சனிகர் நற்முக ரஞ்சனிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (82

மேன்பாடிலாதவர்.

மானமில் லாதவர்க் கெத்தனை விதத்தாழ்வு
வந்திடினும் வெட்கமில்லை
வல்லமை யிலாவரச ரெத்தனை விதப்படை
வகிக்கினும் வாகையில்லை
ஞானமில் லாதவர்க ணன்னூல் படிக்கினும்
நாகரிக மேன்மையில்லை
* நாநல மிலாதவர்க் குபகார மெவ்வளவு
நல்கினும் நன்றியில்லை
தானதரு மந்தயவி லாதவர்க் குப்புத்தி
சாற்றினும் மீகையில்லை
சாந்தகுண மில்லாத மூர்க்கருக் குப்பெருந்
தகைமையுண் டாவதில்லை
† கானவர்க் கெவ்வளவு நீதிசொலி னுஞ்ஜீவ
காருண்ய முண்டாகுமோ
கஞ்சனிகர் நற்முக ரஞ்சனிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (83)

நற்சகுனம்.

திருமருவு கன்னிகை சுமங்கலி பசுக்குழாந்
திகழுமெனு மிச்சம்பழங்

---

* நாநலம் - சத்தியம்.
† கானவர் - வேடர்.

‡ சிந்துரங் ¶ கந்துகம் பாறயிர் மதுக்குடந்
தீபமுல காளுமன்னன்
கருவுதவு முக்கனியொ டக்கினிச் சுடருடன்
சகலவாத் தியமுழக்கந்
தமபதி மணக்கோலம் வேசிய கூதைமுத்து
தக்கமறை யோர்களிருவர்
மருவுசெறி யிதழ்விரியு நாண்மலர் மாலைகள்
மாம்ஸமங் கலசுபகா
மஞசளொடு குங்குமங் கந்ததாம் பூலமலி
வரிசைக ளெடுத்துவரலுங்
$ கருமுகையும் ? வேழமோ டிவையெலா நலமெனக்
கருதுபெரி யோர்கழறுவார்
கஞசனிகர் நற்குச ரஞசலிசெய் மெய்தசேச
கஞசகிரி சித்தேசனே. (84)

துற்சகுனம்.

விதவையொரு வேதியன் காஷாய தாரியொடு
விறகுசுமை வேல்நமபியான்
வில்லமபு வாச்சியுளி கோடாலி துப்பாக்கி
வேடனொடு * மேதிபுலையர்

‡ சிந்துரம் - யானை.
¶ கந்துகம் - குதிரை.
$ கருமுகை - இருவாக்ஷி.
? வேழம் - கரும்பு.
* மேதி - எருமை.

புதியமட் பாண்டமுந் தலைகிரித் தழுதலும்
† புலைவியா கியமங்கையும்
புலிகரடி சுழல்காற்றொ டிடிமின்னல் மழையும்
புகைந்துவரு கின்றதீயும்
பதிதனி லிருந்துவரு மெதிரினிற் பூனையும்
பாம்பையுங் கண்ணினாலே
பார்க்கவே கூடாது நீர்க்குட முடைத்தலும்
பாவையோர் நிருவாணமும்
கதிர்பரவு புவியதனி லபசகுன மல்லவோ
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றாச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (85)

மானமில்லாமற் பிழைப்பவரிவரெனல்.

தருமபத் தினியுடைய தாதைமனை நிலையென்று
தங்கிவாழ் கின்றபேருந்
தம்புதல்வி வாழ்மனையி லன்பாக வேவந்து
சார்ந்துவாழ் கின்றபேரும்
அருமைதெரி யாதமுழு மூடர்மீ திற்கவிதை
யழகா யுரைப்போர்களும்
அரியமனை யாட்டிதனை யப்புறஞ் செலவிடுத்
ததினாற் பிழைப்போர்களும்
பெருமைதரு செல்வமுண் டாயினுந் தாழ்வான
பிச்சைக ளெடுப்போர்களும்

† புலைவியாகியமங்கை - வீட்டுக்குவிலக்காகிய பெண்.

பேசரிய வெகுகடன் பட்டுக் கொடாமற்
பிதற்றித் தெழிப்போர்களுங்
கருதரிய மானமில் லாமற் பிழைக்கின்ற
கயவரிவ ராகுமன்றே
கஞ்சனிகர் நற்றூச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (86)

### நல்லோர்புகழ் நிலைப்பேறு.

புவியதனி லையரிச் சந்திரன் வாய்மையாற்
புலையனுக் கடிமையானான்
புள்ளினுக் காகவே சிபியென்னு மன்னவன்
புகழுடற் றசையளித்தான்
தவவிரத மகிமையாற் றேவேந்தி ரற்குத்
ததீசிமுது கென்பளித்தான்
தனதுகற் புடைமையின் நெறியினால் வேடனைத்
தமயந்தி நீறாக்கினாள்
பவனடிக் கன்பனாய் மார்க்கண்ட னேமனைப்
படியிலுரு ளச்செய்தனன்
பத்துமுடி ராவணன் பிரிவால் விபீஷணன்
பாரினிற் புகழெய்தினன்
கவிகுலத் தநுமனை யிராமனா லுலகெலாங்
கைகுவித் திடுமல்லவோ
கஞ்சனிகர் நற்றூச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (87)

இதனுலிதன் பெருமையழியுமெனல்.

மரவைர மதனைப் பிளக்கின்ற கோடாலி
வாழையால் முனைமழுங்கும்
மழையனைய கவிமாரி பொழிகின்ற கவிராஜ
மடையராற் றேல்வியடைவர்
அரவினம் * புள்ளரசு நிழலால் விடங்கெடும்
யானையரி யாலடங்கும்
அலலல்புரி யுங்கொடியர் வீரப்ர தாபமுள
வதிகாரி யாலடங்கி
வெருவுவார் வெள்ளிசெம் பொன்னினங் கடுகளவு
வெங்கார மதிலுருகிடும்
வேல்விழிக் கணிகையின் சேர்க்கையா லழகான
மேனிகுலை யும்பெருமைபோம்
† கரவர்தம் முறவினால் மேன்மையக லாமலெக்
காலமு மிருக்கவசமோ
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (88

மானமும் நல்லொழுக்கமும்.

மானமுள் ளோர்களொரு வசவுகொள் ளார்கடின்
மார்க்கத்தி லேதலையிடார்
வாராத வாபத்து வந்தாலு மேலான
வாய்மைநெறி வழுவிநடவார்

* புள்ளரசு - கருடன்.
† கரவர் - திருடர்.

தானகன் னன்றனது வுயிரைமதி யாமலே
தன்செவிக் குண்டலத்தைச்
சவையிற் கழற்றிக் கொடுத்தனன் பதிவிரதை
சாவளவு நீதிவழுவாள்
ஞானமுறு சிவயோக சாதனிய ரெந்நாளு
நாரியர் மயக்கிலுழலார்
நம்பனிணை யம்போ ருகப்பதம் பணிகின்ற
நாயனு ரமணைவெல்வர்
கானலிற் றிரிகின்ற கவரிமான் மயிரொன்று
கழியவுயிர் விடுமல்லவோ
கஞ்சனிகர் நற்குச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (89)

## கடவுள்செய லிவையெனல்.

திருமகள் விலாசமிகு செல்வர்க ளிடத்திலே
திகழ்கல்வி யில்லாததுந்
திறலுற்ற கல்வியறி வாளருக் குயர்வான
செல்வம்வந் தெய்தாததும்
மருமகளும் மாமியும் விவேகமுட னொருமித்து
வாழாது கலகமிடலும்
மதனசுக முறுவோர்கள் பரிபக்கு வத்திலே
மனைவிய ரிறந்திடதலுந்
தருணியர்க ளின்பசுக மனுபவிக் கும்பொழுது
தலைவோ ரிறந்துவிடலுஞ்

சாசுவத நினைவுற்ற திடதேக முடையோர
 தடாலென்று மரணமுறலும்
கருமபூ மியினிகழு மிவையெலா மகிமைபெறு
 கடவுளின் செயலல்லவோ
 கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
 கஞ்சகிரி சித்தேசனே. (90)

**பெருமையிற் சிறுமையுஞ் சிறுமையிற் பெருமையும்.**

இசைமருவு பாறயிர்நெய் விலைகூறி யெங்கணு
 மெடுத்துக் கொணர்ந்துவிற்பார்
 இழிவான மதுவகை யிருக்குமிட மேசென
 றியம்பும்விலை யைக்கொடுப்பார்
நசைமருவு மேன்மையோர் ஜீவன மிலாதலைவர்
 * நாணிலோர் பெற்றபேர்கள்
 நரபதிக ளாற்பெரிய வுத்யோக முறைகளை
 நடாத்திவெகு கீர்த்திபெறுவர்
அசலையதில் வேழம்பர் வரவுசிறி தாயினும
 அரியகர ணம்போடுவர்
 அழுகொழுகும் வேசியர்க ளபிநய வசத்திறை
 லளவிலாப் பொருள்பறிப்பர்
கசிவரிய விலைமாத ரவைவருவ ரிசைபெறுவர்
 ‡ காந்தைமனை நீங்கவசமோ
 கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
 கஞ்சகிரி சித்தேசனே. (91)

---

* நாணிலோர் - வேசியர்.

‡ காந்தை - குடித்தனத தலைவி.

### வாழ்க்கைத்துணை நலம்.

நாணமட மச்சம் பயிர்ப்பெனும் பெண்மையா
* நாற்குண நிறைந்துகொண்ட
நாதனை தெய்வமென் றனுதினம் பணிபுரியு
நன்னட வடிக்கையுடனே
பூணுமணி யணிகலத் திச்சைக ளொழித்துநற்
புத்திசா துரியத்துடன்
புனிதமுறு குலமதிற் றோன்றியவ ளாய்ப்பெறும்
புகழ்கல்வி நெறியமைந்து
வேணபணி விடைசெய்து மாமனார் மாமிகள்
விருந்தினர் களுக்குமினிதாய்
மிக்கவுப சாரமுற் றடிசிற் கைதேர்ந்து
மேன்மையுட னேகணவனைக்
காணுமுன் னேநின்று கைகட்டி நிற்றல்வாழ்க்
கைத்துணைக் குரியதன்றோ
கஞ்சனிகர் நற்றச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (92)

### இதனை விளக்குவதிதுவெனல்.

குடிநலம் விளக்குவது நிலவிளைவு மேன்மைபெறு
கோவிளக் குவதமைச்சு
குலமுறை விளக்குவது விற்பன விவேகநற் .
குணம்விளக் குவதொழுக்கம்
படிதனை விளக்குவது மாதமொரு மும்மாரி
பரிவிளக் குவதுவேகம்

பத்தியை விளக்குவது கண்ணினீர் வளமுறும்
பயிர்விளக் குவது * கொண்டல்
† அடிகளை விளக்குவது பேரறிவு புகழ்நீதி
யணிபெற விளக்குவது நூல்
அன்னைதந் தையர்களை விளக்குவது நற்புதல்வ
ராநகம் விளக்குநீறு
கடிமணம் விளக்குவது வுறவினர்க ளோடுமின்
கருணையுங் கூடியன்றோ
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (93)

## அரிதெனல்.

மனிதராய்ச் சனனம தெடுப்பதரி ததனினும்
மறுவிலாப் பிறவியரிது
மாசற்ற கல்விநல மெய்தலரி ததனினும்
வாய்க்குமெய்ஞ் ஞானமரிது
புனிதமிகு வித்தையோ டுலகநடை திகழும்
பொருட்செல்வ மெய்தலரிது
புத்தியுயர் பக்தியாய் ஜீவகா ருண்யமும்
புகழுக் கொடுத்தலரிது
தனிமருவு தானதரு மங்களுஞ் செய்துநற்
சம்பாஷ ணைதிசெய்து

---

* கொண்டல்—மேகம்,

† அடிகள்—குரு.

தாய்தந்தை போற்பரிவு செய்கின்ற மக்கண்மேற்
றருமனெறி பாசநீங்கிக்
கனமருவு மிவர்கணல மெய்தத் ‡ துறக்கமுங்
கதவந் திறக்குமன்றோ
கஞ்சனிகர் நற்றூச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (94)

## பேரிதெனல்.

பெரிதுபெரி தென்பதிற் புவனமே பெரிததைப்
பிரமன் படைத்தானெனிற்
பிரமனோ வுலகளந் தோனுந்தி வந்தவன்
பீதாம்பரன் றிரையெறி
அரியதிற் றுயிலுவோ னலைகடற் குறுமுனிவ
னங்கையினி லாபோசனம்
அகத்தியன் கும்பத் துதித்தவன் கலசமோ
அவனிதனி லேசிறியமண்
உரியபுவி யொருதலைச் சுமைசேட னுக்கவனு
முமையவள் விரலிலழுகாய்
உறுகின்ற மோதிர மதாய்விளங் குஞ்சத்தி
யுயர்பரம னிடமொடுங்குங்
கருதரிய சிவனையு ளொடுக்குமடி யவர்பெருமை
கழறுதற் கெளிதாகுமோ
கஞ்சனிகர் நற்றூச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (95)

‡ துறக்கம்—முத்தியுலகம்.

### இனிதேனல்.

பூவுலகி லேமனித ருக்கினிது பேரறிவு
புகழுமெய்ஞ் ஞானமினிது
பூதநா தன்பாத பூசையக லாமலே
போற்றித் துதித்தலினிது
மேவிய தபோதனர்க ணேசவிசு வாசமது
மேம்பட வகித்தலினிது
வேலைசூ ழுலகெலாம் பணிகின்ற மெய்ஞ்ஞான
மேதாவி யாவதினிது
யாவள மிகுந்தோங்கு மடியார் குழாத்தினிடை
வசனவசி தப்ரஸங்க
மருவுகுரு நாதனென மேலவர் துதிக்கின்ற
மகிமைப்ர தாபமினிதாங்
காவலர்கள் மேலே மிதக்கவரு வெள்ளமுறு
காந்தநதி தீரமேவுங்
கஞ்சனிகர் நற்றூச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (96

### ஆங்கிலேய துரைத்தனப்பெருமை.

செந்திரு விருந்துவ்வு விண்டுவின் கையிலுறு
திகிரியா ணைக்கமைந்து
தேசுறிய வெண்மையர்க ளிந்தியா வென்னுமித்
தேயம் புரக்கவந்து
விந்தையுள வாங்கிலக் கல்வியைப் பரிவுற
விளங்கவைத் துலகமகிழ

விக்டோரி யாசக்ர வர்த்தினி யெனத்திகழ
வீரத்வ ஜத்தைநாட்டி
பந்தமிகு சட்டதிட் டஞ்செய்து பாரோர்
படிக்கப் பழக்கிவைத்தும்
பற்பல பரிட்சையிற் றேறுவோர்க் குத்யோக
பலிதமுண் டாக்குகின்றார்
கந்திருவ ரோவிவர்க ளாந்துகண் டத்திலுங்
காணாத விடமுள்ளதோ
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (97)

இதுவுமது.

போக்குவர வுக்குரிய கானடைப் பாதைகள்
புவனமெங் கும்புதுக்கிப்
புதியநிழ லுளதருப் பாதைமுழு திலுமுறப்
போற்றிச் செழிப்பாகவே
ஆக்கிவைத் ததுமலா லச்செந்தி ரங்களும்
அட்சர விதங்கள்பலவும்
அதிசய மிகும்பெரிய பலவகைக் கடிதங்க
ளவையெழுது கோலனேகம்
ஊக்கமுள பற்பல பணிச்சாலை யுஞ்செய்யு
மூத்தியோ கச்சாலையும்
உபகார மாகவே யெந்திர வசத்தினு
* லுதகங் கொணர்ந்துதவியுங்

* உதகம்—தண்ணீர்.

காக்குமவ ருககுரிய பாக்கியமெ லாமுனது
கருணையா லுற்றதன்றோ
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேசு
கஞ்சகிரி சித்தேசனே. (98)

இதுவுமது.

தந்தியெனு மொருநெடிய கம்பியின் வசத்திலே
சாகரந் தாண்டிலண்டன்
சமுதாய மதிலோங்கு சங்கதிகள் முழுவதுஞ்
சலுதியா கத்தெரியவுஞ்
சுந்தர நயந்திகழு மெந்திர வசத்தினாற்
* றாமசக டங்கள்செய்துந்
துரைராஜ சங்கமுஞ் சட்டநிரு மிக்கின்ற
தோன்றலர் குழாஞ்சரியென
மந்திரா லோசனை வகுத்துரைத் துப்பெரிய
மதியுநிதி யுஞ்சிறந்த
மாமக ளுலாவுபுய வன்மையொடு நன்மைதரு
வாகைபெறு தீரவீரர்
கந்துக தளம்பரவு சம்ப்ரம மிகுந்தநற்
காவலர்க ளாகுமன்றோ
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேசு
கஞ்சகிரி சித்தேசனே. (99

இதுவுமது.

திருவுலவு மேன்மையுஞ் சாந்தமும் வாய்ந்துளோர்
தேசாபி மானமுடையோர்
திகழ்தலைச் சீட்டுகள் செக்குடிக் கட்டுகள்
செல்லுநா ணயநோட்டுகள்

* தூமசகடம்—புகைவண்டி.

மருவுபல வர்த்தகச் சாலையுண் டாக்கினர்
மண்டல மெலாமதிக்க
வாழ்விற் சிறந்தனர் தாழ்வற் றுயர்ந்தனர்
வடிவுதிக மும்பலவித
உருவடங் கியநல்ல முத்திரைக் கடிதங்க
ளுண்டுபண் ணித்தந்தனர்
உபகார மேவுந் தபாற்சாலை யெங்கெங்கு
முதவியா கச்செய்தனர்
கருதரிய வெண்மையரி னரசாகூி தனிலுற்ற
கைங்கிரிய மிவையல்லவோ
கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
கஞ்சகிரி சித்தேசனே. (100)

இதுவுமது.

வீட்டுவரி ரோட்டுவரி கேட்டுவரி யும்பல
விருக்கவரி யும்விதித்து
விறகுவரி தொழில்செய்வரி விவகார வரியும்
விளக்குவரி யுப்புவரியும்
சீட்டுவரி யாஸ்திவரி சாலிசா ராயவரி
தேவர்பூ மிக்குவரியுஞ்
சிவில்விவ காரவரி சந்தைவரி யுதகவரி
செய்நஞ்சை புஞ்சைவரியும்
மாட்டுவரி யாட்டுவரி குதிரைவரி வண்டிவரி
மச்சவரி யெச்சுவரியும்
வழிவிடும் டடகுவரி மதுவிறக் கும்பல
மரத்துவரி யும்விதித்துக்

காட்டுவரி யுந்தர விதித்தார்க ளிந்தியா
 கவரன்மெண் டதிகாரிகள்
 கஞ்சனிகர் நற்றுச ரஞ்சலிசெய் மெய்த்தேச
 கஞ்சகிரி சித்தேசனே. (101)

நூற்பயன்.

சீர்மேவு பழனியங் கிரியிலுறை முருகவேள்
 திருவடி தினம்பரவுவோன்
 சேலநகர் வாழ்கவி யனந்தநா ராயணன்
 சித்தேச ரடிசூடிய
பார்மீது நீதிநெறி விஷயமுறு சதகமிப்
 பனுவலொரு நூறுகவியும்
பக்தியொடு மனதிலே படியப் பதித்துப்
 படித்துத் துதிக்குமவர்கட்
கேர்மேவு மிகலோக சகலசௌ பாக்கியம
 தெய்தியுல கம்புரந்தே
 இசைபரவு நாகரிக வைபோக மருவுமோ
 ரேகசக் ராதிபதியாய்க்
கார்மேவு வியனுலகு தேவராற் பூசனை
 கருத்தொடு செயப்பெறுவர்காண்
 கற்பகத் தருவினன் னிழல்பெறுவ ரெழில்பெறுவர்
 கனமுக்தி யும்பெறுவரே.

சித்தேசர் சதகம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

MAHAMAHOPADHYAYA,
V. SWAMINATH...

மகாமகோபாத்யாய டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

மகாமகோபாத்யாய டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்,
சென்னை-20.

# ஜயங்கொண்ட[illegible]

அன்பளிப்பு

மதுரைச்சீர்மை சிவகங்கைச் சமஸ்தானம்
கீழைச்சேவற்பட்டி
இளையாத்தங்குடி எழுநகரமென்றுசொல்லப்பட்ட
நேமநகரத்திலுதித்த
அழகப்பசெட்டியார் குமாரர்
முத்தப்பசெட்டியார் அவர்களியற்றியது.

இஃது
மேற்படியார் பௌத்திரர்
நாராயணஞ்செட்டியார்
கேட்டுக்கொண்டபடி

திருக்கைலாய பரம்பரைச் செங்குந்த சங்கத்தி லொருவராகிய
சிதம்பரம்
அ. இரத்நசபாபதிமுதலியாரால்

சென்னை:
இந்து தியலாஜிகல் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1896.

சிவமயம்.

## உன்னையூர்ப்பாரதியாரவர்கள் இயற்றியது.

ஒங்குபத்மாசூரனைக்கண்டோடியொளித்தார்விசையன்
வாங்குதனுவால்பூசைவாங்கினா—னீங்கிருக்கும்
நன்னியமச்சோழீசனார்செயங்கொண்டாரென்று
வென்னசெயங்கொண்டாரிவர்.

மேற்படியார் பாடிகேட்டதற்குப்பதில்

## மூத்தப்பசெட்டியாரவர்கள், இயற்றியது.

என்னசெயங்கொண்டாரிவரென்றீர்முப்புரத்தைச்
சொன்னமயமாய்ச்சமைத்தசோழீசர்—பின்னுஞ்
சிரித்துச்செயங்கொண்டார்சித்தசனைக்கண்ணா
லெரித்துச்செயங்கொண்டாரே.

---

## சுந்தர முதலியார் சொல்லியது.

### ஆசிரியவிருத்தம்.

திருமதுரைச்சீர்ப்பட்டிளையாற்றங்குடிச்செட்டிசீமானென்னு, மூருமதனனழகப்பனுதவியமுத்தையனெனுமொப்பில்சிங்க, மருமறைசாத்திரங்களோடாகமங்கள்புராணங்களனைத்துந்தேர்ந்து, பெருகுபழமொழிநூறுங்கதைநூறுஞ்சதகமெனப்பேசிற்றுமால்.

---

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

உ

சிவமயம். 1714

# ஜெயங்கொண்டார் சதகம்.

## காப்பு.

### விநாயகர் துதி.

சீர்பொருந்துந் தென்னைமச் செயங்கொண்டசோழீசர் திருப்பேர்வாழ்த்திப், பார்பொருந்துங் குறுவிருத்தப் பாமாலைதனிலுலகப் பழமைச்சொல்லை, யேர்பொருந்துஞ் செந்தமிழால் யான்பாடப்புவியிலுள்ளோரிசைந்துகேட்கக், கார்பொருந்துந் துதிக்கரத்தான்வெயிலுகந்தகணபதிதாள்காப்புத்தானே.

### முருகர் துதி.

நகரமெல்லாம்பணிந்தேத்துஞ் செயங்கொண்டசோழசநாயனார்மேன், மகரநெடுங்கண லுலகவதந்தியைச்செந்தமிழால்யான்வழுத்துதற்கே, யகரமுதலவ்வெழுத்தென்றுதியின்முப்பாற்சொன்னவவன்றாள்போற்றிச், சிகரவரைமீதெழுந்த சிறந்தவடிவேலவன்றாள்சென்னிசேர்ப்பாம்.

### கலைவாணி துதி.

சிலைவேளைவென்றபிரான்றென்னைமநகரில்வளர்செயங்கொண்டார்மே, லுலகிலுள்ளோர்வழக்கமதாய்ச்சொன்னசொல்லைத்தமிழாலேயுரைப்பதற்குக், கலைவாணியாகியுலகுள்ளமட்டும்படிக்கவந்தகவிதைதன்னின், மலர்வேதன்மனைவியென்றன்மனத்திலிருந்திவ்வுரையைவழுத்துவாளே.

## அவையடக்கம்.

பொருளுயர்சிவிர்குளிர்நாடவென்றெமக்குரைத்த பரமர்மீதி
ல், விற்பகர்முன்னுலகமுழக்கமெனெடுத்தொருநூறுவிருத்தஞ்செய்
தோ. மதனைநிகரெனச்செயங் கொண்டார்மீதின்முறைதையன்சிற்றறிவி
னாலே, மற்றகையர் னக்குமுன்னேசிற்றெறும்புநடந்ததெனவசனித்
தேனே.

பாயிரம் முற்றிற்று

---

# நூல்.

---

## வான்மீகர் கதை.

நல்வேடவான்மீகர்சப்தரிஷிகளைச்சேர்ந்தராமமந்த்ரஞ், சொ
ல்லநாவில்லாதகற்றறியாமையினமாராவெனமுன்சொன்னார், வில்வி
சையன்சேர்ந்தவெல்லக்கணைகொடுத்துசெயங்கொண்டார் விளங்கு
நாட்டிற், கல்வி மணக்கழுகுக்கூட்டறமொழிந்தெனமுன்னோர் கழறு
வாரே. (௧)

## மார்க்கண்டர் கதை.

வருமறைமார்க்கண்டர்நித்தந் திருக்கடவூர்வேணியனையன்பா
ய்ப்பற்றி, மருச்சமன்றன்பகையடக்கித்தீர்க்காயுளாய்ப்புவியில் வாழா
நின்றார். பெருமைவணிகர்தென்னேமநகரில்வளர்செயங்கொண்டார்தமிழ்
சேர்நாட்டிற், பெருமரத்தைச்சுற்றிநின்றவல்லியுஞ்சாகாதெனவே
பேசுவாரே. (௨)

## பாண்டவர்கள் கதை.

அருமைசேறிபாண்டவர்கள் பங்காளிசெய்கொடுமையாற்காடா
ண்டு, மூரிமையுடன்றருமர்செய்தநன்றியினாற்றிரும்பவும்வந்துலகை

யாண்டார், பருவரைவில்லாயிளைக்கு செயங்கொண்டாரேயெவரும் பண்பாய்ச்செய்த, தருமமேநிலைகாக்குமரர்மமுந்நிடுமெனவுஞ்சாற்றுவாரே. (௩)

## இளையான்குடிமாறர் கதை.

உழுதிளையான்குடிமாறர் முளைவாரியன்னமன்பர்க்குதவிப்பாரில், வழுவாதகீர்த்தியுடனொருநாளுநகேடில்லாவாழ்வுபெற்றார், மழு வேந்துங்கரதலத்தார் செயங்கொண்டார்வளநாட்டின் மறைகளோதித், தொழுவாரெல்லாமுழுவார்நிலைக்கடையிலென்றுலகஞ் சொல்லுமாதோ. (௪)

## கிரவுஞ்சாபிமவுபட்ட கதை.

தஞ்சமெனச்சரண்புகுந்தவமரர்களைப் புரப்பதற்காச்சரவணத்தின், மஞ்சனெனத்தோன்றியசெவ்வேள்வடிவேலாற்கிரவுஞ்சமாய்ந்ததன்றே. செஞ்சரணத்தால்யமனை வென்ற செயங்கொண்டாரே தேவரேனும், வஞ்சநெஞ்சைப்பிளக்குமிதுபொய்யல்லவுலகினிசவாசனந்தானே. (௫)

## இராமர் கதை.

அரியோனைக்கௌசிகன்பால்விடமலைத்தான்றசரதன்விட்டதற்கிலாபங், கரியோன்றனதிகசௌந்தரியனுக்குந்தனுவினுக்கும் கமலத்தார்க்குமரியோனகியமறைதேர்முனியன்றேசெயங்கொண்டாருலகந்தன்னிற், பெரியோரைத்துணைக்கொளென்ற வௌவைவாக்கியத்திலொன்றும்பிசகிராதே. (௬)

## இராமர் வனவாசஞ்சேர்ந்த கதை.

பானுகுலராமனுக்குப்பட்டாபிஷேகமெனப்பகர்ந்தபோது, கூனியொருகூத்திரத்தைக் கொடுக்கவவனுரைவிட்ட கொள்கைபோல, மானணியுங்கரத்தாரே செயங்கொண்டாரேபுவியின்மகிமைசேர்ந்த, யானைநிழல்பார்க்கையிலேதவளைவந்துகலக்கிவிடுமெதுமெய்தானே.()

## இராவணன் கதை.

தொடைநகிலங்குமார்பணிலக்குமணன்வில்வலுமென்றுன்சொன்னபேச்சை, யடக்கிராவணனுங்கேயோரம்பானுன்வெல்லேனறியேன்றானபோற், சடைக்கிடமாலையணிசெயங்கொண்டாரேயெதிரிகளைக்கண்டஞ்சிப், படைக்குப்போகாதவர்கள்நல்லசேவகரெனவும்பகருவாரே. (அ)

## வாலி சுக்கிரீபர் கதை.

பேரிலுயாவாலிசுக்கிரீபரிருவரும்பகையாய்ப்பிரியாராமா, காரியத்துக்காகவந்தகடலடைந்துசசிறைமீட்டகணக்குப்போலே, மேருவைவில்லாய்வளைத்த செயங்கொண்டாரேயுலகில் விளங்குஞ்சொல்லு, மூரிரண்டுபட்டதென்றூற் கூத்தாடிக்கேலாபமுண்டென்பாரே

## பூதேவி சீதேவி பிரிந்த கதை.

செல்லோடே யிணங்குகடற்றிருவுடன்மூதாள்பிறந்த செய்திபாரினல்லோடைச்சலத்தில்சிலபாசிபடர்ந்திடலுந்தனஞ்சயன்கை, வில்லோடேமோதியதோட் செயங்கொண்டாரேவயலில் விளைவுண்டான. நெல்லோடேபதருமசந்தனிலதருமபிறந்திருக்குநேர்மைதானே (௧௦)

## சரஸ்வதி கோபனை நீங்கிய கதை.

நங்கைகலைவாணிகம்பரிடந்திருக்கத்தண்டிகையினலமாய்வாழ்ந்தா, ரங்கவடான்புரம்போகக் கம்பரன்றேகூலிக்கோராளானுரே, செங்கைபுகிராலயேதன் சிரத்திலொன்றைத்துணித்துவிட்ட செயங்கொண்டாரே, சுங்கமாறியபோது சுண்ணாம்புங்கொடுக்கார்தொல்புவியுளோரே. (௧௧)

## வாமனன் அரிச்சந்திரன் கதை.

தாப்பாய்வாமனன்கையின்மாவலிதண்ணீரைவிட்டுத்தரணிதோற்றான், வாய்ப்பாயகோசிகன்றன்வஞ்சனையாலரிச்சந்த்ரன்மனைவிவி

ற்றுன், றீப்போலேவிழிகாட்டிமதனுடலையெரித்துவிட்டுசெயங்கொ ண்டாரே, பார்ப்பார்க்குவாய்ப்போக்கொண்ணுதாண்டிக்கதுதானும் பகரொணுதே. (கஉ)

## திருஞானசம்பந்த சுவாமிகள் கதை.

பண்ணுருங்கவுணியாவிபூதியினல்வழுதிசுரம்பாதிதீர்த்தா, ரெ ண்ணுயிரஞ்சமணர்திருநீற்றைமறந்துகழுவேறிமாய்ந்தார், பெண்ணு ளைச்சடையில்வைத்தசெயங்கொண்டாரேயுலகிற் பெருமைசேர்ந்த, வெண்ணீறேவினையகற்றுந்தரிப்பவர்க்குச்சிவகதியுமேவுந்தானே.

## துரியோதனன் கதை.

புள்ளாலேபொறியரவத்துசன்மடிந்தாற்றருமருக்குப்பொரும் போருண்டோ, துள்ளாடத்திருப்பிவிட்டுப்பின்பவனைச்செயிக்கமிகத் தொல்லையாச்சே, வெள்ளானைக்கிறைபணியுஞ்செயங்கொண்டாரே பகையைமெலிவியாமன், முள்ளாலேயெடுப்பதைக்கோடாலியாலெடு க்கவந்தமுறைமையாமே. (கச)

## அகலிகை கதை.

பண்டகலிகையையிந்திரன்களவாய்த்தழுவிவெளிப்படுஞ்சாலத் தைக், கண்டுமுனிசகியாமலிருவரையுஞ்சபித்ததனுற்கனவீனந்தா, னிண்டை புனைசடையாரேசெயங்கொண்டாரேபுவியிலில்லாள்பேச் சைக், கொண்டவன்ஞற்றும்போதேகூரையொக்கத்தாற்றுமெனக் கூறுவாரே. (கரு)

## தாரை கதை.

கடலீன்றசந்திரனைக்குருமனைவிகலந்தணையக்கருதிவாவென், றிடவுமதிதொடலாமோபின்வருவதறியாமலிணங்கினனே, சடையில ங்கக்கங்கையணிசெயங்கொண்டாரேமாரன்சரந்தாங்காம, லுடை குலைத்தபின்புசொந்தமுறைமைகள்கொண்டாடுவரோ வுலகுளோரே.

## காந்தக்கற்கோட்டையழிந்த கதை.

சுற்றுமதிற்கலிங்கசிந்துசூழுசிக்காந்தமெனுந்துருவந்தன்னே, யெத்தும்விலைமாதர்களாற்பண்டுகருணைகரன்,வென்றிட்டானன்றே, கைத்திகிரியோன்பணியுஞ்செயங்கொண்டாரேமிகுந்தகருத்துண்டான,புத்திமான்பலவானுமென்றுலகோர்சொல்லுவதும்பொருந்துந்தானே. (கஎ)

## தருயர் கதை.

ஆளைப்போல்வருமிருகர்தனக்கும்வீமனுக்கும்வழக்கானநியாய. வேளைக்காதரவுதர்மர்வீமனுடல்பாதிமிருகத்துக்கென்றார், வேழப்போர்வையைத்தரித்தசெயங்கொண்டாரேசினிவெல்லம்போட்டு, நசழிப்பான்வார்த்தாலுநடுச்சொல்வாரறிவுமிகுநடுவுள்ளோரே. (கஅ)

## வாலிமருசனன பேடுத்த கதை.

விழியெதிர்நில்லாதொளித்துவாலியைமாலெய்துகொன்றுவிட வேவாலி, வழியுடனேமறுசனனமெடுத்தரியையெய்துபழிவாங்கினனே, அழலுமழுவணிகரத்தார்செயங்கொண்டார்நன்னாட்டிலமரர்க்கேனும், பழிகிழமதாகிவிட்டுப்போவதில்லையென்றுலகோர்பகருவாரே.

## அம்பிகாபதி கதை.

அரசன்மகளாரையம்பிகாபதிசேர்ந்ததனை மன்னனறிந்துநாட்செஞ், றுருசிபிறந்தொருநாளத்தாட்சியுடனவனுயிரையொழித்தானன்றே, பரசணியுங்கரத்தாரேசெயங்கொண்டாரேமிகுந்தபழக்கமேனுஞ், சரசமிஞ்சிரவிக்கையிற்கைபோடவொண்ணுதென்றுலகோர்சாற்றுவாரே. (உ0)

## விபீஷணன் கதை.

கும்பகர்னனுக்கிளையோன்றமையனுயிர்நிலைகாட்டிக்கொல்லென்றேநி, கும்பலைக்குந் தறவுசொல்லியிலங்கைமன்னன்வலுவைமுற்

றுகக்குறைத்தானன்றே, செம்பிகன்ஞட்டவர்புகழுந்தென்னே மநாட்டில்வளர்செயங்கொண்டாரே, தம்பிபிறக்கத்தரையாமென்றிடுஞ்சொல்லரக்கனுக்கேதகுங்கண்டீரே. (உக)

## கண்ணன் மலையைக்குடையாக எடுத்த கதை.

கல்லானமாரியையிந்திரனனுப்பவாய்ப்பாடிக்கண்ணர்க்கம்பு வில்லேதுமின்றியொருகற்குடையால்வந்தமழைவிலக்கினூரே, செல்லாருங்குழலிசெளந்தரியையிடப்பாகம்வைத்த செயங்கொண்டாரே வல்லார்க்குப்புல்லுமோராயுதமாமென்றுலகோர்வழங்குவாரே. (உஉ)

## சூர்ப்பநகை மூக்குமுலை யறுபட்ட கதை.

உருக்குதலுநயத்தலுமார்சூர்ப்பநகையிலக்குமணனுயர்தோள் சேரச், சுருக்கிற்சென்றெடுக்கவவனிணங்காமன்மூக்குமுலைதுணித்தானன்றே, மருக்கிளைசந்தகரத்தாரேசெயங்கொண்டாரேமிகுந்தயலுண்டாகிச், சிறுக்கிமனதறியாமற்செடிதளைக்கையாற்றாக்கிந்திரிந்தவாறே. (உஙு)

## சீதை கதை.

தேன்மொழிச்சீதையையரக்கன்சிறையெடுத்துவனத்தில்வைத்த செயலாலுந்தா, ஞனமட்டும்பாரக்கவவள்கற்பழியாதக்கினியிலமிழ்ந்துமீண்டாள்,மான்விழியாள்செளந்தரிபாகாசெயங்கொண்டாரேநின் வளஞ்சேர்நாட்டிற், ருன்பதிவிரதையானூற்றேவடியாள்வீட்டினிதந்தரிக்கலாமே. (உச)

## அருச்சுனன் கதை.

பண்டுகிணற்றினிலெரிந்தபௌத்திரத்தைத்துரோணர்சிலைபாணம்போட்டுக், கொண்டுவரக்கண்டதனஞ்சயனுமந்தவிற்றெழில் கைக்கொண்டானன்றே, வண்டுவிழியுமைபாகாசெயங்கொண்டாரே

யுமதுவளஞ்சேர்நாட்டில், கண்டதைகற்கின்றவனேபண்டிதனாவானென்றேகருதுவாரோ. (௨௫)

### நளனை பாம்பு கடித்த கதை.

நண்ணுகழைவனமெரியமேற்கிடந்தபாம்பு செத்திடாமற்றாங்கி, மண்ணில்விட்ட நளன்கரத்திலரவு கடித்தவனுடலை வடுச்செய்தாற்போல், வெண்ணிலவைச்சடையில்வைத்தசெயங்கொண்டாரோ குடியின்மெலிவுதீர, புண்ணியத்துக்குமெருதைப்பல்பிடித்துபார்ப்பவரெனப்புகலுவாரோ. (௨௬)

### ஓரரசன் பெண்சாதியின் கதை.

நயவேந்தன்பாரியொரு துன்மார்க்கனாசைகொண்டு நடந்தேயாற்றி, லியல்புடனேபோய்ச்சலத்தினின்றதைச்சிந்தாமணியிலியம்பினாரோ, கயல்விழியாருமைபாகா செயங்கொண்டாரோ தனதுகணவன்போலே, அயல்வீட்டான்மகனவனுமாபத்துக்குதவானென்றறைகுவாரோ. (௨௭)

### சேதுபதிராசாமகன் கதை.

பெண்ணைவாழ்க்கைபடுத்தசேதுமன்னன்குறித்தவிடம்பிசகிமேலாங், கண்ணார்பரிசோதனைக்குந்தப்பி விதிப்படிமூடவன்கைக்கொண்டானே, பண்ணுலவுபுகழ்மேவுஞ்செயங்கொண்டாரோமூவர்பாரித்தாலும், பெண்ணைதனைத்துடைத்திடலாமெழுத்ததனைத்துடைப்பவர்களில்லைததானே. (௨௮)

### துஷ்டரோகியின் கதை.

பண்டுகுட்டரோகியுந்தான்பாரதங்கேட்டானோயும் பஞ்சாயோடி, விண்டுவொருகையிற்கதையைப்பொய்யென்றான் மறைந்தகுட்டமீறிற்றன்றே, தண்டமிழுக்கருள்புரியுஞ்செயங்கொண்டாரோபூதந்தழும்பாதீசன், உண்டென்றபேருக்குண்டில்லையென்றபேர்க்கில்லையுண்மைதானே. (௨௯)

## மனுநீதிச்சோழன் கதை.

முன்னொருசோழன்புதல்வன்றேர்க்காலிலான்கன்று முறியக்கண்டே, பின்னதற்கீடாய்த்தனதுபிள்ளையைத்தேர்க்காலிலிட்டுப்பெருமைசேர்ந்தான். றென்னேமாநகரில்வாழ் சௌந்தரநாயகிமகிழ்ந்தசெயங்கொண்டாரே, தன்னுயிர்போன்மன்னுயிரை யெண்ணுவர்தேவர்முனிவர்தமக்கொப்பாரே. (௯0)

## இந்திரசித்தன்கதை.

கண்ணனர்படைதனைச்செயிக்கவிந்த்ரசித்தனிகும்பலையைக்கருதிச்செய்தே, நண்ணியயாகமுமுடியுந்தருணத்தி லிலக்குமணனுசஞ்செய்தான், மண்ணையுண்டோன்விழிபதத்தார்செயங்கொண்டாரேகோலமத்தூடாடி, வெண்ணெய்படும்வேளையிலேதாழியுடைந்திடுதன்முன்செய்வினையென்பாரே. (௯க)

## இராவணன் கதை.

அற்புதராமன்கைவலுமுதனுட்சண்டையிலரக்கனறிந்தும்புத்தி, சொற்பமகோதரன் பேச்சைக்கேட்டலவோகுலத்தோடுந் துஞ்சினானே, தற்பரசதாசிவனேசெயங்கொண்டாரேநல்யோசனையில்லாத, துற்புத்திமந்திரியாலரசுக்கேயீனமென்றசொல்மெய்தானே. (௯௨)

## சகரர்கள் கதை.

ஆவலாய்ப்பரிதேடிக் கபிலரிஷியிடத்திற்போ யகம்பாராட்டித், தாவியவெஞ்சினத்தாலே யறுபதினாயிரம்பேர்கள சகராண்மாண்டார். காவடருந்தென்னேமச் செயங்கொண்டாரேபொறுமை கருதிச்செய்யாக்,கோபமேபெரும்பாவமதுசண்டாளம்மெனவுங்கூறுவாரே.

## இராக்கதன் கதை.

ஆற்றையணிதேநோக்கி யொருநிருதன்றவசுசெய்ய வவனுக்கோவாள்கூற்றையுதைத்தோனனுப்பக்குறுக்கிற்சென்றிலக்குமணன்கொ

ண்டானன்றோ, நாற்றிசையும்பணியவருஞ்செயங்கொண்டாரேயனே
ந்தநாளாயொட்டிக், காத்திருந்தோன்பெண்டிதனைநேற்றுவந்தோன்
கைக்கொண்டகணக்குத்தானே. (௬)

## பாரதக்கதை.

விதுரான்வின்முரித்தான்கன்னனும்பாம்புக்கணைதிரும்பவிட்டா
னில்லை, யெதிரிபடைதனைத்துரியோதனன்செயிக்கப்படைத்தலை
ரிணங்கினரோ, மதுரையிலிந்தனம்வளையல்விற்றசெயங்கொண்டாரே
மருவார்போரில், குதிரைநடவாவிடின்மாவீரர்பறந்திடுவாரோகொக்
காய்த்தாமே.

## மணியடித்த கதை.

சாத்திரவேதியர்வதிட்டர்தருமராதுசத்திரத்திற்சலச்சோறுண்ட,
மாத்திரமேலட்சமறையோர புசித்தாலாடுமெணிமலிந்தாடிற்றே, நேத்
திரத்தாலனங்கனுடறனையெரித்தசெயங்கொண்டார்நிமலர்நாட்டிற்
பாத்திரத்தையறிந்துபிச்சையிட வேண்டுமென்றுலகோர்பகருவாரோ.

## கிருட்டினன் தருமரைப் பொய்சொல்வித்த கதை.

அன்பானதருமரசுவத்தாமாவெனும்யானையமரில்வீழ, வன்பான
புயவசுவத்தாமர்பட்டாரெனப் பிசகிவழுத்தலாச்சே, முன்பாதவன்
னெயிற்றைப்பறித்தெறிந்தசெயங்கொண்டார்முதல்வர்நாட்டிற்.றன்
பானைதனைச்சாயப்பிடிப்பதுண்டோவெவருமென்றுசாற்றுவாரோ. ()

## பஞ்சபாண்டவர்கள் போர்க்குச்சென்ற கதை.

மன்னர்துரோணரையோனன்கொடுபோயிற்றென்றொருசொ
ல்வழுத்தக்கேட்டே,பொன்னிரதமேறியம்புவில்லெடுத்தைவருஞ்சம
ர்க்குப்போனாரன்றோ, நன்னயவேதன்சிரத்திலொன்றுதுணித்திட்ட
செயங்கொண்டார்நாட்டிற், சின்னபாம்பாறலும் பெரியகம்பாலடி
யென்றேசெப்புவாரோ. (அங)

## அர்சுநவாமன் கதை

வேளையானைப்பணியுமச்சுதவாணக்குரிசில் வெள்ளாண்மைச் சீர். ஆணியவல்லமையான்மூவேந்தரையுங்காவலில்வைத் தவதிசெய் தான், பாணிமழுவணிசெய்யர்கொண்டாரேயெத்தொழில்களுக்கும் பழுதண்டேபார்.காணியைநட்டுக்களர்நிறபதுவேதன்மையெனக் கருதுவாரே. (கூக)

## தக்கன் கதை.

கயிலைந்தானுவைப்போலே மறுசிவனையுண்பெண்ணைக் கருதித் தக்கன், செயலற்றேசெய்வேள்வியுங்குலைந்துவேற்றுமுகஞ்சேர்ந்தா னன்றோ, வயிலைப்போல்விழியுமைசேர்செயங்கொண்டாரோயிந்தவைய னிமேலே, உயர்ந்தான்பறந்தாலுமூர்க்குருவிபருந்தாகாதுண்மைதா னே. (சo)

## தக்கன்மகத்தில் வந்த தேவர்கள் கதை.

ஆணவத்தக்கன்மகத்திலவியுணவந்திடுதேவரவர்களெல்லா, நா ணமொடுமானபங்கமுற்றனரே வீரபத்திரனாதரராலே பாணிதன்னின்ம ழுவணிந்தசெயங்கொண்டாரேருசியும்பசியும்பார்க்கு, மூணருந்தங்க ருமமிழந்திடுவரென்றபழமொழிதானுண்மைதானே. (சக)

## இந்திரன் நளனைத் தூதுவிட்ட கதை.

வனத்திறையிந்திரனளன்பாற்சென்றுனக்குவருமானமாதைத்தா னென். றனக்குவரும்படிபேசித்தமயந்திதனையிணக்கித்தாவென்றுற் போற்,சினக்குமரவணிந்தடியார்மனக்கவலைதீர்த்தருளுஞ்செயங்கொ ண்டாரோ, உனக்குமழைபெய்யுமிப்போதெனக் கிரைவீர்தாவென்று ரைத்தவாறே. (சஉ)

## பிரமனைச் சிவன்சபித்த கதை.

கஞ்சனுக்குப்புவியிற்கோயிலுட்பூசையில்லையெனக்கடிந்தீர்மீட் டுந, செஞ்சினபின்மறையவர் செய்பூசையெல்லா முனக்கெனவே

பைசெய்தீர், பஞ்சவனுக்காய்மாறிநடித்தசெயங்கொண்டாரேபகைவரைத்தா, னஞ்சிநல்லவார்த்தைசொன்னதுபொல்லாப்புவருவதில்லையவனியோர்க்கே. (௪௩)

## அகலிகை சாபந்தீர்ந்த கதை.

முனியகலிகைகல்லாய்ச்சபித்துநிவிர்த்திக்கும்வழிமுறைசொன்னார்போன், மனுவேந்தனாகியரிநடந்திடுந்தாட்படப்பழையவடிவானாளே, தனவானைத்தோழனென்றசெயங்கொண்டாரேயெவர்க்குந்தலைநாள்செய்த, வனுபோகந்தொலைந்திடும்போதவிழ்தமுஞ்சித்திக்குமென்பரவனியோரே. (௪௪)

## விபீடணன் மகுடம்பெற்ற கதை.

வளமையுள்ளராமனை விபீஷணன்சேர்ந்திலங்கைமணி மகுடம்பெற்றான், தளரரக்கருடனிருந்தமர்க்குவந்தாலவனையொக்கச் சரிப்பாரன்றோ, களபமணிதனத்திசௌந்தரிபாகர்செயங்கொண்டார்கனத்தநாட்டி, னிழலருமை வெய்யிலிற்போனாற்றெரியுமென்பதுவுஞ்சங்கண்டீரே. (௪௫)

## அரிச்சந்திரன் கதை.

செப்புமரிச்சந்திரன்றனீசனுக்கேவிலையாகிச்சென்றே நெஞ்சமொப்பிமயானமுங்காத்த நிமித்தியத்தாலிழுக்கவனுக் கொருபோதுண்டோ, மைப்படியுங்கண்ணிசௌந்தரிபாகர்செயங்கொண்டார்வளஞ்சேர்நாட்டிற், குப்பையிலேகிடந்தாலுங்குன்றிமணிநிறத்திலொன்றுங்குறைவுறாதே. (௪௬)

## அமராவதி யென்பவள் கதை.

வணக்கமுடன்சித்திரபுத்திரனையமராவதிதான்வணங்கிப்பொங்க, விணக்கமுடன்செய்யாதநியமத்தாலவட்குமெத்தவிடரெய்திற்றே. யணைக்கடலின்மேனடந்தமுகில்பணியுஞ்செயங்கொண்டாருள்சே

ர்நாட்டிற், கணக்கனுக்குக்கைக்கூலிகட்டியன்றோ குடியிருக்கக்கட
னென்பாரோ. (சஎ)

## விடத்திற்குப் பயந்த விஷ்ணு கதை.

கடியவிடம்பாற்கடலிற்றோன்றியபோதருகிருந்த காருத்தன்றோ,
னெடியபயத்துடனீங்கியுங்கருநிறம்படைத்தானிசமதன்றோ, கொடி
யிடைப்பெண்சௌந்தரியாளிடப்பாகர் செயங்கொண்டார குலவுநா
ட்டிற், படைதனக்கோடிப்பிழைப்பர்பஞ்சமதற்கிருந்துபிழைப்பாரெ
ன்பாரோ. (சஅ)

## பஞ்சதந்திரக் கதை.

திறமுளசஞ்சீவகனைத் தமரகன்கண்டழைத்துவந்து சிங்கத்துக்
கு, மிறையுளமந்திரியாகவைத்தபின்சிங்கந்தனக்குமிடபத்துக்குங், கு
றைவில்பகையுண்டுபண்ணிவிட்டதன்றோ செயங்கொண்டார் குலவு
நாட்டி, லுறவுதனைப்போலிருந்துங்குளவியைப்போற்கொட்டுவர்களு
ண்டென்பாரோ. (சகூ)

## அறிவீன னரசன்மேற்பாடிய கதை.

அறம்பெற்றசோழனைமண்ணுண்ணிமரப்பாவையென்றறிவிலோர்
பாட்டாய், வெறும்பித்தன்சொல்லவந்தவேந்தர்சபையோர்கள்பொரு
ள்விளங்கச்சொன்னார், திறம்பெற்றபரிசுகொண்டான்றென்னைமங்க
ரில்வளர்செயங்கொண்டாரோ, வெறும்புக்குந்தன்கையாலெண்சாண்
மெய்யென்றுலகோரியம்பினாரோ. (ருo)

## கர்னமகாராசன் கிண்ணங்கொடுத்த கதை.

வாழிரவிசுதன் லலக்கையாலெடுத்துக்கொடுக்குமுன்னேமனம்
வேறுமென், றேழைமறையோர்க்கிடக்கையாலேயெண்ணெய்க்கிண்
ணமீந்தானன்றோ, வாழிதனிற்பள்ளிகொள்ளுமால்பணியும்பொற்பா

தச்செயங்கொண்டாரோ நாளையென்பார் கொடைதனக்குச் சடுதியி லேயில்லையென்றனலமதாமே. (ருக)

## விசுவாமித்திரன் வெற்றியடையாத கதை.

புகழரிச்சந்திரனிசவாமெனவதிஷ்டர்சொலவவனைப் பொய் யனுக்க, மிகவெகுண்டுசெபதமிட்டேயானமட்டும்பார்த்தயர்ந்துவிசுவா மித்ரன், செகமறியமக்கனப்பட்டிருந்ததையாவருமறிவார்செயங்கொ ண்டாரோ, முகடுமுட்டவருங்கோபந்தரும்புகுத்தவேலையெனமொழி ந்தவாறே. (ருஉ)

## சுப்பிரமணியர் கதை.

அண்ணலருள்சரவணவேள்புனக்குறப்பெண்வெயிலினிற்குமவதி பார்த்துத், தண்ணுலவுவேயகைமரநிழலாலன்றயவள்வருத்தந்தனைதீ ர்த்தாரோ, விண்ணவர்க்காய்விடத்தையுண்டசெயங்கொண்டாரோகன ந்தான்விளங்குநாட்டிற், பெண்ணென்றாற்பேயுமொக்கவிரங்குமென வுலகுள்ளோர்பேசுவாரோ. (ருங)

## கிருட்டினர் ஐவரைக்காத்த கதை.

வள்ளல்கன்னன்கைநாகக்கணைப்புலன்மாலறிந்தவன்றன் மாதா வைப்போய்ப், பிள்ளைகண்மேனுகமொருதரம்விடப்பானிறுத்தெனவு ம்பேசச்சொல்லித், தெள்ளிபஞ்சவருயிரைக்காத்தார்தென்னேமநக ர்ச் செயங்கொண்டாரோ, வெள்ளம்வருமுன்னணையைக்கோலிவைப் போர்காரியமகண்மிகநன்றுமே. (ருச)

## இரணியன் கதை.

ஆச்சரியவிரணியனட்டாக்கரத்தையிகழ்ந்தார் பொல்லாப்பெண் ணுமர், கூசசமரத்தள்ளியிரணியநமாவென்றதினாற் குலந்தான்றேக ம், பேச்சிமுலையுண்டமுகில்பணிசெயங்கொண்டாரோ நீள்பெருங்காற் றுக்கு, ணீச்சறியாமைந்தரைவெள்ளங்கொண்டுபோமென்றனிசங்கண் டீரோ. (ருரு)

மகாமகோபாத்யாய டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
சென்னை-20.

### உருத்திராங்கதன் கதை.

நன்னிலத்திலுருக்குமாங்கதராசனொருவிரதநடாததிலனென்
றன்னகருமவ்விரதந்தொடங்கியதால் யமனவனையணுகக்கூடா [ன்
தென்னயமதண்டனைசேராதிருந்தாசெயங்கொண்டாரிலகுநாட்டி
மன்னவனெட்படியோமன்னுயிருமந்தப்படியெனவுமவழுத்துவாரே.

### நளன் கதை.

அடவிசென்றுநகரிழந்துவறுமைதங்கியுடன்மெலிந்தேயம்மானு
ர்வந், இடவுமம்மானேவலினலமைச்சரனைழத்திடவருவதிலைபோவெ
ன்ற, திடநளனைமாமனெதிர்கொண்டழைக்கச்சம்மதித்தான்செயங்
கொண்டாரே, கடுகுசிறுத்தாலுமென்னகாரமபோகாதெனவுங்கழறு
வாரே. (௫௭)

### சூரபத்மன் கதை.

பூதலமும்பொன்னுலகுமேவல்கொண்டசூரனரன்புதல்வற்கஞ்சிச,
சூதமரமாயொளித்துக்கடைசியிற்செவ் வேள்கரத்திற்றுசமானனே,
தாதவிழ்பூங்கொன்றையணிசெயங்கொண்டாரேசெடியைத்தாண்டி
த்தாவிக், காதமோடினுமுயற்குக்கைதூக்கென்றுலகிலுள்ளோர்கழறு
வாரே. (௫௮)

### பொய்த்தவ வொழுக்கத்தோர் கதை.

பூமிதனிற்சிலர்நீரிட்டிருகரமுங்குவித்திருகண்பொத்திக்கொண்
ட, காமியர்கண்மேற்பொருண்மேன்மனங்கிடக்கவாயிலரகரவென
ற்போ, னேமியணிவோன்றேடவரியபதச்செயங்கொண்டார்நிம
லர்நாட்டின், மாமிதலைமேற்கையும்வேலிபுறத்தினிற்கண்ணும்வைத்
தவாறே. (௫௯)

### திருவிளையாடற் புராணக் கதை.

வெண்ணிறக்கந்தொக்கலம்பால்வில்வேடனடுத்துவரப்பெண்ணு
ங்கானன், கொண்ணைதுரியென்றிழுக்கமதுணைபூற்சுந்தரர்கியாயக்

கொடுத்துத்தீர்த்தா, ரண்ணலரனேசெயங்கொண்டாரேகாதாரக் கேட்டதும்பொய்யாகுங், கண்ணாரக்கண்டதும்பொய்தீர்க்கவிசாரிப் பதுமெய்காணுந்தானே. (௬௦)

## துரியோதன னரசிழந்த கதை.

கூறுமரவக்கொடியோன்பாண்டவருக்கைந்நிலமுங்கொடுக்கேனென்று, வீறுசொன்னான்சுடக்கொடுத்தபின்னுயிரோடுலகமுற்றும்விட்டானன்றோ, நீறணிமெய்ச்செயங்கொண்டாரேயாற்றோடேமூடர் நேர்போனாலும், போறதல்லாலோடக்காரனுக்கரைக்காசுங்கொடுக்கப்பொருந்திடாரே. (௬௧)

## விநாயகர் மாங்கனி பெற்ற கதை.

வேய்க்குமகன்மூத்தபிள்ளைகரத்தினின்மாங்கனிகொடுக்கவெகுண்டுவேலர், வாய்க்கினியகனிநமக்குத்தரவிலென்றுகோபமுடன் மலைமேற்சென்றார், பாக்கியஞ்செந்தமிழ்க்குதவுஞ்செயங்கொண்டாரேவிரைத்தபழனந்தோறுந், தாய்க்குவிளைந்தாலுமென்னதனக்குவிளைந்திடவேண்டித்தவஞ்செய்வாரே. (௬௨

## சீவகன் கதை.

பெலமுற்றசிங்கமொருகன்றீனும்படியெழுதிப்பின்னேசெம்பொன் விலைபெற்றகரியையரிக்கன்றுதுள்ளிப்பாய்ந்தகதைமெய்யாமென்ற சிலைபெற்றகூளேந்த்ரன்விறலிதனில்விளங்குதன்றோசெயங்கொண்டாரே, குலவித்தைகல்லாமற்பாதிவருமென்றுலகோர்கூறுவாரே. ()

## கொக்குமீன்களை மடித்துத் தானும்மடிந்த கதை.

தண்ணார்மீன்களைச்சருவசிவதயாபரபகத்தான்றயவாய்ப்பேசி, யெண்ணமற்சிறைதத்தபழிதனக்கலவன்பகக்கழுத்தைவிடறிற்றன்றே, பண்ணார்சிந்தாமணியில்விழுந்ததன்றோசெயங்கொண்டார்பரவுநாட்டிர்

கொண்ணுரைக்கொல்லுமல்லாற் கொலைவிடாதென்றுலகோர்கூறு வாரோ. (௬௪)

### வாமனவதாரக் கதை.

உலகமெல்லாமுடல்சிறுத்துஞ்சிறியவாமனனளந்தாவொருபாதத் தா, லலகையின்காத்திரங்களென்னவாலகிருஷ்ணன்பாலருந்தியவ ளைமாய்த்தான், சிலைநுதலாள்சௌந்தரிநாயகியையிடப்பாகம்வைத்த செயங்கொண்டாரே, மலைபெரிதானுலுமென்னசிற்றுளிக்குப்பயஞ் சனிக்கும்வண்மைதானே. (௬௫)

### புட்கரன் நளனைவரவழைத்த கதை.

காவலன்புட்கரனளனைச்சூதாடவரவழைத்தகபடங்கண்டே, மே வியசூதாடாமற்றள்ளிவிட்டாற்சனிநளனைவினைசெய்வானோ, வாவிதி கழ்தென்னேமச்செயங்கொண்டாரேமிகுந்தவளஞ்சேர்நாட்டி, ஞவி தன்செய்தியையறிந்துகுமியைப்பத்திரப்படுத்தனலமென்பாரே.

### தழுண ராசன் கதை.

சிம்மாசனன்குமுணன்சிரம்போலேவிழிமூக்குச்செவிவாய்செ ய்து, சம்மாரம்பண்ணிரத்தச்சோரிசிந்தக்கொடுத்ததுவுந்தட்டானன் றோ, பெம்மானேதென்னேமச்செயங்கொண்டாரேமலையைப்பிர ட்டுங்கையான், கம்மாளன்பசுவைத்தான்காதறுத்துக்கொள்ளுமென க்கழறுவாரே. (௬௭)

### ஆமை வாயாற் கெட்ட கதை.

கொடியையிரண்டோதிமங்கௌவிப்பறக்ககடுக்கூர்மங்குலவிச் செல்கா, னொடியிலொருசெய்திசொலவாய்திறந்தாமையும்விழுந்து றுங்கிற்றன்றே, வடிவுளதந்திரக்கதையுமுண்டுசெயங்கொண்டார் வாழ்வளஞ்சேர்நாட்டி, னெடுங்கிணறும்வாயாலேதாறுமென்றேசொ ல்லுவர்கணிசந்தண்டிரே. (௬௮)

## திரிசங்குராசன் கதை.

நம்புகுருவசிஷ்டர்பகைமிகுந்திருக்கும்போதுதிரிசங்குராசன்
வம்புரைத்தகோசிகராற்சொர்க்கமதிலேறியதான்மகிமையுண்டோ
சம்புமகாதேவசெயங்கொண்டாரேயெதிராளிதனுவாலெய்த
வம்புவிழக்கையிலேழைகட்டினன்மெய்யினிற்புண்ணுறிடாதே. (௬௯)

## சுக்கிரன் கண்ணிழந்த கதை.

கூச்சமறமாவலிபூமியைக்கொடுக்கமால்வாங்கக்குறுக்கேசுக்ரன்,
பேச்சறியாமற்பேசிக்கண்ணிழப்பானேனுதுங்கிப் பிழைக்கொண்
றுதோ, வாச்சரியஞ்செயங்கொண்டாரேயிலங்காபுரிராமராண்டா
லென்ன, வேச்சிலரக்கர்களாண்டாலென்னென்றுருரங்கநாளிருந்
ததன்றே. (௭௦)

## மானமுள்ள மகாபுருடன் கதை.

நீரெடுத்தோர்கலசமதிற்சவசமுஞ்செய்தொருவன்வந்தானெடுநா
ள்கும்பம், பாரில்விழுந்துடையவிவ்னுமொருகலசமென்மானம்பார்க்
கும்போது, சீரலவென்றழுதானென்றொருகதைசொல்வார்நேமச்செ
யங்கொண்டாரே, யாரெனினுமானமிழந்துயிர்காப்பதென்னவெவ்
பாரவஞ்சியோரே. (௭

## கருடன் கதை.

விருப்பமறையோன்றனக்குப்பிறந்தசிறுதனையுவணன்விழுங்கும்
வாயில், னெருப்பெழச்சுட்டதனாற்செங்கருடனிருதனைவிடுத்தானென
வோர்பாட்டிற், றிருப்பதிவேங்கடசதகந்தனிலுரைத்தார்முன்டெறி
யோர்செயங்கொண்டாரே, நெருப்பிருப்பதறியாமற்றொட்டாலுஞ்
சுடுமெனவேநிகழ்த்துவாரே. (௭௨)

## பட்டணத்துப் பிள்ளை கதை.

கையினிற்பட்டணத்தார்க்குத்தமக்கைநஞ்சுகலந்தபலகாரஞ்செ
ய்தே, யையமறக்கொல்லவென்றேகொடுக்கவவன்மனைநெருப்பால

ழிந்ததன்றோ, துய்யபிறைகச்சிலையீர்செயங்கொண்டாரேபிறர்க்குத்
துன்பங்காணச், செய்ததீவினைதானுஞ்செய்தவர்க்கேசேருமெனச்
செப்புவாரே. (எக)

## விக்ரமாதித்தன் கதை-

சிந்தைமகிழ்விக்ரமாதித்தனுக்காயிரவருடந்தேவியீந்தாள், புந்திவ
லுமந்திரிசொல்லாலிரண்டாயிரவருடம்புவியையாண்டான், சுந்தரர்
க்குத்தூதுசென்றசெயங்கொண்டாரேதருமந்துலங்குநாட்டின், மந்
திரகால்மதிமுக்காலென்றுலகந்தனிலுள்ளோர்வழுத்துவாரே. ()

## காளிதாசன் கதை.

நகாளிதாசனரண்மனைவாயிற்புகவேண்டிநிருபன்கோத்தி, சுகநா
சிபல்போலென்றுரைத்ததனாற்செல்லவிட்டார்தொன்றப்போவென்,
றிசைவாங்கிவாணப்போசன்றன்மேறபகர்ந்தனன்காண்செயங்கொ
ண்டாரே, பசுமாட்டுத்தோலதனைப்புலிபோர்த்துக்கொண்டிருந்தப
ண்புதானே. (எரு)

## இராவணன் போர்க்குத்துணிந்த கதை.

பாகத்தாற்செயமுமில்லையிறப்பதினிநிசமெனகொள்ளெனைப்
பெண்ணே, லோகத்தாரிராமனெனவுரைக்குமட்டுமிராவணனென
றுரைப்பார்போர்க்குப்,போகத்தான்றுணிந்தனென்றானரக்கனதாற்
செயங்கொண்டார்பொருந்துநாட்டிற், சாகத்தான்றுணிந்தவாக்குச்
சமுத்ரமுழுங்காலளவுதானென்பாரே. (எசு)

## நக்கீரர் கதை.

அத்தனீகரத்தெழுதியடிமைக்கிந்திட்டசெய்யுளதனைநோக்கிச்,
சற்றுந்தாமதியாமலியற்கைமணங்கூந்தலுக்குத்தகுதியென்றல், குற்
றமெனப்பயமின்றியுரைத்தனர்நக்கீரர்செயங்கொண்டாரேசொல்,வி
த்துவான்மதயானையிரண்டுமொப்பென்றுரைப்பதுவுமெய்யதாமே.

## துரோணர்பெண்சாதி.

உச்சிதமாய்த்துரோணர்சொன்னமொழிப்படியேயவர்மனையாளு டையில்லாமற், பிச்சையிடச் சிவனுக்கக்கணமேயிந்திரியம்பிற ந்ததன்றோ, தெட்சணா வந்தென்னைமகரில்வளர்செயங் கொண்டாரே,யிச்சை க்குக்கண்கண்டவிடத்தினிலென் றியம்புவாரோ, (எஅ)

## வாதாபி கதை.

மெத்தநான்வாதாபிவேதியர்களுயிரையுண்டுமேவிக்கும்ப, சித் தனைச்சாப்பிடநினைந்தான்சித்தனவனுயிரைமுற்றுஞ்சிதைத்துப்போ ட்டான், மத்தகசந்தனையுரித்தசெயங்கொண்டாரோயார்க்குமனதுக் கேற்க, நித்தியங்கட்டப்பாலமுற்றவுந்தான்பழுத்திடுமோநிலத்து மீதே. (எக)

## நாரைமூக்குக்குவமைசொல்லிய கதை.

பார்புகழும்பாண்டியர்க்குச்சங்கத்தார்பேரறிவாற்பகரவொண்ணு,நா ரைமூக்குக்குவமைபனங்கிழங்கென்றொருபுலவனவின்றானன்றோ , சீருலவுங்கமலைதிங்களரவமொடுகொன்றையணி செயங்கொண்டா ரோ, காருலவும்புவியிலுள்ளோராகாயந்தனையும்வரைகட்டுவாரோ. ()

## விறன்மிண்டநாயனார் கதை.

ஆரூரொல்லையின்மிதியேனென்றவிறன்மிண்டர்தனையரன்சோ தித்தப், பாரிலொருகால் மிதிக்கச்செய்ததுகண்டக்காலைப்பதறியீர் த்த, சீருவந்துசிவன்காட்சிகொடுத்தானன்றோசேமச்செயங்கொண் டாரோ, பேருலகின்மனங்கலங்கிப்பிரியாமற்பிடித்தவர்க்குப்பேறு ண்டாமே. (அக)

## செந்நாப்புலவர் கதை.

உற்றசெந்நாப்புலவர்மிக்ககவிகனைன்மேற்கோபமதாயுலகு ண்டோனை, யிற்றையாம்புறப்படுவோமினியுன்பாய்சுருட்டியெழுக்

திருமென்றேதச், சித்தசன்றன்றுதைவரதப்பெருமாளொழுந்தனரோ செயங்கொண்டாரோ, பத்தருளத்தினிலீசன்குடியிருப்பானெனச் சொலலும் பண்புதானே. (அஉ)

## நகலன் கதை.

மிகப்பெரியமாலசுவந்தனைப்பிடித்துக்கட்டிவந்தவினைப்போர்தன்னைப், பகற்பொழுதிற்பொடியாக்கித்தாதைதனைவென்றகுசன்பண்புபாரீர், செகத்தரசர்புகழவருந்தென்னைமகாடதிபச்செயங்கொண்டாரோ, தகப்பனொருபாக்கெனவும்பிள்ளையொருதோப்பெனவுஞ் சாற்றுவாரோ. (அங)

## இரேணுகாதேவி கதை

தண்பரசுராமனதுதாயுடலிற்பறைச்சிதலைதரித்தமின்னு, ணண்பரிடங்கொண்டுவெரவிவண்முழுதும்பறைச்சியெனநகைத்து நாதன், நின்புயனேயிவளையப்பாற்றுரத்தெனச்சேய்க்குரைத்தனரோ செயங்கொண்டாரோ, பண்புளவெண்சாணுடம்பிற்சிரசுபிரதானமெனப்பகருவாரோ. (அச)

## கன்னன் கதை.

பார்த்தனுக்கோரதமூர்ந்தோன்மூத்தபலபத்திரனைப்பாரைச்சுற்றென், றேய்த்தனுப்பித்தன்னைச்சார்ந்தோரைரட்சித்தண்ணனைச்சார்ந்திருந்துவாழ்ந்த, தூற்றுவனைமடியவுஞ்செய்தான்செயங்கொண்டாரோநீர்நுவலக்கேண்மோ, மூத்ததுவேமோழையென்றுமிளையதுவேகாளையென்றுமொழிகுவாரோ. (அரு)

## நிரம்பவழகியர் கதை.

பொன்னூர்செல்வமூர்தமிழும்பொருந்தரசன்றருக்கதனூற்புலவருக்குண், மன்னூனநிரம்பவழகியனையண்டங்காக்கையெனவழுத்தக்கேட்டே, யன்னூர்நீயேயண்டங்காக்கையென்றூர்செயங்கொண்டாரணிகொண்டிடும், றன்றூலேதான்மெலிந்தாலன்னூவியென்ன செய்வான்றரணிமீதே. (அசு)

### நந்திராசன்கதை.

ருத்திரப்பாவையைநிகர்மெய்யிதனைநம்பொண்ணுதெனவுந்து
ணைவன்கல்விக், காத்துமதத்தஞ்செய்தலகுள்ளமட்டும்புகழ்படைத்
தானன்றேநந்தி, போற்றியசுந்தரர்க்காய்முன்முறிகாட்டுஞ்செயங்
கொண்டார்புனிதநாட்டிற், கீர்த்தியபகீர்த்தியிவைவந்தாம்போகா
வெனவேகிளத்துவாரோ. (௮௭)

### சுவாகாள் கதை.

ஆறுரிஷிபத்தினிமார்பழுதுபடாதிருக்கையிலேயனலேன்றுருபங்,
கூறுசுவாகாளெடுத்தக்கினிதேவைத்தழுவரிஷிக்கூட்டங்கூடிச், சீறி
யறுவரைத்துரத்தத்தவருக்கேகினரன்றேசெயங்கொண்டாரோ, வா
றவிதிவந்ததென்றால்வலோந்தாம்பானையென்றுவழுத்துவாரோ, ()

### அருந்ததி கதை.

நித்தியசங்யாசியென்றுநித்யோபவாசியென்றும்ரிஷிகள்கூற, வ
த்தைமெய்யென்றருந்ததியாள்கங்கை தனக்குரைத்துவழியன்பாய்க்
கேட்கச், சித்தமகிழருந்ததிசொற்றனக்குவழிகங்கைவிட்டாள்செய
ங்கொண்டாரோ, பத்தினியுத்தமிவாக்குப்பலிக்குமெனத்தேவரொக்
கப்பணித்திட்டாரோ. (௮௯

### மிரகண்டர் கதை

மதிமெதுவாலொருநூறுவியன்மதியாற்பதினாறுவயதுபுத்ர
னைதுதருவோமெனச்சிவனே கல்லபிள்ளையதீரொட்டிருந்தாற்போ
து, மதுதருவீரொன்றுமிருகண்டுமுனியன்றுரைத்தார்செயங்கொண்
டாரோ, யிதசாணியொருகூடைமிக்கசல்வாதோர்பணத்தினிடைபெ
ள்பாரோ. (௯௰)

### அனுமான்கதை.

சலியாமற்கடருண்டிமருத்துமலைகொணரனுமான்றடக்தோட
ன்னை, கலியாமலிந்த்ரசித்தன்பாசத்தாற்கட்டிவிட்டானலமதான,
கலியாணமுரசொலிக்குந் தென்னேமச்செயங்கொண்டார்கனத்த
நாட்டில், வலியார்க்குவலியாருமிருப்பரொன்றேயுலகிலுள்ளோர்வச
னிப்பாரோ. (௯௧)

### பாண்டியராசன்கதை.

மதுரைமன்னனிடத்திருச்சகுதினையற்றதெனவிலக்குமாவ
னேக, மிதமுடன்சேகரித்தநிமித்தியத்தான்முன்பரிமுழுதுமிழந்தா
னன்றோ, நிதியனைத்தோழமைவேண்டுஞ்செயங்கொண்டாரேயேரி
நிறைக்கவேண்டிப், புதியவெள்ளம்வரப்போய்முன்னிருந்தவெள்ளத்
தையுமிழுத்துப்போனவாறே. (௬௨)

### விறகுதலையன்மனையாள்கதை.

தெகிட்டாக்காதலைவிறகுதலையன்மனையாள்கூத்தன்றிகிலேட்
டேங்கப், புகட்டியல்லோகற்பழியாமற்கவிகேட்டாடனைத்துபுருடன்
பேரின்,முகட்டாலிலையிற்றுயில்வோன்பணிசெயங்கொண்டாரே சீர்
முதிர்ந்தநாட்டிற், பகட்டாறபங்கெடுப்பனெனப்பொரியரிசியிடியெ
னவும்பகருவாரே. (௬௩)

### சூரியனைச்சக்கரத்தான்மறைத்தகதை.

வாணிமாதுலன்றேழலிறவாமற்காக்கவென்னவகைசெய்வோ
மென், றணியிரவியைத்திகிரியான்மறைத்துப்பார்த்தனைக்காத்தரு
ளினனே, நாணரவாற்பொன்மலையைவளைந்தசெயங்கொண்டார்வாழ்
நலஞ்சேர்நாட்டில், வேணுமென்றுதூற்றுமன்மெல்லியநூலாய்நூற்றி
டுவர்மெய்யதாமே. (௬௪)

### மயிலிராவணன்கதை.

அச்சமில்லாத்துராக்கதராவணனைமயிலிராவணன்சேர்ந்தழி
ந்துபோனான், பட்சமுள்ளவிபீஷணன்றனராக்கனைவிட்டொதுங்கி
மிகப்பண்பாய்வாழ்ந்தான், கச்சணியுந்தனத்திசௌந்தரிபாகர்செய
ங்கொண்டார்கனத்தநாட்டிற், றுர்ச்சனரைக்கண்டவுடன்றூரப்போ
வென்றுலகோர்சொல்லுவாரே. (௬௫)

### வரகுணசோழன்மனையாள்கதை.

வல்லவரகுணசோழன்மகளைமணஞ்செய்தருளிவடிவைப்பார்த்தே,
பல்லிருக்குங்குழலியிவண்மருதப்பர்க்காவணமக்கன்னையேன்றே, தி
ல்லைமன்றுளாடிமெய்யிலைக்கியமாம்படிசேர்த்தான்செயங் கொண்டா
ரே, நல்லதுகண்டாளுமன்றனக்கென்றேயுலகிலுள்ளோர்நவிலுவாரே

### நக்கீரர்கதை.

அரசிலையிற்பாதிபட்சிபாதிமச்சமானவிந்தையனைத்தும்பார்த்
து, விரவுளநிட்டையைமறந்தநக்கீரர்தனைப்பூதம்விழுங்கத்தூக்கித்,
திரண்மலையிலடைக்கவள்ளிகணவனன்றோவிலக்கிவிட்டான்செயங்
கொண்டாரே, புனைசெய்தவமறந்தாற்கைதவமாகுமென்றௌவையு
ரைத்தவாறே. (௯௭)

### வேடன்கதை.

அடவியில்வெருவியதொருவேடன்றினைமாப்பகுந்தபலநூற்சா
ர்க்குந், திடமுளமன்னவன்சேயாய்த்தினையரியட்பொற்கலத்திற்
பெசனிர்தானன்றே, வடவரையைச்சிலையாகவளைத்தசெயங்கொண்
டாரேவையந்தன்னில், விடுவதுபிச்சைபின்புபெறுவதுவேமோட்ச
மெனவியம்புவாரே. (௯௮)

### துர்வாசமுனிகதை.

வாச்சுமெதனத்தூர்வாசருக்குமாங்கதனைமெத்தவருத்தவாழ்பா
ம்ச்சலினன்முனியை வெல்லவரவுருக்குமாங்கதன்றனைபரித்தானன்
றே, கூச்சமறச்சிலர்திப்பூச்சியைக்கதிசேர்த்திட்டசெயங்கொண்டா
ர்நாட்டிற், சாட்சிக்காரனைப்பணியார்சண்டைக்காரனைப்பணியத்தகு
மென்பாரே. (௯௯)

### வரரிஷிகதை.

சிவயோகர்வெகுளியினல்வரரிஷியுமகிடமெனச்செனித்தான்
பாரிற், பவமடியாற்கற்றவுமைலிங்கப்ராணியைவதைத்தபழியின்
றோவஷ, நவதீர்த்தமாடியன்றோதொலைந்ததென்பார்செயங்கொண்
டார்கலஞ்சேர்நாட்டிற், றவமுடையோர்மனமழுங்கச்செயப்படாதி
தென்றுலகோர்சாற்றுவாரே. (௱) ந்

ஜெயங்கொண்டார் சதகம் முற்றிற்று.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை 20

# திருமுகவிலாசம்.

மதுரைச்சீமை செவ்வற்பட்டு இளையாற்றங்குடி

எழுநகரமென்றுசொல்லப்பட்ட

நேமநகரத்திலுதித்த

அழகப்பசெட்டியார் குமாரர்

முத்தப்பசெட்டியார்பாடி

ஊனைநகர் - வீரபண்டாரம் குமாரர்

சுப்பிரமணிய பண்டாரத்திற்கு

அளித்தது.

இஃது

மேற்படியார் பௌத்திரர்

நாராயணஞ்செட்டியார்

கேட்டுக்கொண்டபடி

திருக்கைலாய பாரம்பரைச் செங்குந்த சங்கத்தி லொருவராகிய
சிதம்பரம்
அ. இரத்நசபாபதிமுதலியாரால்
சென்னை:
இந்து தியலாஜிகல் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.
1896.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

கடவுள்துணை

எழுநகரத்தார்பெயராற்பாடிய

# திருமுகவிலாசம்.

## விநாயகர்தோத்திரம்.

காப்பு.

நேரிசைவெண்பா.

இருநிதியஞ்சேருகின்றவேழ்நகரத்தார்மேற்
றிருமுகவிலாசமதுசெப்ப—வருளாற்
குணபதியாமீசன்குழவியெனவுற்ற
கணபதிபொற்றாண்மலரேகாப்பு.

## நான்முகம்.

கலிவெண்பா.

கங்கைநதிதரித்தோர்கண்ணுதலார்சூரனுக்குச்
சங்கையில்லாவாழ்வுதனைக்கொடுக்க — வங்கவனுந்
தேவாதிகட்கிடுக்கஞ்செய்ததனாலிந்திரன்பாற்
றேவாதிகள்பலருஞ்சென்றடர்ந்து — பூவாளி
வேளையரனிடத்தின்மேவிச்சுராரிடுக்கந்
தாளாய்ப்பறந்திடவேசொல்லுமென்றார் — வேள்சிவன்பாற்

சென்றனமரர்சொன்னசெய்தியெல்லாமீசன்முன்பு
நின்றங்குரையாணிகரின்மதன்            மனறனமிகு
பூவாளியச்சிவன்மேற்பொங்குமழைபோனிறு
தூவினானீசனிவன்றுஷ்டனென்றே            தாவிமதன்
றன்னையெரித்திடவேதானவரும்வானவரும்
பன்னுஞ்செபதபஞ்செய்பண்ணவருந்            தநநிலைவிட்
டோடினாரந்நாளொருகோடிசென்றபின்பு
கூடினாரிந்திரன்பாற்கோவென்றே            கூடுமுன்னே
சத்தரிஷிமாதர்தமக்க்கினிபகவான்
மெத்தமயல்கொண்டவன்றன்வீட்டில்வந்து            சித்தநொந்தே
யன்னமருந்தாதிருந்தானவன்சுவாகா
ளென்னவென்றனுள்ளதியம்பினா            னன்னயமா
வென்றன்றிராணியினியறிவீர்சத்தரிஷி
துன்றுமடவார்களுன்னைத்தோயவே            யொன்றுமுத்
செய்வனென்றணல்லதெனச்சிந்தைமகிழ்ந்தக்கினிதா
மெய்பொடித்துச்சத்தரிஷிமின்னாரின்            டைவிழியா
ளாறுரிஷிமாதர்வடிவாகினாளச்சுவாகாள்
தேறவொண்ணாதாசதனைத்தீர்டபையென்று            கூறிய
யொவ்வொருத்தியாய்ச்சென்றுலகத்திற்றன்மனசு
செவ்வையொத்துக்கொண்டேயதீர்ந்தனனே            தூவய
வருந்ததியைப்போலவடிவாகமாட்டாதுள்ளம்
வருந்திக்கணவனிடம்வந்தா            டிருந்திழைமா
ரின்னொருத்தியேதுவரவில்லையென்றனுள்ளபடி
சொன்னவற்றைக்கேட்டுத்துயர்தீர்ந்தா            ளிந்நிலத்திற்
சத்தரிஷிஞானத்ருஷ்டிதன்னாலறிந்துகம
லத்துமடவாரையருகழைத்துச்            சதி

மவ. சாம்நாதையர் நூல் நிலையம்
திருவான்மியூர் சென்னை-20.

யருந்தநிகற்புக்குங்களாறுபேர் கற்பும் பரித்துபற்றுதென் றுபகர்ந்து — திருந்துஞ்

சரவணப்பொய்கைக்குட் டவசுசெய்வீரென்றே யரிவையரைப்போவென் றனுப்பத் — திருநுதலா

ரத்தரிஷிவாக்காற்சரவணப்பொய்கைக்குள்வந்து சத்தியமேயெண்ணித்தவஞ்செய்தா — ரற்றதெய்வ

மன்னவனுந்தேவர்களும்வந்தக்கினிபகவான் றன்னையருகழைத்துச்சாற்றினு — ரென்னவென்றாற்

சூரன்செயுமிடுக்கண்சோமன்றரித்தவர்பா னீருரைத்துமீளுமென்றார்நேசமாய்ச் — சீருடனே

செல்லுமுன்னேமாலாய்ச்சிவனுமிடப்பாக மெல்லியனுமொன்றானவேளையிலே — மெல்லவிடைந்

தக்கினியோன்பொற்கதவையண்ணினுன்மெய்வெளிச்ச மிக்ககடர்போலேவிளங்கியதாற் — றிக்கெனவே

சங்கரருமக்கினியோன்றன்னேக்கண்டேமனசு சங்கோசமாய்விரைந்துதாமெழுந்தா — ரங்கவர்க்கு

வித்துபிரவேசிக்கவீறுமெழிலக்கினியே வந்துகையிலேந்தெனவழுத்தினு — ரந்த

வரன்விந்தைத்தாங்கிநின்றவக்கினியோன்றன்னைத் திடமாகவித்தவிந்தைச்சீரா — யுரமாகத்

தாட்டிகமாய்க்கொண்டுசரவணப்பொய்கைக்குளிதைப் போட்டுவிடுமென்னப்புகன்றார்கள் — கேட்டவனு

மக்கணமேவிந்துதன்னேயந்தச்சரவணப்பொய் கைக்குள்விட்டவர்தான் கருணையுடன் — மிக்கவிந்து

மாறுகுழந்தைகளாயக்கங்கையிற்பிறந்து மீறிவிளையாடும்வேளையிலே — கூறரிய

வீஸ்வரருமீஸ்வரியுமேகாந்தமாகமந்த
வாசமாமந்நதியில்வந்திடவே யீஸ்வரிபார்த்
திந்தநதியிற்குழந்தையேதென்றுடேவர்பிரா
னுந்தன்குழந்தையென்றுருண்மகிழ்ந்து விந்தையுட
றுறுதலையுஞ்சேர்த்தாவலுடனுசை
மீறியெடுத்துமடிமீதில்வைத்தே யாறிரண்டு
காலுமுருவுமிருகாலாக்கிச்சேர்த்தெடுத்து
வேலுமொன்றாய்மிக்ககரம்பன்னிரண்டாய்ச் சிலமுட
னுறுசிரசாய்த்தேவர்க்காறுதலையாமெனப்பே
ராறுமுகமென்றேயரனுரைக்க வீறு
முமையுந்திருமுலைப்பாலூட்டிக்கொடுபோஞ்
சமையத்திலங்கேதவஞ்செய் யமைநிகர்தோட்
சத்தரிஷிமாதரரன்றுட்டணிந்துதங்களுக்குப்
புத்திரியென்னவென்றுபுகன்றார்க ளத்தரும்பார்த்
திந்தக்குழந்தையைக்கேளென்னவவர்கேட்கச்
சிந்தைமகிழ்மதலைசெப்புமன்று முந்துலகிற்
கார்த்திகைநட்சத்ரங்கருதுவோர்தங்கள்வினை
மாற்றியவர்கேட்டவரங்கொடுப்பேன் கார்த்திகைநட
க்ஷேத்ரப்பதவியிலேசெல்லுவீரென்றுதுய
ராற்றிமடவாரையநுப்புவித்துச் சுத்திரங்கள்
செய்தசுவாகாடனக்குஞ்சேவித்தோர்தங்களுக்கு
மெய்யிலங்குபீடையொடுவிக்கினங்க ளெய்துகின்ற
போதிவையெல்லாந்தீர்ந்துபோகச்சுவாகாவென்
றேதவுடனேபயங்கொண்டோடுமே யாதலினு
வித்தப்பெருமையுமக்கென்றவர்சொல்லச்
சிந்தைமகிழ்ந்துசிவனுமையும் பித்தா

திடுக்கியிருகரத்தாலேந்தியுமையாள்பாற்
கொடுக்கவளர்ந்தகுமரேசா — மடுக்கரையில்
வண்டாடும்பூங்கமலமாதுவிளையாடிவளர்
குன்றாக்குடியிற்குமரேசா — சென்றன்று
வீறுமசுரர்குலம்வேரறுத்துச்சூரனுடல்
கூறாய்ப்பிளந்தகுமரேசா — தாரணியி
லற்றவர்க்குத்தாரகமாயண்டர்கணாட்டுக்குக்
கொற்றவனாய்வர்தகுமரேசா — வற்றசுட
ரம்பனையகண்ணாடெய்வானைகுறவள்ளியிரு
கொம்பனையர்க்கேற்றகுமரேசா — நம்புதலாய்த்
தேடுமடியார்தமதுசிந்தைதனிலேயிருந்து
கூடிவிளையாடுங்குமரேசா — தாடாண்மை
யன்றசுரர்நெஞ்சமதிர்கனகவேல்வாங்கிக்
குன்றுருவவெய்தகுமரேசா — மன்று
ஞாலத்தையறியாச்சமணர்நாலாயிரரைக்
கொலைக்கழுவிலிட்டகுமரேசா — பலத்தெழுந்து
லநிறச்சேவறன்னைநீத்தங்கையிற்பிடித்துக்
ாலமயிலேறுங்குமரேசா — சால
டிதீர்த்தமரர்தமைமிக்கதெய்வலோகங்
நடியேற்றிவைந்தகுமரேசா — படிபுகழுஞ்
ந்திரசேகரர்க்குந்தையல்சௌந்தரிக்கு
ந்தைகளிகூரவந்தசேயனே — யந்தமுயர்
ான்மருகாகங்கைமகனேவேண்மைத்துனனே
வன்முருகாயாவருக்குமெய்ப்பொருளே — கான்சே
ாராருமான்மகடனுடனுற்றதெய்வமங்கை
ருமாதருக்குமிறைவா — கருணைதரு

மும்மூர்த்திகடமக்குமூர்த்தியேநால்வேதச்
சிம்மாதனத்திருக்குந்தேவனே செம்மைமிகு
மஞ்சுமுகனுநவுமாறுமுகனேயெழு
மஞ்சுலவுமங்கைமலையோனே ரஞ்சிதமா
யெட்டானைக்கொம்பைநெஞ்சிலேற்றிரத்னப்பநதிகளைத
திட்டமுடனேயழுத்துஞ்சேவகத்திற் கெட்டியெனும்
பத்துமுடிராவணனைப்பட்டுருவவாளிதொட்ட
கத்திரிகையோன்மருகாகாவலனே டற்றுவினை
தன்னந்தனித்தவாக்குஞ்சாலப்பசித்தவாகரு
மன்னங்கொடுத்தாதரிப்பவனே பிரசிலைதிற்
கார்த்திகைநட்சத்ரயதருதுவோசஞ்சலத்தைத்
தீர்த்துப்பலன்பெருகச்செய்பவனே சாபரிப
சட்டிவிரதந்தனையநுட்டிப்போர்கடமை
மட்டில்லாப்பாக்கியத்தில்வைப்பவனே திட்டமுடன்
சோமவாரத்தைத்துதிப்போர்கடம்மனநி
னேமமதனைக்கொடுக்குநேயனே பூமிபுகழ்
வெள்ளிக்கிழமைவிரதமுற்றபத்தர்கட
முள்ளத்திலேயிருக்குமுத்தமனே நாள்தோறுந்
தந்திமுகம்படைத்துச்சப்பாணியாயிருக்கும்
தொந்திவயிற்றோனுக்குச்சோதரா சந்ததமுஞ்
சித்தசனுக்குந்திசைமுகனுக்குஞ்சிறந்த
மைத்துனனுவந்தமயில்வாகனு வெத்திசைக்கும்
வீறுதிருச்செந்தூர்மிக்கபரங்குன்றமுத
லாறுபடைவீட்டுக்கதிகாரா நீறணியு
மக்கினிக்கண்ணனைக்கலையம்பதியாமீசனருள்
கைக்கனிக்குச்சுற்றிவருங்காங்கேயா திக்கடவி

மானுக்கும்பூமிமடமானுக்குஞ்சீதையெனு
மானுக்குமிக்கமருகனென்றே மீனமதிக்

தேரடியினின்றிதெல்லாஞ்செப்பினேன்கேட்டுவெற்றிக்
கூரியவேற்கையார்குமரேசன் பார

விடும்பேசனைக்கூவியிப்பொழுதேசென்றங்
கடிவாரத்தேயொருவனுரோ திடமாகப்

பனணுதமிழ்நம்மேற்பகர்கின்றானிவனைத்தே
யன்னவனையிங்கேயழையெனவே சொன்னவுடனே

ருக்கிடும்பன்வந்தானைச்சண்முகவருத்தாரம்
வாக்குரைத்தானீயுமின்றுவாவெனவே பாக்யமெனச்

சென்றேனவர்பாற்சிகண்டிமலையாதிபனைக்
கண்டேன்மனதுகளிகூர்ந்தேன் கொண்டாடித்

தோத்திரங்கள்செய்தேன்சுகந்தங்கள்வீசுதிருக்
காத்திரத்தைக்கண்டேன்கருணையுடன் போற்றரிய

செந்தாமரைத்தடமுந்திவ்யகரம்பன்னிரண்டும்
சந்த்ரோதயம்போலச்சண்முகமும் விந்தைபெறுஞ்

சேவற்கொடியுஞ்சிறந்தமயில்வாகனமு
மவர்மனமெச்சுமுனைவேலும் தேவர்படை

யாறுவள்ளியம்மைமகிழவினிதிருக்குங்
கோதறுதேன்வாயான்குமரனையென் நீதறவே

கண்டேன்மனத்திற்கவலைவறுமையெல்லாம்
விண்டேனெனதுடலம்விம்மினேன் எண்டர்பணி

கந்தாகடம்பாகதிர்வேலாகங்கைபெற்ற
மைந்தாமயூரகிரிவாசா கந்தாக்

கருணைக்கடலேகனிந்துருகிப்பாடு
மருணகிரிநாதர்க்கருள்வோய் திருவிருக்கும்

பூங்கொடியாள்வள்ளிபுனத்துக்கொருநிழலாய்
வேங்கைமரமாகிநின்றவேலோனே பூங்கமலத்
தண்ணலைவன்சிறைக்குள்ளாக்கிவைத்தாய்சூரைவென்று
விண்ணவர்க்குமிக்கசிறைமீட்டவேந்தா யண்ணலுக்கு
நன்னயமாகச்செவியினற்பிரணவப்பொருளைச்
சொன்னவனேசூழுஞ்சுடரொளியே என்னையின்று
காப்பாற்றவேண்டுமென்றேன்கந்தர்திருவாய்மலர்ந்து
வாய்ப்பாயுரைத்ததமிழ்வாணனே தாப்பாயுன்
னூரையுமுன்றந்தையுயர்பேரையுமுன்றன்
பேரையுஞ்சொல்லென்றார்பிரியமுடன் சீர்பெறவே
விற்பனஞ்சேரருணைவீரபண்டாரத்தின்மகன்
சுப்பிரமண்யனென்றுசொன்னேனை ணப்போதி
லிந்தநகர்க்குன்னூரிரைங்காதங்கடந்து
வந்ததென்னவென்றுவழுத்தினார் சந்ததமும்
போகாவறுமைபுலிபோலவென்னுயிரும்
பாகாருந்தன்மைப்பசுபோல வேகமுறுய
துன்பக்கருடனுடன்றேயரவமென்னுயிரு
மின்பமனுவத்தனையுமில்லாமன் முன்புகண்ட
நச்சரவைப்பாய்ந்துநடனமிடுந்தோகைமயில்
பச்சோந்திக்கஞ்சும்பழைமையைப்போன் மெச்சுசெல்வ
மில்லாவறுமையினலில்லாளமுன்வாய்பேசச்
செல்லாமனெஞ்சந்தியங்கியே நல்லோர்கள்
கூடுசபைக்கேகமனங்கூடாமலேவிரைந்தே
யோடியொளித்தேனுறுகனல் வாடுவதால்
நாடுதொறுஞ்சென்றுநடந்தலுத்துப்பேர்கேட்டு
மூடர்களைட்பொல்லாதமூர்க்கர்களைப் பாடுதமிழ்க்

யோரைச்சார்ந்தோர்க்கிடுக்கண்செய்வோரைமிகத்
தீயாரைமாறுச்சினத்தோரைப் பேயான
சண்டாளரைப்புரட்டிச்சல்லியரையேழைமுகங்
கண்டிரங்காதுத்தக்கயவர்களைக் கொண்டாடி.
காமனென்றுஞ்சோமனென்றுங்காண்டிபனென்றும் பலத்தில்
வீமனென்றுமிக்கவிதுரனென்றும் பூமிபுகழ்
தென்னனென்றுமிக்கதிருமாலென்றுங்கொடைக்குக்
கன்னனென்றுஞ்செல்வக்கனகனென்று நன்னயஞ்சேர்
மேருவென்றுங்கொண்டலென்றும்வேண்டியதெல்லாங்கொடுக்குந்
தாருவென்றும்பாடிச்சலித்தலுத்துச் சீருயர்ந்த
மஞ்சரியமோர்பணமாய்வண்ணமுக்காற்பணமா
யஞ்சுபதம்பாடியரைப்பணமாய் மிஞ்சியகூத்
தாட்டுக்கிசைநாடகத்துறைக்கோர்பழைய
வேட்டியாய்ப்பத்துவிருத்தமுடன் சீட்டுக்
கவிக்கோவோர்நாள்வயிற்றுக்கஞ்சியாய்வெண்பா
செவிக்கினியமுத்தமிழுஞ்சேரப் புவிக்குளொரு
பாக்குக்கும்வெற்றிலைக்கும்பாவிகளைச்சொற்புகலச்
சாக்குக்கும்பாடிச்சலிப்பாகி நாக்குலர்ந்து
நரம்புண்ணாகியெழுத்தாணியுந்தேய்ந்து
பாமனமும்பரதவித்தே யேடெழுதிச்
சுண்டுவிரலுங்காய்த்துத் தொண்டைகம்மல்பாடியதாற்
கண்டதல்லாலோர்பலனுங் கண்டிலேன் வண்டரவர்
செப்புமுலைவேசையர்க்குந் தீக்குத்திருடருக்குந்
தப்புமுன்னே கட்டித்தலைக்கீழாய் மெய்ப்பூஞ்ச
லாட்டுவார்க்குஞ்சவுக்கோடைந்துமணிக்கயிற்றின்
மூட்டுவார்க்குங்கொடுப்பார்மூடரவர் பாட்டினர்க்குச்

செய்யாரினியிவர்பாற்செல்வதினிற்சாரமில்லை
யையாவெனைநீநன்காதரித்துத் — தொய்யாமற்

காவென்றேனப்பொழுது கந்தர்திருவாய்மலர்ந்து
வாவென்றென்றேவெசனிப்பார் — மேவியநீ

யெம்பாலுன்பாட்டை யியம்பினுய்வண்புலவா
வும்பாலெம்பாட்டையுரைக்கக்கேள் — ணம்பாவென்

றங்கையுமோர்பெண்ணைச் சடையில்வைத்தார்சடையி
லந்தமிலாவூமத்தையணிந்தார் — முங்க

விடுகாட்டெலும்பை யெடுத்தணிந்தாரன்றிக்
கடுவாயரவுகழுத்திட்டார் — றிட்டொடுநுங்

தொண்டர்தமையுண்டார்சூழ்ந்தகடனஞ்சையுண்டார்
கண்டிருந்தும்பிள்ளைக்கறியுண்டார் — கொண்டாடிச்

சீர்வேடனெச்சிலுண்டார்தின்றதெல்லாம்பற்றும
லீரேழுலகுமிரந்துண்டார் — பாரறியப்

பிட்டுக்குமண்சுமந்தார் பின்னேவிறகுவிற்றார்
மட்டுக்கடங்காவளையல்விற்றார் — திட்டமுடன்

வில்லடியும்பட்டார்விசையனங்கையாலொருவன்
கல்லடியும்பட்டம்புகண்ணினார் — நன்மதுரை

மாறன்பிரம்படியும்வாங்கினார்பாறனக்காய்
வீறிடையன்கையரிவாள்வெட்டுண்டார் — கூறரிய

சூலாயுதம்படைத்தார்தோல்வேடன்றன்செருப்புக்
காலாலுதைக்கக்களித்திருந்தார் — சீலமுடன்

மாடெடுக்கப்பெற்றார்மருட்கொண்டார்தில்லைதனி
லாடெடுத்தாரென்றுபெயராயினார் — தாடாண்மை

யும்பர்தொழுங்குற்றாலத்தானிலுயர்ந்திருக்குங்
கும்பமுனிகையாற்குறுகினார் — செம்பதும

வேதன்சிரமிலொன்றைவெட்டினார்மன்மதனைப்
பாதாதிகேசமெல்லாம்பார்த்தெரித்தார் — சூதாய்த்தேர்
வண்டிற்காலிற்சோமன்மைந்தனையும்போட்டரைத்தார்
சண்டனெனுமேமன்றனைவதைத்தார் — சென்றெதிராய்
முப்புரத்தைவென்றகதைமூவுலகிலுள்ளவர்கள்
செப்புகின்றார்கேட்டறகிரிப்பாமே — யிப்படியென்
றந்தைபிரபலங்கடாயார்வளப்பமதை
யுந்தனுக்குச்சற்றேயுரைக்கக்கேள் — பிந்தாம
லம்பலத்திலாடினா ளம்புவிக்குந்தாயானாள்
கம்பநதியிற்றவசுகைக்கொண்டாள் — கும்ப
முலைகளுமோன்றானாண்முனைப்புலித்தோல்போர்த்தான்
மலையரையனுக்குமகளானாள் — பலவலைமேற்
சாதியிற்சேர்ந்தாள்சத்திதானென்றாளம்மலைமேற்
றீதறவேவீற்றிருக்குந் தேவியக்த — போது
முருமாறியேகுறத்திக்கொப்பாகச்சென்று
கருமாறியேகைகொடுத்தாள் — பரிவாகச்
செல்லாயிரங்கோடிச்சீவர்க்கிருநாழி
நெல்லாற்படியளந்தநீலியென்பர் — சொல்லுலகெங்
றந்தைபட்டபாடனைத்துந்தாயார்க்குண்டேபுலவா
வென்றமையன்செய்தியியம்பக்கேண் — முந்தவனை
தந்தைக்குமுன்பிறந்தார்தந்திமுகமாயினார்
விந்தைப்பெருச்சாளிமேற்கொண்டார் — முக்த
மோதக்காலானார்வயிறுபெரிதானார்
மாதைகுளம்வீதிபலவிடங்கண் — மீதிருந்தே
பன்னையைப்போற்பெண்டேடியாயாசமாய்மனதி
லுன்னிமரத்தூறிலுட்கார்ந்தார் — பின்னையென்றன்

MAHAMAHOPADHYAYA
... SWAMINATHA IYER LIBRARY

மாமன்வரலாற்றைவுரூத்தக்கேளுந்திதனிற்
பூமனையும்பெற்றார்புவிபுரக்க நேமி

பதித்தார்துளசிதனையணிந்தார்பாம்பை
மிதித்தார்பாலாழிமேல்மெள்ளக் குதித்தோ

ராலிலையின்மேற்றுயின்றாவையுமேயோட்டிவருங்
கோலிலையும்பள்ளிகொண்டார்கூசாமற சால
மனையாளைநெஞ்சில்வைத்தார்மாமோகினியா
யேனையீன்றவரோடிணங்கிக் கனமாய்

அரியரபுத்ரனென்றேயாண்பிள்ளைபெற்றார்
தெரியாதபோகளுண்டோசெப்பும் பெரியதொரு

ஆடகனைக்கொன்றங்கவன்குடலைமாலையிட்டுக்
கூடிருக்கரத்தங்குடித்துவிட்டார கோடியெனு

மாய்ச்சிமுலைப்பாலையுண்டாராக லடங்காமற்
பேய்ச்சிமுலைப்பாலு மபிடித்துண்டா ராய்ச்சியர்கள்

பாடிதனிலுள்ளோர் ப'ற்பொங்கலிட்டதெல்லாங்
கூடியுண்டார்பாற்றயிருமகொள்ளையுண்டார் நாடரிய

மண்ணையுண்டார்பாடிமடவாரறியாமற்
கண்மருட்டியாட்டைக்களவாண்டார் வண்மை

குருந்தேறிக்கொண்டார்குதிரைகிடையாமற்
பருந்தேறிக்கொண்டார்பகட்டாய் வருந்தாமல்

காய்ச்சியபாற்றன்னைக்களவாண்டுதன்னுடைய
வாய்ச்சிகையாற்கட்டுண்டடியுண்டார் கூச்சமின்றி
யாடவராய்மிக்கபதினாறாயிரமாதர்க்
கூடியேமிக்ககளிகூர்ந்தார் மோடிசெய்து

மாமலையுங்கொன்றுவிட்டார்வஞ்சகமாயண்ணனையும்
பூமிபிரதக்கூணமாய்ப்போகவிட்டார் நேமி

பானுதனைமறைத்தார்பார்த்தனுக்குத்தேரோட்டிக்
கான லுரையைவரையுங்காத்திருந்தார் மேன்மையுடன்
சொல்லவொணுவஞ்சத்துரியோதனுதிகளைக்
கொல்லவகைவிவரங்கூறினார் சொல்லுவதென்
பாரினிலேபுரட்டுப்பண்ணியநிஷ்டூரமெல்லாம்
யாருமறிவார்களதுவல்லாமற் சீர்கிழவிக்
கூனுநிமிரக்குறித்தெய்தார்மாரீசன்
மானையெய்தார்தென்னிலங்கைவாழரக்கன் சானகியைக்
கொண்டேகமிக்கசிறைக்கோலமுறறபெண்ணைத்திச்
சென்றழைத்துக்கொண்டவகைதீராதே வண்டரன்று
ஓட்டிவருக்கொட்டாமனற்சிறுதாயார்வனத்தி
லோட்டிவிட்டார்கண்மூன்றுலகறியப் பூட்டகமா
வஞ்சகப்போராய்மறைந்துவாலியைக்கொன்றூர்காட்டிற்
ஞ்சமற்றபெண்பிள்ளையைச்சங்கரித்தா ரஞ்சிதமாய்க்
ல்லைப்பெண்ணுக்கிவிட்டகாலாந்திரன்செய்தி
சொல்லத்தொலையாதேசொற்புலவா நல்லதினி
யந்தனியற்செய்தியியம்பக்கேள்யாவருக்குந்
ந்தனென்றுபேரானேனென்கள்வனைப்போன் மூந்தமூந்தக்
காழிபிடித்தேன்குறத்திதனைமாலையிட்டேன்
பழையிற்ரனுக்குப்பினனேனே னீள்கூந்தல்
வேடிச்சிக்காய்வனத்தில்வேங்கைமரமாகிமயல்
பாடிக்கைமாதருக்குமாலானேன னூடறியத்
ந்தைக்குபதேசஞ்சாற்றினேனப்பனுக்கு
பீந்தைக்குருக்களென்றூர்மேதினியோர் தந்தைவெகுண்
டானுலும்பிள்ளையதிகப்ரசங்கியென்று
ணுக்கியேகடலில்விட்டுவிட்டார் ஞானிலத்திற்

றோபிறவியானேன் சிவிகைதனிலேறுவர்முன
கூர்மயின்மீதேறிக்கொண்டிருந்தேன் சாரமாய்
வெண்ணீறணிந்தேன் மிகுகடப்பந்தாரணிந்தேன்
கண்ணீரானேன் கருணையுடன் பண்ணுகவிக்
காம்புலவாகேட்டிலையோவாண்டிதனையடித்தாற்
சாம்பர்பறக்குமென்பார்தாரணியின் மாம்படழத்துக்
காகவேநான்கையைம்பதியைச்சுற்றுமுன்னே
தாகத்தாலென்றமையன்றந்தைதனை வேகமாய்ச்
சுற்றியடிபணிந்துகூறக்கனியதனைப்
பற்றிக்கொண்டார்நான்பதறியே மெத்த
வருகோபத்தாலேமாதாபிதாவைவிட்டுத
திருவாவினன்குடியிற்சென்றேன் டரிவாக
வன்னைவந்தாளென்னையழைத்தாளொருதரமே
யென்னபிள்ளாய்செய்தகுறையென்ன முன்னஞ்
சகிப்பாரிலையாதமையன் புசித்தாற்
பகைப்பாரோமாம்பழமோபாரந் தெகிட்டாய்
பழநியெனவேபகர்ந்தாளதனாற்
பழநியென்றும்பேரானேன்பண்பாய் விழவார்
மலைவாயலைவாயில்வாழ்க்கையுற்றேன்பினனுஞ்
சொலல்வேண்டுமென்றாற்சொலையா நிலையிருப்பு
வேலொழியவென்கையில்வேறுபொருளுண்டானுஞ்
சாலவுரைப்பாய்நான்றருகிறேன் ஞாலமிசை
பங்கமில்லைநாங்கள்பட்டபாடெல்லாமுனைவிடத்தில்
சங்கதியாய்ச்சொன்னேன்றமிழ்ப்புலவா வெங்கள்பிழைப்
பிப்படியெல்லாமிருக்கவென்பாலிலுன்றுயர
மெப்படிச்சொல்வாயென்றியம்பிறு றப்போ

துரன்மத்தளத்திடைப்போயுற்றதுயர்சொன்ன
வருமைக்கிணையென்றதிசயித்துக் கருணையுடன்

தாமரைசூழ்வாவிதனிற்போனவண்டுகெஞ்ச
மாமதுவைத்தானுமுண்ணுமற்போமோ கேமியினேன்

மாலுக்காகப்பயந்துவந்துதஞ்சமென்றுசொல்லச்
சீலகுக்ருச்சேத்திரன்றனக்காய் ஞாலமிசைத்

தாராருசீள்விசயன்முமோதரனுடனே
போராடிக்காத்ததுவும்பொய்யலவே சீர்முனியைக்

காக்கும்வகைக்கரனோர்காலன்றனையுதைத்து
மார்க்கண்டனைக்காத்தவாறுபோற் றீர்க்கமுட

னென்னையடர்கலிகளெல்லாந்தீர்த்துப்பவிஷு
தன்னைக்கொடுப்பாய்தயாபரா வன்னதெய்வம்

நீயேயெனக்கல்லானீடுகெதியில்லையென்றேன்
மாயோன்மருகன்மனமகிழ்ந்து நேயமுடன்

ஈன்மையதாமோதனக்குவந்தகார்யமதிற்
பின்னுக்குவாங்குவரோபேருலகி னான்னயமாய்

பிக்கசனமாய்த்தனதுவீட்டில்விருந்துவந்தாற்
பக்கத்திற்றள்ளுவதும்பண்பலவே யக்கதைபோ

லம்மாலமைத்தகவிநாவலாவுன்னைநான்
ஈம்மாவிடாமலொன்றுசொல்லக்கே ணம்மடியார்

பார்த்திவர்காவிரிப்பூம்பட்டினத்தின்முன்வைசியர்
கோத்திரத்தின்மிக்ககுபேரனைப்போல் வீற்றிருக்கு

மந்நாளிற்பாண்டிநகர்க்கானகுடிவேண்டுமென்று
தென்னுடன்றேசிகர்பாற்சென்றுரைத்து முன்னோன்

மெத்தவுபசாரம்வேண்டுவதெல்லாமுரைத்துச்
சித்தந்திரும்புதற்குச்செய்திசொல்லிச் சத்தியமாய்த்

திங்கள் கதிருள்ளமட்டுந்தேசிகரேயென்றாட்டி
லுங்கண்மரபிற்கொருக்காலும் பங்கம்
வரவொட்டேனென்றுவலதுகையைக்கொடுத்தே
யிரவியொளிரதத்திலேற்றிப் பரிவாய்
வளமையுடனழைக்கவந்தேனலமா
யிளைசைமாதைப்பதியிருந்தார் களிகூர்ந்தே
யஞ்செழுத்தையுட்செவிப்போரல்லும்பகலுமெனை
நெஞ்சில்விட்டுநீங்காதநிண்ணயத்தா ரஞ்சிதமாய்த்
திருமாற்கடிமைசெய்வோர்தெய்வமெல்லாமொன்றென்
றுரிமையுடன்போற்றிவளர்வுற்றோ ரிருநிதியம்
வேண்டிவருக்குதவிமிக்ககனத்தைப்பெற்றோர்
பாண்டிநாடாள்வோன்பதம்பணிவோர் நீண்டபுகழ்த்
தேசாதிபர்புகழுஞ்செய்யதிருப்புனவை
யாசானழகரடிபணிவோர் தேசமுட
னன்னைதந்தைதெய்வமுதலாசானைப்போற்றுதலாய்
மன்னவரைக்கூடவணங்காதார் முன்னுயர்ந்த
மேருகிரியுளைத்தும்வேழந்தனைநிறுத்தும்
பேருலகின்மிக்கானபேரானோர் யாரு
மதிசயிக்கக்காவேரியாறுதனைப்பஞ்சுப்
பொதியாலடைத்தபுகழாளர் மதியாற்
கடலிலெறிந்தபொன்னைக்காசினியோர்தாமெச்
சிடவழைத்தவேலேலசிங்க நெடுங்கிணற்றில்
வீம்புக்குத்தன்வீட்டில்வெள்ளாட்டிபாற்சவடி
தாம்பிட்டுநீரிறைத்ததாஷ்டியர்க டேம்பவே
கல்யாணவாயிலிலேகாவணக்காலுக்குயர்ந்த
நல்பவளக்காலதனைநாட்டினோர் வல்லிரவில்

மற்கதவுவெள்ளிதனைவாங்கிவிடவக்கணமே
பொற்கதவுநாட்டிப்புகழ்படைத்தோ ரிப்புவியில்

சீரகப்பூந்தாரணிந்தோர்சிங்கக்கொடிபடைத்தோர்
காரிகையாச்செம்பொன்கவிக்கீவோர் டார்புகழுங்

கத்தனிளைசைக்கைலாயநாதனையும்
நித்தியகல்யாணியையுநெஞ்சில்வைப்போர் நந்தினை

யாட்கொண்டநாதருடனுஞ்சிவபுரத்தேவி
தாட்கமலம்போற்றிவளர்தாட்டிகர்கள் வேட்காம்

வடிவாருப்பேட்டைவளரொளியோர்மிக்க
வடிவுடையாளைப்பணியுமாண்பார் படிபுகழுக்

தெள்ளுதமிழ்சேர்திருவேளூர்க்கற்பகமாம்
பிள்ளையாரைப்பணியும்பேராள ரள்ளிநிதி

செய்யுநியமச்செயங்கொண்டசோளீசா
தையல்சௌந்தரியைத்தாள்பணிவோர் வையமகிழ்

பூவுடையவூரிற்புகழ்தேசிகரடியோர்
பாவுடையமாதினடிபணிவோர் தேவர்புகழ்

வேவினமரின்மிகுந்தகண்டீசரொடு
சாலவுங்காமாட்சியிருதாள்பணிவோர் மேலிப்பை

தான்றோன்றியீசரையுஞ்சங்கரியையும்போற்று
மான்மதஞ்சேருந்துளவமார்மார்பர் தேன்சிறந்த

மாதைப்பதியில்வளருமைஞ்ஞூற்றீசர்மகிழ்
காதல்பெரியவளைக்கைதொழுவோர் சாதகமாய்

ராசசிங்கம்வாழ்பூமிநாதர்சிவகாமியையும்
நேசமுடன்போற்றிநிறைக்கிருப்போர் வாசனையாய்

நானிலத்தோர்கொண்டாட நம்மிடத்தின்மிக்கவன்ன
தானமடங்கட்டிவைத்ததாளாளர் மேன்மை

திருவாவினன்குடியிற்சென்றெதிர்ந்தபேர்க்குத்
தருவாய்க்கொடுக்குமன்னதான ரிருவிதிய

நாடறியப்பூவுலகிஞன்முந்திரிதேடிக்
கோடியளிக்குங்கொடையாளர் தேடிநிதி

மாயேஸ்வரர்பூசைமாறுதரிபூசை
சேயார்மும்மூர்த்திபிரதிஷ்டை மாயார்

ஊருணிகள்கூபமிவையுண்டுபண்ணிமிக்கதர்மத்
தாரணியிற்செய்திட்டசற்புருஷர் வாரத்

சிகரத்திலேற்றிவைத்ததீபம்போலேழு
நகரத்தார்யாருநமதடியார் மிகவவர்கள்

வீரருனைக்காக்கவேண்டித்திருமுகமுந்
தாரேனவரிடத்திற்றுஞ்சென்று பூரணமாய்

கனகவணிகேசரிருகையிற்றிருமுகத்தை
மனமகிழவீவாய்வணிகேச ரனைவர்களுங்

குன்றக்குடியிற்குமரர்திருமுகத்தைக்
கண்டவுடனேகளிகூர்ந்து கொண்டாடி

யுன்னையடர்கலிகளோடக்கனகநிதி
தன்னைக்கொடுத்தாதரிப்பார்க ளிங்கேரஞ்

செல்லுவாயென்றுதிருமுகந்தந்தென்னை
யல்லறவிரவனுப்பினர் நல்லதென்றே

யிங்கிதமாய்மெய்கூர்ந்தினிதாய்நடந்துகொற்ற
மங்கலத்திற்சென்றேன்வணிகேசர் சங்கதியாய்க்

கூடியுலகாயிகோயிலுக்குநேர்வடக்காய்
நாடிவிடுதிக்குளைன்னயமாய் நீடிவளர்

ாவுக்குமேற்காய்வணிகேசரெல்லாருமை
ரவணைத்துக்குள்ளிருந்தார் கண்டேனன் பூவைந்த

இந்திரனைப்போலிருந்தவேழுநகராதிபர்க்குக
ந்தர்திருமுகங்கையிற்கொடுத்தே னந்தமுடன்

ித்தாரக்கைவாங்கிவேலர்திருமுகத்தைத
வைத்தார்சிரசில்வணிகேச ருந்தகான

ன்றுக்குடியிற்கு மரர்பாலென் றுயமை
ண்டதுவுமென்னிடத்தில்வேலவரும் பண்பாய்ச்

ிப்பையுரைத்ததுவுஞ்சாகரந்தான்சுட்டாற்
லக்கச்சலமுண்டோகந்தா கலத்துடனே

யன்கவலைதீரவகைசொன்னவென் றுகேட்டதுவும
பண்மைக்குபேரவணிகருக்கா யன்பாந்

திருமுகத்தைத்தந்ததுவுஞ்செட்டிமினைப்போ
ருவுதிதிமிக்கவணிகேச சொரூமையுடன்

ந்ததிருமுகத்தைவாசித்தாரப்போது
ந்தைமகிழ்ந்தேயஞ்சல்செப்பினார் கந்தமலா

வேணுகிதியீந்தார்பீக்கவஸ்திரங்கொடுத்தார்
பூணுமெனத்தங்கநகைபூட்டினார் ருணுறவா

புண்டிருக்கநெற்கொடுத்தாருரும்பலவாகக்
ண்டிருக்கமெத்தக்கனஞ்செய்தார் கொண்டாடித்

ட்டமுடனேவணிகர்செய்யுங்கல்யாணமதிற்
டனையாயோர்பணமுங்கண்டெழுதிச் சட்டமுடன்

சாதனமுர்தந்தார்சஞ்சலமெல்லாந்தீர்த்தார்
போதனவாறுகவென்னைவாழ்வித்தா நாதனிறைற்
றங்கமலையான்வாழி தூய்யதமிழோர்வாழி
யெங்கும்படியாளிறைவாழி மங்களமாய்
வாழுங்குமரேசர்மகராசர்தெனணினைசை
யேழுங்கரார்வாழியே.

## திருமுகவிலாசம்

## முற்றிற்று.

---

சுப்பிரமணியர் புலவருக்குத் திருமுகம் தந்தாற்போற் பாடியதால் திருமுகவிலாசம் எனக்காரணப்பெயராயிற்று.

---

| | | ரூ அ. பை. |
|---|---|---|
| செயங்கொண்டார்சதகம். திருமுகவிலாசம். | } | 0—2—6 |

இப்புத்தகம் வேண்டியவர்கள் அடியில் கையெழுத்து வைத்தவர் பேருக்கு எழுதி தருவித்துக் கொள்ளலாம்.

சி அ இரத்நசபாபதிமுதலியார்,
நெ. க - குமரபடமுதலி தெரு சென்னை.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-60